ஆண்டு 1 ] இதழ் 1

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# காஷ்மீர அற்புதம்

பண்டித ஜவாஹர்லால் நேரு

நாங்கள் ஸ்ரீநகரைச் சமீபித்தோம். எங்கே பார்த்தாலும் ஜனங்கள் எங்களை அன்போடு வரவேற்றார்கள். எங்கே பார்த்தாலும் நேசம் கனிந்த முகங்கள் தென்பட்டன. ராஜ வைபவமான ஒரு சிறு கப்பலில் நாங்கள் நதியிலே எதிர்நோக்கிப் பிரயாணம் செய்தோம். பற்பல படகுகள் எங்களைப் பின்பற்றி வந்தன. நதியின் துறைகளெங்கும் படிகளில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் நின்றுகொண்டு சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். ஜனங்கள் இப்படி என்மீது சொரிந்த அன்பினால், நான் மனமுருகிவிட்டேன். அதற்கு முன் ஒருபோதும் இப்படி நான் மனமுருகியதில்லை. ஸ்ரீநகரின் அற்புதக் காட்சியை நான் கடந்து செல்கையில், என் உள்ளத்திலே பொங்கியெழுந்த உணர்ச்சிகளால், நான் ஊமையானேன். பின்னே ஹரிபர்வதம் நின்றது; முன்னே வெகு தூரத்தில் தக்தே ஸுலைமான் என்ற சங்கராசார்ய பர்வதம் மங்கலாய்க் காட்சியளித்தது.

அந்த அற்புத பூமி இன்று ரத்தக் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறது. எல்லைப்புறப் பட்டாணியர் அங்கே கோர நாசம் புரிகிறார்கள். ஆனால், இயற்கையின் மோகன எழில் நிறைந்த அந்தக் காஷ்மீரமே, ஜவாஹரின் மூதாதையர் வந்த நாடு. அதைப் பல வருஷங்களுக்குமுன் நேரிலே கண்ட காட்சியை வர்ணிக்கிறார் நம் இணையற்ற தலைவர்.

காஷ்மீரத்தில் நான் பன்னிரண்டு தினங்கள் கழித்தேன். இந்தக் குறுகிய காலத்துக்குள், அமரநாத் பள்ளத்தாக்கில் நாங்கள் கொஞ்ச தூரம் சென்றோம். விட்டார் பள்ளத்தாக்கிலும் கொலஹாய் பனிக்குன்று வரையிலும் சென்றோம். மார்த்தாண்ட நகரிலுள்ள புராதன ஆலயத்தைத் தரிசித்தோம். விரஜ விஹாரம் சோயிலிலே நானூறு வருஷங்களாய் வளர்ந்து பரந்து மனித சரித்திரத்தின் சாட்சிகளாய் நிற்கும் சினார் மரங்களுக்கடியிலே உட்கார்ந்தோம். மொகலாயர்களின் தோட்டங்களிலே உலவி, மணம் மிகுந்த அவர்களின் சென்ற கால ஞாபகத்திலே சிறிது நேரத்தைக் கழித்தோம். சாஸ்மிஷாஹி என்ற ஏரியின் ஆனந்தமான நீரை அள்ளிப் பருகினோம். டால் ஏரியிலே நீந்தி

காப்பிரைட்: யூனிடி ஆப் இந்தியா (ஆங்கிலப் புத்தகம்).

ேனும். காஷ்மீரக் கம்மியரின் கலைச் சுவை மிக்க நேர்த்தியான வேலைப்பாடுகளைக் கண்டு களித்தோம். பற்பல பொதுக் கூட்டங்களுக்குச் சென்றேம். பிரசங்கங்கள் புரிந்தோம். பலதிறப்பட்ட மனிதர்களைச் சந்தித்தோம்.

கை மேல் கொண்ட வேலையிலே மனத்தை ஈடுபடுத்தத்தான் நான் முயன்றேன். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றேன். என்றாலும், என் மனம் பெரிதும் வேறொன்றிலேயே லயித்திருந்தது. வேறொரு காரியத்திலே ஆழ்ந்த மனத்தவனைப் போலவே - வெளியிட்டுச் சொல்ல முடியாத ஒரு ரகஸ்ய காரியத்திலே ஈடுபட்டவனைப் போலவே - நான் என் வேலைத்திட்டங்களை நிறைவேற்றினேன்; பொது மேடைகளில் நடித்துக்கொண் டிருந்தேன். காஷ்மீர பூமியின் அழகு என்னைப் பரவசப்படுத்தியது; என்மீது ஒரு மோகன மந்திரத்தை வீசிவிட்டது. சௌந்தரிய மதுவைப் பருகி வெறி பிடித்த ஒரு பித்தனைப் போலவே நான் அலைந்து திரிந்தேன்; அந்த லாகிரி என் மனத்திலே நிறைந்திருந்தது.

நதியும் மலைச்சரிவும் ஏரியும் கம்பீரமான மரங்களும் நிறைந்து, பெண்மை அழகெல்லாம் பொலிந்திருந்தது காஷ்மீரம். அது மகோன்னதமாய், மனிதர்களுக் கெட்டாத பேரழகு வாய்ந்த தொரு பெண்ணைப் போலிருந்தது. காஷ்மீரத்தின் மந்திர சக்தி வாய்ந்த இந்த அழகிலே, ஆண்மைக்குரிய மற்றேர் அம்சமும் கலந்திருந்தது. கடினமான மலைகளும் பாறை வெடிப்புகளும் பனிசூழ்ந்த சிகரங்களும் பனிப்பாறைகளும் மூர்க்கமாய்ப் பள்ளத்தாக்கிலே பாய்ந்தோடிவரும் நீர்வீழ்ச்சிகளும் காட்சியளித்தன. இந்தப் பூமிக்கு ஆயிரம் முகங்கள் இருந்தன; எண்ணற்ற அம்சங்கள் அமைந்திருந்தன. அவை சதா மாறிக்கொண் டிருந்தன; சிலசமயம் புன்முறுவல் காட்டின; சிலசமயம் சோகம் தோய்ந்திருந்தன; மற்றும் சிலசமயம் பரம துக்கம் படிந்திருந்தன.

டால் ஏரியினின்றும் பளிங்கு முகமூடி போலப் பனி படர்ந்து, பின்னால் உள்ள வஸ்துக்களின் மங்கல் உருவங்களைக் காட்டி நிற்கும். மேகங்கள் எழுந்து மலைச் சிகரங்களைக் கட்டித் தழுவும்; அல்லது விளையாட வரும் குழந்தைகளைப் போல் கள்ளத்தனமாய்க் கீழே ஊர்ந்து வரும்.

எந்நேரமும் மாறிய வண்ணமேயிருக்கும் இந்த அற்புதக் காட்சியை நான் பார்த்துக்கொண்டேயிருந்தேன். சிலசமயம் அந்தச் சௌந்தரியம் என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது; நான் மூர்ச்சை போட்டுவிடுவேன் போலிருந்தது. அதை நான் உற்றுப் பார்க்கப் பார்க்க, அது ஏதோ நம் உள்ளத்திலே நிறைந்து ஒரு நாளும் நிறைவேறாத நம்பிக்கைகளையும் ஆசைகளையும் போல் உண்மையற்ற ஒரு கனவாய்த் தோன்றியது; கனவிலே கண்டு விழிப்பிலே மறைந்த ஒரு காதலியின் முகம் போலுமிருந்தது.

வேதத்தில் அன்னதேவதையின் வாக்காக உள்ள இந்தப் பொன்மொழிகளைப் படியுங்கள் :

# அன்னதேவதை பேசுகிறாள்

பிரமனின் படைப்பில் முதலில் பிறந்தவள் நான். யாகங்களைப் படைத்தவளும் நானே. அன்னம் இல்லாவிட்டால், யாகம் ஏது? அமரருக்கு அமுதம் அளித்தவள் நான். அனைவருக்கும் பொதுவாய் இருப்பவள் நான். என்னைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுப்பவர் எவரோ அவருக்கு நான் அடிமை. மற்றவரோ எனக்கு அடிமை. அவர்கள் என்னை உட்கொள்வதாய் நினைப்பார்கள். உண்மையில் நானே அவர்களை உட்கொள்ளுகிறேன்.

என்னை அக்கினிக்கு இட்டுப் பின்பு புஜிப்போரை நான் காப்பேன். மற்றவரை நான் எரிப்பேன். என்னைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுப்போரிடம் நான் குறைவற்றிருப்பேன். மிருகத்தை நிகர்த்த மற்றவரை விழுங்க, என் கொடிய வாய் தெற்றுப் பற்களுடன் திறந்திருக்கிறது.

என் பேருருவம் பரலோகத்திலே நிலைபெற்றிருக்கிறது. தேவர்களும் பிதுருக்களும் அங்கே என்னைக் காத்துப் பூஜிக்கிறார்கள். இந்த உலகத்தோர் உண்பதும் அழிப்பதும் பெருமைக்காக வாரி இறைப்பதுமெல்லாம் என் உருவ அளவில் நூற்றில் ஒரு பகுதியேயாகும்.

உயர்ந்த ஜாதிப் பசு ஒரே தடவையில் இரண்டு பாத்திரங்கள் நிறையப் பால் கறக்கும். இந்த உலகில் என்னை முறைப்படி சிறிதளவேனும் பிறருக்கு வழங்குபவன், இகத்தையும் பரத்தையும் அன்னத்தால் நிரப்புகிறான். அவன் அன்னத்தை வீணடிப்பதில்லை. அவனுக்கு அன்னம் எங்கெங்கும் குறைவற்றிருக்கும். அன்னத்தை அவன் அதிகமாக உட்கொண்டாலும் அது அவனுக்குக் கேடு செய்வதில்லை.

பெரியோர் என்னைப் பிராணன் என்று புகழ்வர். அபானன் என்றும் சில சமயம் சொல்லுவர். மக்களைக் கொல்லும் நோய் நான்; அவர்களைப் பிழைப்பூட்டும் மருந்தும் நானே. முதுமைக்குக் காரணம் நான்; மக்களுக்கு ஊக்கமூட்டும் இளமையைக் கொடுப்பவளும் நானே.

பிறருக்கு வழங்காமல் உண்ணும் உணவு வீண். உண்மையைச் சொல்லுகிறேன்: அந்த அன்னம் உண்பவனுக்கு நஞ்சாகும். தன்னிடம் உள்ள அன்னத்தால், அவன் அமரர்களைப் போஷிக்கவில்லை; அன்பர்களையும் வளர்க்கவில்லை. அந்த அன்னத்தால், அவனுடல் பாவமயமாய்ச் சமைந்துவிடுகிறது.

நான் மேகமாயிருந்து மழை பெய்கிறேன். என் அருளால் கதிரவனும் துலங்குகிறான். என்னைப் பிறருக்குப் பங்கிட்டுக் கொடுப்போருக்கு நான் அமுதம்; மற்றவருக்கு யமன்.

[யஜுர்வேதம்; 2-ஆவது அஷ்டகம்: 8-ஆவது பிரச்னம்.]

# விஞ்ஞான



**மிகப் பெரிய அணுக்குண்டு :** அது சூரியன்தான். ஆனால், யுரேனியத்தை விட மலிவான உலோக அணுக்களைச் சூரியன் உபயோகிக்கிறது. செடி கொடிகள் தங்கள் பசுமைப் பொருளால் சூரிய சக்தியைக் கவர்ந்து, அபூர்வமான ரசாயன முறையில் அதைத் தங்கள் வளர்ச்சிக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுகின்றன. இந்த ரகஸ்யத்தைக் கண்டுபிடிக்க, காக்கஸில் ருஷிய விஞ்ஞானிகள் முயன்று ஆராய்ச்சி செய்துவருகிறார்கள்.



**குப்பையிலிருந்து பெட்ரோல்:** யுத்த காலத்தில் ஸ்வீடன் நாடு பெட்ரோல் போதாமல் தவித்தது. காட்டுமரங்களை வெட்டி, அவற்றிலிருந்து ஒரு வகை லாகிரித் திரவத்தைத் தயாரித்தது. அதையே பெட்ரோலாக மோட்டார்களுக்கெல்லாம் உபயோகித்தது. இதே மாதிரி சகல குப்பைகளிலிருந்தும் பெட்ரோல் தயாரிக்க முடியுமாம்.



**புதிய புதிய உணவுப் பயிர்கள் சிருஷ்டி :** ஒட்டுமாம்பழம் பார்த்திருக்கிறோம். ஒட்டு உருளைக்கிழங்குகளையும் ஒட்டுக் கோதுமைகளையும் இம்மாதிரியே சிருஷ்டிக்கலாமாம். சர்க்கரை செய்யக் கரும்பும் கிழங்கும் தேவையில்லையாம். அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரத்திலிருந்து எடுப்பதுபோல் ரசாயன ஆராய்ச்சிக் கூடத்திலே ரசாயன முறைகளைக் கொண்டு, சர்க்கரை தயாரித்துக் குவித்துவிடலாமாம்.

# அதிசயம்



**பூமியின் சீதோஷ்ணத்தையே மாற்றலாம்:** அணுவின் சக்தியைக் கொண்டு இமயத்தின் பனிப் பாறைகளைப் பிளந்து, ராஜபுதனப் பாலைவனத்திலே அந்த நீரைப் பாய்ச்சி, அங்கே நெல்லும் வாழையும் பயிரிட்டு, அந்தப் பிரதேசத்தைப் பெரிய பசுஞ்சோலை யாக்கி விடமுடியுமாம்.



* *

**பத்து லட்சம் விதங்களாய் மாறும் பூட்டு:** இந்த விசித்திரப் பூட்டை, லண்டன் ஸ்காட்லந்து யார்டு ரகஸ்யப் போலீஸ்காரர்கள் செய்து முடித்திருக்கிறார்கள். இதன் சாவியில் முன்னும் பின்னும் நகர்த்தக்கூடிய ஆறு பற்கள் இருக்கின்றன. அவற்றைப் பத்து லட்சம் தினுசாக மாற்றிவைக்கலாம். சாவியை நம் இஷ்டப்படி ஒரு நிலையில் மாற்றி, பூட்டைப் பூட்டிவிட்டோமானால், மீண்டும் அந்தநிலையில் சாவியை மாற்றித் திறந்தால்தான், பூட்டுத் திறக்கும்.




* *

**இரண்டு வாசல் எலிப்பொறி:** ஒரே பக்கத்தில் சாயும் எலிப்பொறியில், சில சாமர்த்தியமான எலிகள் விழாமல் தப்பித்துக் கொண்டு போய்விடுகின்றன. இந்தச் சாமர்த்தியமான எலிகளும் தப்பித்துக் கொள்ளாதபடி இந்த இரண்டு ஸ்பிரிங் எலிப்பொறி அமெரிக்காவில் தயாராகியிருக்கிறது. திருட்டு எலி எந்தப் பக்கத்தில் வருகிறதோ அந்தப் பக்கத்தில் இதன் கம்பி சாய்ந்து கௌவிவிடும்.



உதயகாலத்தை அழகிய பெண்ணுருவாய்க் கற்பனை செய்தனர் ஆதிநாகரிகத்தின் உதயத்தைக் கண்ட ரிஷிகள்.

# உஷா

**சிவமங்கலசிம்மன்**

முதல் முதலாக நாகரிகத்தின் உதயத்தைப் பாடிய கவிஞர்கள் ரிக்வேத காலத்து ரிஷிகள். அவர்கள் ஒளியை வழிபட்டவர்கள். மனத்தை வென்றவர்கள். இயற்கையினிடத்தே அளவற்ற அன்பு கொண்டவர்கள். வைகறைத்தேவியான உஷைக்கு உருக் கொடுப்பதிலே அவர்கள் தங்கள் கற்பனைத் திறன் முழுவதையும் அள்ளிக் கொட்டியிருக்கிறார்கள். உன்னதமான காவியச்சுவையும் கலைச் சுவையும் நிரம்பிய இத்தகைய சித்திரம் பிற்காலத்து இலக்கியத்திலே தேடியும் கிடைப்பதில்லை. வைகறையில் துயிலெழுந்து நாள்தோறும் உஷையையும் சூரியனையும் பலவிதமாகத் துதித்து, அவர்களின் நிற எழில்களிலே தங்கள் உணர்ச்சிகளைப் பறி கொடுப்பது அந்த மகரிஷிகளுக்கு இயல்பாக இருந்தது.

உஷை ஒளிகளுக்குள்ளே சிறந்தவள். எல்லோருக்கும் முன்னால் இவள் எழுகிறாள். நாம் கூப்பிடு முன்பே, மேலுலகிலிருந்து அடிக்கடி வருகிறாள். தன் சுடரொளியோடு, நாள்தோறும் ஒவ்வொரு வீட்டுக்கும் வருகிறாள். ஒவ்வொருவரின் உள்ளத்திலுமுள்ள இருளைப் போக்குகிறாள்.

பெண்ணைத் தொடரும் ஆண்மகனைப்போல, இந்த ஒளிமயமான உஷாதேவியின் பின்னால் கதிரவன் ஓடிவருகிறான். இவள் முன்காலத்திலும் தினமும் உதித்துவந்தாள்; இன்றும் இந்தச் செல்வமகள் இவ்வுலகின் இருளை நீக்குகிறாள்; இனியும் நாள் தவறாமல் உதிப்பாள். இவளுக்கு முதுமை இல்லை, சாவு இல்லை. தனது ஒளியோடு இவள் உலவுகிறாள்.

மானிடர்களே, எழுங்கள்! நம் உடலை இயக்கும் உயிர் வந்துவிட்டது. இருள் போயிற்று. ஒளி வந்தது. சூரியன் செல்வதற்கு வழியை உண்டாக்கிவிட்டாள் உஷா.

இவள் மாறாத இளமை வாய்ந்தவள். பழமைக்கும் பழமையானவளாயினும், ஒரே உருவும் நிறமும் ஒளியும் கொண்டு, இவள் அடிக்கடி பிறக்கிறாள். பறவைகளின் சிறகை மாற்றி மாற்றி வெட்டும் வேடச்சியைப்போல, இவளும் மனிதனின் ஆயுளை ஒவ்வொரு நாளாகக் குறைத்துக்கொண்டே வருகிறாள்.

வெள்ளைக் கலையுடுத்து நித்திய யௌவனத்தோடு விளங்கும் இந்த ஆகாயமங்கை, உலகத்துச் செல்வங்களுக்கெல்லாம் தலைவி. தொல் பெருங் காலத்திலே இவளுடைய ஒளி திகழ்வதைக் கண்டவர்கள்

காப்பிரைட்: ஹம்ஸ் (ஹிந்தி - செப்டம்பர் '47), பெனாரஸ் கண்டோன்மெண்ட்.

போய்விட்டனர். நாம் உஷையைப் பார்க்கிறோம். இனி இவளைக் காணப்போகிறவர்கள் வந்துகொண்டிருக்கின்றனர். இவளுடைய எழில் என்றும் இப்படியே இருக்கும்; நாம் மட்டுமே இதைப் பார்க்க இயலாதவர்களாவோம்.

ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்திலே செயல்களைத் தொடங்கி, யாவரையும் காக்கும் இல்லக்கிழத்தி இவள். அசையாப் பொருள்களின் ஆயுளை இவள் மெல்ல மெல்லக் குறைக்கிறாள். காலுள்ள பிராணிகளை நடக்கச் செய்கிறாள்; பறவைகளைப் பறக்கச் செய்கிறாள். எல்லா உயிர்களின் விருப்பமும் வாழ்க்கையும் இவளுடைய செயலைப் பொறுத்தவை. ஏனெனில் இருளைப் போக்கும் திறன் இவளுக்கே உண்டு. பரந்த அழகிய ரதத்திலே ஊர்ந்துவந்து இந்தக் கண்ணழகி நம் முறையீடுகளைக் கேட்கிறாள்.

ஆகாயத்தின் இரு கதவுகளையும் திறந்து, எல்லாத் தேவர்களையும் சோமபானத்துக்கு அழைக்கும் தேவமாதா இவள். வீட்டிலுள்ள யாவரையும் எழுப்பும் இல்லக்கிழத்திபோல இவள் மாந்தரை எழுப்புகிறாள்.

கதிரவனிடமிருந்து இரவு உதயமாவதுபோல, இரவும் உஷையின் பிறப்புக்காகத் தன்னை நிலைக்களமாக்கிக் கொள்கிறது.

இப்பொழுது உள்ள உஷா முன்பிருந்த உஷைகளைத் தொடருகிறாள்; இனி வரப்போகும் உஷைகள் ஒளிவாய்ந்த இவளைத் தொடருவார்கள். இவளுடைய ரதங்களிலே சிலவற்றில் இரண்டு குதிரைகளும், சிலவற்றில் ஏழு குதிரைகளும், சிலவற்றில் இரண்டு எருதுகளும் பூட்டியிருக்கின்றன. சிலரைப் பணத்துக்காகவும், சிலரை உணவுக்காகவும், சிலரைப் பெருவேள்விக்காகவும், மற்றும் சிலரைத் தன் எண்ணம் நிறைவேறுவதற்காகவும் இவள் தூண்டி எழுப்புகிறாள். பலவிதப் பிழைப்புகளைக் காட்டுவதற்காக இவள் உலகுக்கு ஒளி தருகிறாள்.

தாய் சிங்காரித்துவிட்ட கன்னிகையைப் போன்ற எழிலுருவோடு இவள் நமக்குக் காட்சி அளிக்கிறாள். இவள் நமக்கு நன்மையை விளைவிப்பவள்.

கறக்கும் பசுவைப் போல, நடனமங்கை தன் மார்பின் ஒரு பகுதியைத் திறந்து காட்டுகிறாளே; அப்படியே உஷையும் தன் உருவை நமக்கு வெளியிடுகிறாள்.

இப்பொழுதுதான் ஸ்நானம் செய்துவந்து, அழகிய அணிகள் பூண்ட யுவதியைப்போல, உஷையும் கிழக்குத் திசையிலே நம் முன்னால் உதிக்கிறாள். குமரியைப் போலத் தன்னை அலங்கரித்துக் கொண்ட இவள் தன் இளமையொளியோடு காதலனாகிய கதிரோனிடம் செல்கிறாள். அழகிய உடைகளணிந்து, காதலனை மயக்கப் புன்னகை புரியும் காதலியைப் போல, இவளும் தன் ஒளியைப் பரப்புகிறாள். இவள் உலக அன்னை, உலகைக் காப்பவள், அழியாத இளமையும் மங்காத அழகும் வாய்ந்த எழிற்காதலி.





# சினிமா முதலாளிகள் சக்தி

டுங்கி

வாழ்க்கையிலே பற்பல விஷயங்களையும் சினிமா முதலாளிகள் எவ்வளவு நேரம் தாங்கித் தாக்குப்பிடிக்க முடியும் என்ற ஜாபிதா இதோ இருக்கிறது. சினிமா முதலாளிகளுடன் பத்து வருஷங்கள் பழகியதிலிருந்து கண்டுகொண்ட விவரம் இது:

ஒரு சினிமா முதலாளி,

| | | |
|---|---|---|
| 36 மணி நேரம் | .. | தண்ணீர் குடியாமல் இருப்பார் |
| 3 மணி நேரம் | .. | விஸ்கி குடியாமல் இருப்பார் |
| 3 நிமிஷ நேரம் | .. | பிறர் படங்களின் புகழைக் கேட்பார் |
| 365 நாள் | .. .. | தன் படங்களின் புகழைக் கேட்பார் |
| 10 மணி நேரம் | .. | ஒரு செக்கைப் பார்த்துக்கொண்டிருப்பார் |
| 2 நிமிஷ நேரம் | .. | ஒரு பில்லைப் பார்த்துக்கொண்டிருப்பார் |
| 1 மணி நேரம் | .. | மனைவியுடன் பேசுவார் |
| 6 வருஷகாலம் | .. | நட்சத்திர சுந்தரியுடன் பேசிக்கொண்டிருப்பார் |
| 1 நிமிஷத்தில் | .. | ஒரு செக்கை வாங்கிக்கொள்வார் |
| 30 நாளில் | .. | ஒரு செக் எழுதிக் கொடுப்பார் |
| 48 மணி நேரம் | .. | ஒரு புதிய (பெண்) முகத்துக்குப் பேட்டி கொடுப்பார் |
| $4\frac{1}{2}$ நிமிஷ நேரம் | .. | ஒரு புதிய (ஆண்) முகத்துக்குப் பேட்டி கொடுப்பார் |
| $\frac{1}{2}$ நிமிஷ நேரம் | .. | ஒரு பில் கலெக்டருக்குப் பேட்டி கொடுப்பார் |
| 120 மணி நேரம் | .. | மனைவி இல்லாமல் வாழ்வார் |
| 12 மணி நேரம் | .. | ஆசைநாயகி இல்லாமல் வாழ்வார் |

காப்பிரைட்: ஸவுண்ட் (ஆங்கிலம் - நவம்பர் '47) ஸர் பி. எம். ரோட், பம்பாய்.






# பெண்ணே - உன் அழகு!

சந்நியாசி வித்யானந்தர்

* * * * * * * * * * * * * * * * * * * * * *
* உலக யுத்தம் ஏன் வந்தது? பெண்கள் சிங்காரித்துக் கொண்ட சிங்காரிப்பினால் தான என்கிறார் இந்தக் கட்டுரையாளர்! *
* * * * * * * * * * * * * * * * * * * * * *

பஞ்சாபிலிருந்து வெளியேறிய அகதிகளின் தீனக்குரல் என்னை ஹரித்துவாரத்துக்கு அழைத்தது. நல்ல வேளையாக மகாத்மா காந்தியும் பண்டித நேருவும் அன்று அங்கு வந்திருந்தனர். அவர்களைத் தரிசிக்க முப்பத்தையாயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் குழுமியிருந்தனர். ஆனால் இந்த நிலையிலுங்கூடப் பஞ்சாபி யுவதிகள் மகாத்மாவைத் தரிசிக்கப் போவதற்கு முன்னால் கன்னங்களில் ரோஜும், முகத்தில் பவுடரும், உதடுகளில் லிப்ஸ்டிக்கும், நகங்களில் பாலிஷும், கால் ஜோடுகளில் குதி உயர்ந்த ரகங்களையும் போட்டுக்கொள்வதை மறக்கவில்லை. நாலு பக்கமும் பொன்னும் வெள்ளியுமாகச் சேலைகள் பளபளத்தன. காந்தியும் நேருவும், துயரத்திலாழ்ந்த மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு அல்ல, ஏதோ ஒரு மண விழாவில் கலந்துகொள்ளவே வந்திருக்கிறார்கள் என்று தோன்றியது. இந்தக் காட்சி என் மனத்தில் மிகுந்த அருவருப்பை உண்டாக்கியது.



கோடியழகி

தேவி பிரஸாத் ராய் சௌதுரி (ஸ்வதந்த்ரா)

இருபது ஆண்டுகளுக்கு முந்திய ஒரு நிகழ்ச்சி ஞாபகம் வந்தது. லாகூரில் நான் ஒரு நண்பரின் வீட்டில் விருந்தாளியாக இருந்தேன். அவர் தம் மூத்த புதல்வனுக்கு ஹோசியார்பூரில் இருந்த ஒரு பெண்ணை மணஞ் செய்விக்கத் தீர்மானித்தார். பெண்ணின் தகப்பனார் பணக்காரர். ஆயினும், பையனுக்கு அந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை. அவனை எப்படியாவது சமாதானப்படுத்தச் சொன்னார் என் நண்பர். நான் தகவல்களை விசாரித்தேன். அந்தப் பெண் ஜாலந்தரில் பெண்கள் கலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றவள்; நன்றாகப் பாடுவாள்; பார்ப்பதற்கும் அழகாக இருந்தாள்.

காப்பிரைட்: விசவவாணி (ஹிந்தி - ஜூலை '47), ஆஸாத் ஸ்கோயர், அலஹாபாத்.

"என்னப்பா, நீ என் தடை சொல்கிருய்?" என்று பையனைக் கேட்டேன்.

அவன் தலை குனிந்துகொண்டு, "ஸ்வாமி, எனக்கு மாதம் முந்நூறு ரூபாய்தான் சம்பளம். எனக்கு நிச்சயித்திருக்கும் பெண்ணுக்கோ புடைவைக்கும் அழகுச் சாதனங்களுக்குமே மாதம் நூற்றைம்பது ரூபாய் பிடிக்கும். இல்லற இன்பத்துக்காக அல்லாமல் என் மனைவியின் அழகுச் சாதனங்களுக்காக நான் பிறரிடம் கைகட்டிச் சேவகம் செய்யவேண்டும் என்பது தான் இதற்கு அர்த்தம். மணவாழ்க்கையைப் பற்றிய என் கொள்கை இதனின்றும் மாறுபட்டது" என்று பதில் சொன்னுன்.

அவன் சொன்னது சரிதான். ஒரு காலன் பெட்ரோலில் முப்பத்தைந்து மைலுக்குக் குறையாமல் ஓடும் வண்டியைத்தான் முக்காலே மூன்று வீசம் பேர் விரும்புவார்கள். செலவாளியான மனைவி, காலனுக்கு எட்டு மைல் மட்டுமே ஓடும் பெரிய பியூக் வண்டியைப் போன்றவள். பெண்களின் இந்தச் சிங்கார ஆசையில் அநாவசியமான டம்பமும் வீணை தற்பெருமையுமே நிறைந்துள்ளன.

மேல்நாட்டுப் பெண்கள் பவுடர், கிரீம் முதலிய அழகுச் சாதனங்களிலும், விதவிதமான கூந்தல் அலங்காரங்களிலும், பற்களை முத்துப் போல் அழகுபடுத்துவதிலும் கோடிக்கணக்காகப் பணம் செலவழிக்கிருர்கள். வியாபாரிகள் வருஷந்தோறும் விளம்பரத்துக்காக லட்சக்கணக்கிலே பணத்தை வாரியிறைக்கிருர்கள். போட்டோப் பிடிப்பவர்களுக்கும் இதில் நல்ல பிழைப்பு.

'பாஷன்' என்று சொல்லிக்கொண்டு பல நாட்டுப் பெண்மணிகள் அசல் பட்டிலும் செயற்கைப் பட்டிலுமாக விதவிதமான உடைகளை வாங்கி அணிந்ததனுல்தான், ஜப்பானிடமும் இத்தாலியிடமும் அளவற்ற பணம் பொக்கிஷமாகக் குவிந்தது; அதனுல்தான் உலகம் முழுவதும் இரண்டாவது பயங்கரப் போருக்கு ஆளாயிற்று. அழகுச் சாதனங்களிலே ஆடையையும் சேர்த்துக் கணக்கிட்டால், அது தான் எந்த நாட்டிலும் மிகப் பெரிய தொழிலாக இருக்கும். உடையிலிருந்து 'பாஷன்' என்ற மனப்பான்மையைப் போக்கிவிட்டால், துணி வியாபாரம் இப்போது இருப்பதிலே பத்துச் சதவிகிதங் கூட நிலைத்திராது. விதவிதமான துணிகள் இவ்வளவு அதிகமாக விற்காவிட்டால் துணியின் விலை குறையாது. ஒரு பொருள் எவ்வளவு அதிகமாக உற்பத்தியாகிறதோ அவ்வளவு அது மலிவாக விற்கும். வந்த வருமானத்தைக் கொண்டு புது மெஷின்கள் வாங்கி, அந்தப் பொருளைப் பின்னும் மலிவாக விற்க வழி செய்வார்கள். பெண்களிடம் இந்த அழகுணர்ச்சி இல்லையென்ருல் எத்தனையோ பெரிய பெரிய வியாபாரங்கள் படுத்துப்போகும்.

1927- இலிருந்து 1937 வரையில் உலகில் எங்கும் டண்டங்கள் மலிந்திருந்தபோது, முதலாளி நாகரிகத்தைக் காத்தவள் பெண்தான். நம் முன்னோர்கள் பெண்ணைச் 'சக்தி' என்று சொன்னது தப்பல்ல. அரசியல் பலங்கூடப் பெண்ணின் அழகுச் சாதனங்களுக்கு முன்பு தலை கவிழ்கிறது. 'பாஷன்' கூடாது என்று ஹிட்லர் சொன்ன போது, அதைப் பலமாய் எதிர்த்தவன் முஸோலினிதான். ஜெர்மானியப் பெண்கள், லிப்ஸ்டிக்கும் வர்ணப் பொடியும் இல்லா திருந்ததைக் கண்டா முஸோலினி வருந்திஞன்?

இத்தாலியிலிருந்து செயற்கைப் பட்டும், வேறு அழகுச் சாதனங்களும் ஜெர்மனியில் அமிதமாக விற்றன. "சர்வாதிகாரியைக்காட்டிலும் பாஷனுக்குப் பலம் அதிகம்'' என்ருன் முஸோலினி. அவனுடைய மூத்த மகள் பாஷனுக்கு இருப்பிடமாக இருந்தவள். இத்தாலியில் செய்த மோட்டார்ஸைக்கிள்களுக்கு விளம்பரம் செய்வதை விட்டு, அங்குள்ள அழகுச் சாதனங்களுக்கு விளம்பரம் செய்தால் அது பெரிய வியாபார நாடாகும் என்று அவனுடைய பொருளாதார மந்திரிகள் சொன்னுர்கள்.

உலகப் போரினுல் துருப் பிடித்துப்போன முதலாளி வர்க்கமென்னும் சக்கரத்துக்கு எண்ணெய் வார்ப்பவள் பெண்தான். அழிவும் அழுகுரலும், சாவும் பஞ்சமும் சுற்றிலும் தாண்டவமாடுகையில், அவள் தன் சிங்காரச் சாதனங்களில் மூழ்கியிருக்கிருள். அலங்காரம் செய்துகொண்டு சுடுகாட்டில் நாட்டியமாடுவதுபோல் அல்லவா இது இருக்கிறது?

இப்படிப்பட்ட பெண்ணை நீங்கள் என்னவென்று சொல்வீர்கள்? 'தெய்வமகள்' என்ரு?

நான் என்ன சொல்வேன் தெரியுமா?—"அவள் ஒரு ராட்சஸி!'' என்றே சொல்வேன்.

---

## கொல்லும் படங்கள்

கெய்ரோவில் விஷமிகள் குண்டு வீசும் உபத்திரவம் சர்வ சாதாரணமாகிவிட்டது. இதைக் கண்டு எகிப்தியப் போலீஸார் பீதி யடைந்துவிட்டார்கள். சினிமாக் கொட்டகைக்கு வருகிறவர்கள் பின்கண்ட விதிகளை அநுஷ்டிக்க வேண்டுமென்று உத்தரவும் போட்டுவிட்டார்கள்:

"1. எவரும் படம் பார்த்துவிட்டு வீட்டுக்குப் புறப்படும் வரையில், டிக்கட்டுகளைக் கையிலேயே வைத்திருக்கவேண்டும். 2. உள்ளே பார்ஸல்களைக் கொண்டுவரக் கூடாது. 3. படம் முடியும் வரையில் வெளியேறக் கூடாது. 4. தேசீய கீதம் பாடி முடியும் வரையில் வெளியேறக் கூடாது. 5. சிகரெட் குடிக்கக் கூடாது. 6. ஆசனம் மாறக் கூடாது.''

இந்த விதிகளை அமல்செய்ய, ஒவ்வொரு சினிமாக் கொட்டகையிலும் ஒரு பட்டாளம் போலீஸார்கள் காவல் செய்துகொண்டு நிற்கிருர்கள்.

இவற்றில் மூன்ருவது விதியை மட்டில் நாம் ஆட்சேபிக்கிரேம். அதை இந்தியப் படங்கள் விஷயத்தில் அமல் செய்தால், குண்டுபட்டுச் சாகிறவர்களை விட அதிகமான பேரை இந்தப் படங்களே கொன்றுவிடும். இந்தியப் படங்கள் நம்மைக் கொலை செய்யும் கட்டத்துக்கு வருமுன்பே, நாம் வீடுபோய்ச் சேர நமக்குச் சுதந்தரம் இருக்கவேண்டும்.

—பிலிமிண்டியா



# நகைச்சித்திரம்



ஒரு மலையாளி (சிநேகிதனுக்கு ஒரு பெண்ணைச் சிபார்சு செய்கிறான்): ஆ பெண்ணினெ நீ கல்யாணம் கழிக்கணும். அபார சௌந்தர்யம்! ஹோ! அசாத்தியமா யிருக்கும். கண்டால் சகிக்க இல்ல.

மற்றவன்: கண்டால் சகிக்க இல்லணே?..நமஸ்காரம். எனக்கு வேண்டா.

—மாத்ருபூமி (மலையாளம்)

ஃ ஃ ஃ



உபாத்தியாயர்: இப்போது நான் ஒரு வீடு கட்டவேண்டும். அதற்கு முதல் முதலில் நான் என்ன வாங்கவேண்டும்?

பையன்: கடன் வாங்க வேண்டும், ஸார்.

—மாத்ருபூமி (மலையாளம்)

ஃ ஃ ஃ



கதாசிரியர் (மீசைக்காரர்): விஜயதசமிக்கு மறுநாள், 'பறக்கா வெட்டி' என்ற நம்ம நாவல் வந்துதே. பார்த்தீங்களா? அதுபற்றி உங்க அபிப்பிராயம் என்ன?

பத்திராசிரியர் (வளைசல் மூக்கர்): பார்த்தேன். அபிப்பிராயம் என்னத்தைச் சொல்றது?

கதாசிரியர்: சும்மாச் சொல்லுங்க, மனசிலே பட்டதை ஒளிக்காமல் சொல்லுங்க.

பத்திராசிரியர்: அதெப்படிச் சொல்லுறது? அது முடியாதுங்க. உங்க வலிவுக்கு முன்னே, நம்ம வலிவு நிக்குமா?

—கிர்லோஸ்கர் (மராட்டி)





“அதோ போறாளே ஒரு பொண்ணு, அவ என்னெப் பார்த்ததும் என்ன செஞ்சா, தெரியுமா? சிரிச்சா.”

“அட இதென்னடா பெரிய விஷயம்! நான்கூடத்தான் உன்னெ முதல்லெ பார்த்தப்போ சிரிச்சேன்.”

—கிர்லோஸ்கர் (மராட்டி)

ஃ ஃ ஃ



“என்ன தொல்லை! இந்த மூட்டைப் பூச்சிகள் இப்படி நாலு புறத்திலும் படையெடுத்துக் கடிக்கின்றனவே! ஒழுங்காக ‘க்யூ’ வரிசையில் வந்து கடிக்கக்கூடாது?”

—மாத்ருபூமி (மலையாளம்)

ஃ ஃ ஃ



“ப்ரியே, நீ என் இருதயத்தை அறியவில்லை! கொஞ்சம் திரும்பிப் பார். இதோ அந்தப் பாழாய்ப் போன இருதயத்தைத் திறந்து காட்டுகிறேன்.”

—கிர்லோஸ்கர் (மராட்டி)

# கரும்பொன் தொழிலாளி

டாக்டர் ரஞ்ஜீ ஜி. சாஹனி

**மேல்நாட்டார் நம்மை அறிய வருகிறார்கள். வந்து நம்மைப் பற்றி என்ன என்னவோ விஷயங்களைத் திரட்டிக்கொள்கிறார் கள். மனம்போனபடி ஏதாவது எழுதிவிடுகிறார்கள். மேல்நாட் டாரைப் பற்றி, நம்மவர் அறியவேண்டாமா? அவர்களிடையே வாழ்ந்து, அவர்களை யறிந்து, அவர்களைப்பற்றி அநுதாபத் தோடு எழுதுவதில் கீர்த்தி பெற்றவர் சாஹனி. இந்தக் கட்டுரையைத்தான் எவ்வளவு அருமையாய் எழுதியிருக்கிறார்!**

கரும்பொன்னின் உச்சியிலே உட்கார்ந்திருக்கிறது என்று பிரிட்டனைச் சொல்லுவார்கள். இது வீண் டம்பப் பேச்சல்ல; உண்மை.

கரும்பொன் என்றால், என்ன? நிலக்கரிதான். நிலக்கரி எடுப்பதே பிரிட்டனின் தலைமையான தொழில். அது மாத்திரம் அல்ல; அதுவே பிரிட்டனின் ஜீவாதாரமான தொழிலுமாகும். நிலக்கரித் தொழில் செழித்தால்தான், பிரிட்டனின் சகல பெருமையும் நிலைத்திருக்கும். இதுதான் எல்லாருக்கும் தெரிந்த விஷயமாயிற்றே என்று நீங்கள் எண்ணலாம். அதுதான் இல்லை.

நிலக்கரி என்றால் என்ன, அதை எப்படி எடுக்கிறார்கள் என்ற விஷயங்கள் எல்லாருக்கும் தெரிந்திரா. "நிலக்கரி என்றால், பூமிக்குள் இருக்கும்; அதைச் சில விசித்திரமான முரடர்கள் வெட்டியெடுக்கிறார்கள்; அந்த முரடர்கள் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்யும் நேரம் போக மீதி நேரங்களில் வாழும் வாழ்வு மெத்த அநாகரிகமாயிருக்கும்" என்றே பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். டி. எச். லாரன்ஸின் சில நாவல்களைப் படிப்பவருக்கு, நிலக்கரித் தொழிலாளரைப் பற்றி இத்தகைய சித்திரங்கள் தாம் கிடைக்கின்றன. ஆனால், இது பெரிதும் அவதூறாகும்.

நான் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் பலரைச் சந்தித்திருக்கிறேன். அவர்களின் வீடுகளிலே வசித்தும் இருக்கிறேன். அவர்களின் பாஷை கொஞ்சம் அலங்காரமாய்த்தான் இருக்கிறது. இதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், விருந்தினரை உபசரிக்கும் கலையில் அவர்கள் மிகவும் தேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் நல்ல புத்திசாலிகள்; குறும்பும் நகைச்சுவையும் உள்ளவர்கள்.

1941-ஆம் வருஷத்தில் டர்ஹாம் நகரில் நான் பிரசங்கங்கள் புரிந்துகொண்டிருந்தேன். அப்போது ஒரு நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி எனக்கு ஓர் அருமையான விருந்தளித்தார். விருந்துக்குப் பின்பு, "இந்தியருக்குச் சுயராஜ்யம் கிடைக்கவேண்டியதுதான். சந்தேகமில்லை. ஆனால், எங்கள் கதி என்ன? நாங்கள் ஆங்கிலேயர் இருக்கிறோமே; எங்களுக்கு எப்போது சுயராஜ்யம் கிடைக்கும்?

**காப்பிரைட்: ராய்ஸ் வீக்லி (ஆங்கிலம் - 9-11-'47), புது டில்லி.**

எங்கள் நாட்டிலே சிறந்த இடங்கள் எவை உண்டோ அவற்றில் பெரும் பாலானவற்றையும் ஸ்காட்லாந்துக் காரன்கள் வசப்படுத்திக் கொண்டிருக்கிறுன்களே!'' என்று அவர் சொன்னுர். பின்பு, நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் படும் சங்கடங்கள் சிலவற்றை அவர் எனக்கு எடுத்துரைத்தார்.

நிலக்கரி என்றுல், ஏதோ நினைத்த மாத்திரத்தில் அது கிடைத்துவிட வில்லை. பல நூறு அடிகளுக்குக் கீழே யிருந்துகூடச் சில சமயம் நிலக்கரியைத் தோண்டி யெடுக்க வேண்டி யிருக்கிறது. கடலுக்கு அடியிலேயும் புகுந்து வேலைசெய்ய வேண்டி யிருக்கிறது. நிலக்கரியிலிருந்து கிளம்பும் விஷப்புகை, சுரங்கத்தில் சுரக்கும் தண்ணீர், உள்ளே சூழ்ந்து விடும் இருள், இடிந்து விழும் கரியின் கனம் இவற்றை யெல்லாம் சுரங்கத் தொழிலாளி எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. நிலக்கரித் தொழிலாளி சுரங்கத்துக்குள்ளே இட முடக்கத்தில் சில வேளை மண்டியிட்டு உட்காரவேண்டி யிருக்கிறது; சில வேளை மல்லாந்து படுக்க வேண்டி யிருக்கிறது; மற்றும் சிலவேளை குப்புறப் படுக்க வேண்டி யிருக்கிறது. இப்படியெல்லாம் அவஸ்தைப் பட்ட படியே, பூதம் போன்ற பெரிய மெஷின்களை அவன் இயக்கி வேலை செய்கிறுன். மகா உபத்திரவமான தொழில்.

சுரங்கத் தொழிலாளி சுரங்கத்தை விட்டு வெளியே வந்துவிடுகிறுனே, அப்போது என்ன செய்கிறுன்? மதுவகைகளைக் குடிக்கிறுன்; சூதாடுகிறுன். ஆமாம்; இதெல்லாம் உண்மைதான். ஆனல், பிறர் மாத்திரம் என்ன வாழ்ந்தார்கள்? அவர்களுந்தாம் இப்படிச் செய்கிறுர்கள். நிலக்கரித் தொழிலாளிக்கு வேறு விஷயங்களிலும் சுவை இருக்கிறது. அவன் பந்தயப் புருக்கள் வளர்க்கிறுன்; தக்காளி, ரோஜா முதலிய பயிர்களைப் பயிரிடுகிறுன்; மாதாகோயில் பாடகர் கோஷ்டியிலே சேர்ந்து பாடுகிறுன்; உள்ளூர் பாண்டுவாத்திய கோஷ்டியிலே சேர்ந்து வாத்தியம் வாசிக்கிறுன்; ஏதாவது அரசியல் பொதுக்கூட்டத்துக்கும் போகிறுன். சில சமயம் அவன் கவிதை எழுதுகிறுன்; சித்திரமும் தீட்டுகிறுன்.

உதாரணமாக, எனக்கு விருந்தளித்த தொழிலாளியை எடுத்துக் கொள்ளலாம். சுவரில் மாட்டும் கடிகாரங்களை அவர் செய்து வந்தார். அவர் வீட்டிலே அருமையான பல மாதிரி சுவர்மாட்டிக் கடிகாரங்கள் நிறைந்திருந்தன. இதை யெல்லாம் பார்க்கும்போது, நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளியும் சகல விதங்களிலும் நம்மைப்போல் தான் வாழ்கிறுன் என்பதில் என்ன தடை? அவனுடைய தொழில் மகா கடுமையானது; அபாயமானது. ஆகவே, எப்படிப் பார்த்தாலும், அவனுக்குக் கணிசமான சம்பளம் கொடுப்பதே நியாயமாகும்.

இந்த நோக்கங் கொண்டு, ஒரு கண்காட்சியே நடத்தினுர்கள். 'சுரங்கத் தொழிலாளி நகருக்கு வருகிறுர்' என்பது அந்தக் கண்காட்சியின் பெயர். லண்டனில் மார்பிள் ஆர்ச் என்னும் இடத்திலே இது நடைபெற்றது. இந்தக் கண்காட்சி, பார்ப்பவரின் மனத்தைக் கவர்ந்தது; சிந்தனையைத் தூண்டிவிட்டது. இந்தக் கண்காட்சியைப் பார்க்க ஓர் ஆங்கிலக் கவிஞரும் என்

னுடன் வந்தார். "சுரங்கத் தொழிலாளி இவ்வளவு அற்ப ஊதியத்தைப் பெற்று, நமக்கு இவ்வளவு அதிக ஊழியம் புரிகிருனே; இதை நான் இதுவரையிலும் அறியேன்" என்று அவர் என்னிடம் சொன்னார்.

நிலக்கரித் தொழிலாளி சுரங்கத்துக்குள்ளே உபயோகிக்கும் விளக்கொளியில், கடலுக்கடியில் உள்ள நிலக்கரிப் பாளங்களின் முகம் எப்படி யிருக்கும் என்பதை, இந்தக் கண்காட்சியிலேதான் நான் முதல் முதலாகக் கண்டேன். இது எனக்குப் பரவச மூட்டியது. ஆனல், நிலக்கரித் தொழிலாளர்களுக்குள்ளே யிருக்கும் சில கலைஞர்களின் கலா சிருஷ்டிகள்தாம் என் மனத்தை மிகவும் கவர்ந்தன. நார்மன் கார்னிஷ், பாப் ஹாயிஸ்லாப், ஜாக் ரோச் ஆகியவர்களின் சித்திரங்கள் நேர்த்தியாயிருந்தன. நேர்த்தியாயிருந்தது மட்டிலுமல்ல; நிலக்கரித் தொழிலாளர்களின் மனப்பான்மையையும் அபூர்வமாய் விளக்குபவையா யிருந்தன. அந்தச் சித்திரங்களில் உள்ள உருவங்களெல்லாம் பளிச்சென்று கட்டுமஸ்தா யிருந்தன. நிலக்கரித் தொழிலாளி வாழ்வை விரும்புகிருன்; ஒளியை விரும்புகிருன்; வர்ணத்தை விரும்புகிருன். இந்த எல்லாவற்றுக்கும் மேலாக, சலியா இயக்கத்தையும் விரும்புகிருன்.

---

## வயது என்ன?

**யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும் அமெரிக்க ஜனதிபதி ரூஸ்வெல்ட்டும் யால்டாவில் சந்தித்துப் பேசிய நிகழ்ச்சிச் செய்திகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பியவர் டக்ளஸ் கார்னெல். அப்பொழுது ரூஸ்வெல்ட்டை இந்த நிருபர், "ஜனதிபதி அவர்களே, உங்கள் வயது என்ன?" என்று கேட்டார்.**

**"காலண்டரின்படி என் வயது 62 ஆனல், மும்முரமான வேலை வந்துவிட்டால் என் வயது 35" என்று பதிலளித்தார் ரூஸ்வெல்ட்டு.**

**—மகளின் டைஜஸ்ட்.**



"நில்லும், நில்லும்! பாவம்! கிணற்றிலே விழப்போகிறீரே! விழத்தான் விழுகிறீர். ஒரு தகவலைச் சொல்லிவிட்டு விழும்: உமது வீடு காலி தானே?"

**—மனேகர் (மராட்டி)**

**சுதந்தர விழா உற்சாகத்தில் வீட்டுக்கு வீடு, நம் அருமை மணிக்கொடி வானளாவப் பறக்கிறது. ஆனால், கொடிக்கு நாம் செலுத்தவேண்டிய சில மரியாதை முறைகளை அறிந்துகொள்வது அவசியம்.**



# கொடியின் கௌரவம்

**சங்கர் விஜயவர்கீயர்**

"உங்களிடம் பெருமையுடன் நான் சமர்ப்பிக்கும் இந்தக் கொடி, ஒரு சாம்ராஜ்யம் அல்லது ஏகாதிபத்தியத்தின் கொடி அல்ல; எவரையும் அடக்கி ஆளும் சின்னமும் அல்ல. நமக்கு மட்டுமன்றி, இதைக் காணும் எவருக்கும் இது விடுதலையின் சின்னமாக விளங்கும்."

1947-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 14-ஆம் தேதி நடு இரவில் தேச விடுதலைக் கொண்டாட்டத்தை முன்னிட்டு அரசியல் நிர்ணய சபையில் ஜவாஹர்லால் நேரு இவ்விதம் குறிப்பிட்டார். சட்டரீதியாக அரசியல் நிர்ணய சபை ஏற்றுக் கொண்ட அசோக சக்கரம் அமைந்த இந்த மூவர்ணக் கொடிக்கு இந்தத் தேசத்துப் பிரஜை என்ற முறையில் நாம் அனைவரும் வணங்கி மரியாதை செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடுதலை தினம், காந்தி ஜயந்தி, தலைவர் யாராவது இறந்த நாள் போன்ற சந்தர்ப்பங்களில், தனிப்பட்ட நபரோ கட்சியோ, தற்பெருமையினாலோ குரோதத்தினாலோ வேறு கொடியைப் பறக்கவிட்டு இந்தக் கொடியை அலட்சியம் செய்யக் கூடாது.

எப்பொழுதாவது தேசீயக் கொடியுடன் மற்றக் கொடிகளையும் பறக்கவிட நேர்ந்தால், தேசீயக் கொடியை மரியாதையுடன் மற்றக் கொடிகளுக்கு வலப்புறமாகவோ அவற்றின் மத்தியிலோ பறக்கவிட வேண்டும். எந்த விதத்திலும் அவ்விதச் சந்தர்ப்பங்களில் தேசீயக் கொடி மற்றவற்றைவிடத் தாழ்ந்தோ சிறியதாகவோ இருக்கக் கூடாது. இந்த முறையையே பொதுக் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் அநுஷ்டிக்க வேண்டும்.

பொதுமக்கள் இந்தத் தேசீயக் கொடியை விசேஷ சமயங்களில் மாத்திரமே முறைப்படி கொடி வணக்கத்துடன் பறக்கவிடவேண்டும். சூரியன் அஸ்தமிக்கும் வரையில்தான், கொடி கம்பத்தில் இருக்கவேண்டும். பிறகு அதை இறக்கிவிட வேண்டும். சர்க்கார் காரியாலயங்கள், சர்க்கார் வண்டிகள் முதலியவற்றில் மட்டுமே, வரு

**காப்பிரைட் : பம்பாய் கிரானிக்கிள் வீக்லி (ஆங்கிலம் - 12-10-47), பார்ஸி பஜார் தெரு, பம்பாய்.**

ஷம் முழுவதும் இந்தத் தேசியக் கொடி பறக்கலாம்.

நம் உள்ளத்தில் கொடியின்மீது அணுவளவேனும் மதிப்பு இருந்தால், எவ்விதத்திலும் உலகின் எந்தப் பாகத்திலும் இந்தக் கொடிக்குப் பங்கமோ அவமரியாதையோ ஏற்படாதவாறு பாதுகாப்பது நம் கடமை. இது சம்பந்தமாக நாம் கவனிக்கவேண்டிய சில விஷயங்கள் உண்டு. கிழிந்த அல்லது அழுக்கேறிய கொடிகளை அப்புறப்படுத்த வேண்டும். கொடியின் சின்னம் இருக்கும் துணியையோ காகிதத்தையோ வீண் வியாபாரச் சரக்காக மாற்றக்கூடாது. கொடியில் வேறு எந்த எழுத்தையோ அடையாளத்தையோ பொறிக்கக் கூடாது.

சில காலமாக நம் சினிமாக் கொட்டகைகளில் காட்சி முடிந்தவுடன் தேசிய கீதத்துடன் தேசியக் கொடி வானளாவப் பறப்பதையும் காட்டுகிறார்கள். இது நல்லதே. ஆனால் நம்மவர்களில் சிலரைத் தவிர மற்றவரெல்லாம், திரையில் காணும் இந்தத் தேசியக் கொடிக்கும் தேசிய கீதத்துக்கும் சரியானபடி வணக்கம் செலுத்துவதில்லை. இதையும் கேளிக்கையின் ஓர் அம்சமாக மக்கள் கருதுவது மிகவும் வருந்தத் தக்கது. கொடியைத் திரையில் காட்டாமலே இருப்பது அல்லது கொடியின் மதிப்பை மக்களுக்கு உடனே உணர்த்துவது ஆகிய இரண்டில் ஒன்றுதான் இதற்குப் பரிகாரம். ஆகஸ்டு 15-ஆம் தேதிக்குப் பிறகு இந்தக் கொடிக்கும் கீதத்துக்கும் வணக்கமும் பக்தியும் செலுத்துவது சகல இந்தியர்களின் கடமையுமாகும். இவ்விஷயத்தில் அவரவர் இஷ்டப்படி நடப்பது சரியல்ல என்பதைப் பிரசார மூலமாக அறிவுறுத்த வேண்டும்.

தற்காலம் நம் தேசியக் கொடியை அகாரணமாகவும் அநாவசியமாகவும் வியாபார நிமித்தம் பத்திரிகை விளம்பரங்களில் அநேகர் உபயோகிப்பதைக் காண்கிறோம். இது சரியல்ல. ஏனென்றால், இந்தப் பத்திரிகைக் காகிதங்களை நாம் பல காரியங்களுக்கும் உபயோகிக்கிறோம். அப்போது இந்தக் காகிதங்கள் அசுத்தமாகின்றன. காகிதங்களிலுள்ள கொடிக்கும் அந்த நிலைமை ஏற்படுகிறது. இதுவும் கொடிக்கு அவமரியாதை செய்வதேயாகும். ஆகவே, இவ்வித விளம்பரங்களைத் தங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்க அநுமதி அளிக்காமல் இருப்பது பத்திராசிரியர்களின் கடமை.

அநேகமாக ஊர்வலங்களில்தான் கொடியை அடிக்கடி உபயோகிக்கிறார்கள். கொடியைத் தாங்கிச் செல்பவன் கொடிக் கம்பைத் தன் தோளின்மேல் சாய்த்துக்கொண்டு செல்கிறான். இந்தச் செய்கையால் கொடியைத் தாங்கிச் செல்பவனுக்குப் பின்னால் போய்விடுகிறது கொடி. இந்தக் காட்சி சர்வ சாதாரணமாக இருக்கிறது. இது கூடாது. ஊர்வலத்தில் கொடியை எடுத்துச் செல்லும்போது, கொடியை எடுத்துச் செல்பவர்கள் அதைத் தங்கள் தோள்மேல் சாய்த்துக் கொள்ளாமல், தங்களைவிடக் கொடி சிறிது முன்புறம் சாய்வாக இருக்கும்படியே பிடித்துச் செல்ல வேண்டும். இந்தச் சந்தர்ப்பங்களில் வழியோடு செல்லும் மக்கள், கொடியைக் கண்டதும் சற்று நின்று அதை வணங்கிவிட்டுச் செல்ல வேண்டும்; உட்கார்ந்திருப்பவர்கள் எழுந்து நிற்கவேண்டும். இது சட்டரீதியான கடமையாகும்.

கொடியை வணங்கும் சில முறைகளைத்தான் இங்கே குறிப்பிட்

டேன். கொடியிடம் நாம் சிறந்த மதிப்பு வைத்திருப்போமானல், அதற்கு நாம் செலுத்தவேண்டிய மரியாதையும் தானகவே நமக்குப் புலப்படும். சுருக்கமாகச் சொன்னல், பெருமையாகவும் புனிதமாகவும் நாம் போற்றும் மனிதருக்கும் பொருளுக்கும் எவ்வித மரியாதை செலுத்துவோமோ அதைப் போன்ற மரியாதையையே இந்தக் கொடிக்கும் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

வெகு காலமாகவே காங்கிரஸ் கட்சியின் கொடியை நம் தேசியக் கொடியாகக் கருதி வந்திருக்கிறோம். இப்போது, சர்க்காவுக்குப் பதிலாகச் சக்கரத்தை மட்டும் மாற்றியமைத்து, பழமையான அந்தக் கொடிக்கு அரசியல் நிர்ணய சபை மரியாதை காட்டியுள்ளது.

இப்போது காங்கிரஸ், இந்தக் கொடியைத் தன் கட்சிக் கொடியாகச் செய்துகொள்ளாமல், தன் பழைய கொடியையே மாறுதலின்றி வைத்துக் கொள்ளவேண்டும். தப்பபிப்பிராயம் எதுவும் ஏற்படாதபடியும் வருங்காலத்துக்கு வழி காட்டியாகவும் நடந்து கொள்ள இதுதான் முறையாகும்.

காங்கிரஸ் அல்லாத இதர கட்சியினர் எவரேனும் எதிர்காலத்தில் அரசுரிமையை ஏற்றுக்கொண்டால் இந்தக் கொடியில் அவர்களும் மாறுதல் எதையும் செய்யக் கூடாது.

இந்தக் கொடி நம்முடைய சுதந்தரத்தின் சின்னம். இந்தக் கொடிக்கு மகத்தான சரித்திரம் உண்டென்பது நமக்குத் தெரியும். அடிமைத் தளையை அகற்ற நாம் நடத்திய சாத்துவிகப் போராட்டமும் தியாகமும் எதிர்காலத்திலும் பயன் பெறவேண்டும். கொடியின் கௌரவத்தை நிலை நாட்டுவது நம் கையில் இருக்கிறது. பல்லாண்டுகளாக அவதியுற்ற மக்களின் நம்பிக்கையை அப்போதுதான் நாம் நிறைவேற்றியவர்களாவோம்.

---

## மேலே இழுக்கும் மலை

அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் கனடாவுக்கும் இடையில் உள்ள எல்லையில் லுட்ஸ் என்று ஒரு மலைத்தொடர் இருக்கிறது. இந்தத் தொடரில் விசித்திரமான மலை இருக்கிறது.

உங்கள் காரை அந்த மலையடிவாரத்துக்குக் கொண்டு போங்கள். காரின் எஞ்சினை நிறுத்தி, பிரேக்கை விட்டுவிடுங்கள்.

அவ்வளவுதான்; அடுத்த விநாடியில், உங்கள் கார் தானகவே அந்த மலைமீது ஏறிவிடுகிறது. போகப் போக அதன் வேகம் அதிகரிக்கிறது. மலை உச்சியை அடையும்போது, வேகம் உச்ச நிலையை அடைகிறது.

என்ன வேடிக்கை! பூமியின் ஆகர்ஷண சக்தி, எல்லா இடங்களிலும் வஸ்துக்களை மேலிருந்து கீழே இழுக்கிறது. ஆனல், அங்கே இந்த ஆகர்ஷண சக்திக்கு மாறுபட்ட ஏதோ ஒரு சக்தி, வஸ்துக்களைக் கீழிருந்து மேலே இழுக்கிறது!

—ராதாகிருஷ்ணமூர்த்தி (பாரதி)

**தந்திரசாலியான குற்றவாளி என்ன என்ன யுக்தி செய்கிறான்! அவன் தந்திரத்தை அம்பலப் படுத்தி, உண்மை காண்பது எளிதான காரியமா?**

# துப்பறியும் வேலை

டி. வி. பரமேசுவரன்

களவு, கொலை முதலிய குற்றங்களைத் துப்பறிபவன் முதலில் தன்னைத்தானே எழு கேள்விகள் கேட்டுக்கொள்ள வேண்டும்.

நடந்தது கொலையா, அல்லது சாதாரண மரணந்தானா என்பது முதல் கேள்வி. ஓர் இடத்தில் ஒருவன் இறந்து கிடந்தான். அவன் பக்கத்தில் ஒரு துப்பாக்கி கிடந்தது. அதைக் கண்டு, தற்கொலை என்று முதலில் எல்லோரும் நினைத்து விட்டார்கள். ஆனால், அந்த ஆள் எந்த வேலையையும் இடது கையால் செய்யும் பழக்கமுடையவன் என்று பின்னால் தெரிந்தது. துப்பாக்கியோ பிணத்தின் வலது பக்கத்தில் கிடந்தது. ஆகவே, கொலைதான் நடந்திருக்கிறது என்று பின்னால் நிச்சயமாயிற்று.

துப்பறிபவன் தன்னைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டிய இரண்டாவது கேள்வி 'இறந்தது யார்?' என்பதாகும். ஒரு பெரிய தனவந்தர் ஏராளமாகக்கடன் வாங்கிவிட்டார். கடன்காரர்கள் அவரைத் தொல்லை செய்ய ஆரம்பித்தார்கள். தனவந்தர் ஒரு பெரிய தொகைக்கு இன்ஷ்யூர் செய்திருந்தார். தாம் இறந்ததாக அந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்குத் தெரியவந்தால், தம் மனைவிக்கு அந்தப் பணம் வருமென்றும், அதை எடுத்துக்கொண்டு தாமும் மனைவியும் யாருமறியாமல் வேறு ஏதாவது ஓர் ஊருக்குப் போய்ச் சௌக்கியமாய் வாழலாமென்றும் தனவந்தர் நினைத்தார். ஒரு நாள் ஜன சஞ்சாரமில்லாத ஒரு மலைப்பிரதேசத்தில் தனவந்தர் தனியாகத் தாமே தமது மோட்டார்காரை ஓட்டிச் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு தொழிலாளி நடந்துகொண் டிருக்கக் கண்டார். அவனைத் தமது காரில் ஏறி உட்காரச் சொன்னார். சிறிது தூரம் சென்றதும், தனவந்தர் தொழிலாளியைக் கழுத்தை நெரித்துக் கொன்றார். தம் பெயர் வெட்டியிருந்த பேனா, கடிகாரம், தமது 'பாஸ்போர்ட்' ஆகியவற்றைத் தொழிலாளியின் சட்டை ஜேபியில் திணித்தார். அப்படியே அந்தப் பிணத்தோடு தமது மோட்டார் காரைக் கொளுத்திவிட்டார். இந்த அடையாளங்களைக் கண்டு, எல்லோரும் தனவந்தரே இறந்து போனதாக நம்பினார்கள். ஆனால், சில வருஷங்களுக்குப் பின்பு, ஒரு கடன்காரன் தற்செயலாக இந்தத் தனவந்தரைச் சந்தித்துவிட்டான். இவருடைய குட்டு வெளியாயிற்று.

சம்பவம் நடந்தது எப்போது என்பது மூன்றாவது கேள்வி.

காப்பிரைட்: ஜயகேரளம் (மலையாளம் - ஓணம் மலர் '47)
ராயப்பேட்டை, சென்னை.

இரண்டு ஜமீன்தார்களுக் கிடையிலே நெடுங்காலமாகப் பகைமை மூண்டிருந்தது. அவர்களில் ஒருவர் 1900-ஆம் ஆண்டு தம் பொருள்கள் சிலவற்றை அடகு வைத்தார். அவற்றை அடகு பெற்றவரும் விரோதி ஜமீன்தாரும் சேர்ந்து ஒரு சதி செய்தார்கள். பிரஸ்தாபப் பொருள்களை 1892-ஆம் வருஷமே அடகு வைத்ததுபோல் ஒரு கள்ளப் பத்திரம் சிருஷ்டி செய்து, டைப் அடித்து வைத்துவிட்டார்கள். டைப் அடிக்க இவர்கள் உபயோகித்தது ரெமிங்டன் 1898-ஆம் வருஷத்துப் புதிய மாடல் டைப்ரைட்டர். ஆனால், 1892-ஆம் வருஷத்தில் அந்த மாடல் டைப்ரைட்டர் வரவேயில்லை. இதனால், விரோதி ஜமீன்தாரின் சதி பலிக்காமல் போயிற்று.

சம்பவம் நடந்தது எந்த இடத்தில் என்பது நான்காவது கேள்வி. முன்னொரு காலத்தில் ஜெர்மனியில் ஒரு ரெயில் திருட்டு நடந்தது. ஒரு தபால் பையை எவனோ எடுத்து அதிலிருந்த பணத்தைத் திருடிக் கொண்டு, பணத்துக்குப் பதில் பை நிறைய மணலைப் போட்டுக் கட்டி வைத்துவிட்டான். அன்று பத்துப் பன்னிரண்டு ஸ்டேஷன்களில் அந்த ரெயில் வண்டி நின்றிருந்தது. அவற்றில் எதில் திருட்டு நடந்தது? இதைக் கண்டுபிடிக்க, மண் ஆராய்ச்சி நிபுணர்களின் உதவியைப் போலீஸார் நாடினார்கள். எல்லா ஸ்டேஷன்களின் மணல் வகைகளையும் கொண்டு வந்து தபால் பை மணலுடன் அந்த நிபுணர்கள் ஒப்பிட்டுப் பார்த்தார்கள். பை மணல் இன்ன ஸ்டேஷனின் மணல் என்று நிச்சயமானதும், அந்த ஸ்டேஷனில் போலீஸார் புலன் விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

ஐந்தாவது கேள்வி சம்பவம் நடந்தது எப்படி என்பதாகும். ஒருவன் செய்யும் காரியங்களில், அதுவும் அவன் செய்யும் குற்றங்களில், அவனுடைய பழக்கவழக்கங்களின் அடையாளம் எதுவேனும் பதியாமல் இருக்காது. ஒரு பெண்ணின் பிணத்தைப் பார்த்த போது, ஒரே வெட்டாக வெட்டிய இரண்டு வெட்டுக் காயங்கள் தென்பட்டன. இப்படி வெட்டியவன் ஒரு கசாப்புக் கடைக்காரனாகத்தான் இருக்க வேண்டும் என்று துப்பறிபவன் ஊகித்தான். இந்த ஊகம் சரிதான் என்று பின்னால் தெளிவாயிற்று.

கொலைக்கு உதவிய சாதனம் என்ன என்பது ஆறுவது கேள்வி. சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து வந்து இறக்குமதியான ஒரு வெடிகுண்டு பட்டு, ஜெர்மன் சினிமா டைரக்டர் ஒருவர் இறந்து கிடந்தார். சந்தேகத்தின் பேரில் ஒரு நடிகரைப் போலீஸார் கைது செய்தார்கள். அவர் ஒரு வாரத்துக்கு முன்புதான் அமெரிக்காவிலிருந்து திரும்பியிருந்தார். அவரது ஜாகையில், மேற்கண்ட மாதிரி அமெரிக்க வெடிகுண்டுகள் அகப்பட்டன. நடிகர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

கொலைக்குத் தூண்டிய நோக்கம் என்ன என்பது கடைசிக் கேள்வி. இது மிக முக்கியமானது என்ற விஷயம் எல்லோருக்கும் தெரிந்தது தான். இதை விளக்க உதாரணம் எதுவும் தேவையில்லை.

விஞ்ஞான அறிவு வளர வளர, குற்றங்களும் மலிகின்றன; துப்பறிபவனின் சாமர்த்தியமும் வலுத்து வருகிறது. சில வேளைகளில், குற்றவாளி தப்பித்துக்கொள்ளக் கூடும். என்றாலும், பெரும்பாலும் துப்பறிபவனே வெற்றியடைகிறான். 'மெய்யே வெல்லும்; பொய் அல்ல' - இது வேதவாக்கல்லவா?

# வீணாகும் உணவு

எம். ஜி. டி.

> நமக்கு ஏன் உணவுப் பஞ்சம் வரவேண்டும்? வரத் தேவையே இல்லை. உணவுப் பொருள் வீண் நாசமாவதுதான், நமது உணவுக் கஷ்டத்துக்கெல்லாம் காரணம் என்று நிரூபிக்கிருர் கட்டுரையாளர். "இவர் ஒரு வருஷ காலத்துக்கு மேலாக, இந்திய சர்க்காரின் உணவு இலாக்காவில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்" என்கிறது முன்ஷியின் 'ஸோஷல் வெல்பேர்'.

சென்ற நான்கு வருஷங்களாகவே தொடர்ந்து நம் நாட்டில் உணவு நெருக்கடி இருந்து கொண்டே வருகிறது. 1943-இல் வங்காளத்தில் ஏற்பட்ட உணவு நெருக்கடிக்கு உணவு போதாதது காரணமல்ல. ஆனல், அது ஒரு யுத்தகால சாணக்கியம். வங்காளிகளிடம் ஆங்கிலேயர்களுக்குப் பயம். படையெடுத்து வரும் ஜப்பானியர்களோடு வங்காளிகள் சேர்ந்து கொண்டு விடுவார்கள் என்று ஆங்கிலேயர்கள் பயந்தனர். அதோடு '42-ஆம் வருஷக் கிளர்ச்சி காரணமாக வங்காளிகளால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்குப் பழி தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர்கள் நினைத்தனர். எனவே குண்டுகளால் சுட்டு அவர்களைக் கொல்வதற்குப் பதிலாக, உணவு கிடைக்காதபடி உணவுப் போக்குவரவைத் தடைசெய்து வங்காளிகளை ஆங்கில சர்க்கார் கொன்றனர். நாட்டில் உணவென்னவோ நிறையத்தான் இருந்தது. ஆனல் போக்குவரத்து முழுவதும் ராணுவத்தின் கையில் இருந்தது. 35 லட்சம் வங்காளிகள் உணவில்லாமல் சாகும் வரையில் உணவுப் போக்குவரவு வசதி வங்காளத்துக்குக் கிடைக்கவில்லை. உணவுச் சேதாரத்தைக் குறைத்து உணவு நிலையை விருத்தி செய்து பட்டினியைப் போக்கும் வழிகளெல்லாம் பிரிட்டிஷ்காரர்களுக்குத் தெரியும். அவர்களுடைய நாட்டில் இந்த வழிகளை அவர்கள் கடைப்பிடிக்க வில்லையா? ஆனல் வேண்டுமென்றேதான் இங்கே இப்படிப் பசியும் பட்டினியுமாகப் போட்டு மக்களை வதைத்தனர்.

உணவுப் பிரச்னையில் மூன்று அம்சங்கள் முக்கியமானவை. ஒன்று தானியச் சேதாரத்தைத் தடுத்தல். இரண்டாவது உணவுச் சேதாரம், வீண்செலவு இவற்றைத் தடுத்தல். மூன்ருவதாக உணவு உற்பத்தியை அதிகரித்தல். இவற்றையே, பிரிட்டன் அமெரிக்கா முதலிய நாடுகளில் செய்து வருகிருர்கள். இங்கேயோ வேண்டுமென்றே இந்த மூன்று அம்சங்களையும் கவனிக்காமலே விட்டு வந்தனர் பிரிட்டிஷ்காரர்.

போர்க் காலத்தில் இங்கிலாந்து நம்மிடமிருந்து நிறையப் பொருள்களை வாங்கிற்று. இதன் பலனுக

காப்பிரைட்: ஸோஷல் வெல்பேர் (ஆங்கிலம் - 12-9-'47), 12, ஹோம்ஜி தெரு, பம்பாய்.

இங்கிலாந்துக்கு இந்தியா கொடுக்க வேண்டிய கடன் ஒழிந்ததோடு, இந்தியாவுக்கு இங்கிலாந்து கடன் கொடுக்கவேண்டிய நிலையும் வந்தது. இதைக் கழித்துக் கட்ட எண்ணியும் நம் நாட்டில் உணவுநிலை நெருக்கடியை நிலைக்கச் செய்துவிட்டார்கள். பூஞ்சக்காளான் பூத்து உயிருக்கே ஆபத்தான தானியங்களை, வெளிநாடுகளிலிருந்து இந்தக் கடனுக்காக அவர்கள் நமக்கு இறக்குமதி செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

இனிமேல் சுதந்தர இந்தியாவில் நாம் இந்தப் பிரச்னையைத் திறமையாகத் தீர்க்க வேண்டும். வருஷம் ஒன்றுக்கு 60 லட்சம் டன் தானியம் நம் நாட்டில் சேதமாகிறது. வருஷந்தோறும் நம் நாட்டில் இறக்குமதியாகும் உணவுத் தானியம் 4 கோடியே 50 லட்சம் டன்கள்.

பஞ்சம், வெள்ளம், தாவர நோய் இவற்றால் நம் நாட்டுப் பயிர் எவ்வளவு அழிந்தாலும் நம் நாட்டில் விளையும் தானியம் நம் நாட்டு மக்களுக்கெல்லாம் நிச்சயமாகப் போதும். எனவே, நாம் இறக்குமதி செய்யும் தானியம் நம் உணவுக்காக அல்ல. எலிகள், பூச்சிகள், காக்கைகள், புறாக்கள் இவற்றுக்கு நல் விருந்தாகவும் வேறுவகைத் தானிய நஷ்டங்களை ஈடுகட்டவுமே அது உபயோகப்படுகிறது. இந்தச் சேதாரத்தைத் தடுப்பதுதான் நம் முதல் பிரச்னை.

குடியானவன், வியாபாரி, தானியத்தை வாங்கிச் சேகரித்து விநியோகிக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர், அதைப் பெற்றுக் காத்து உணவு குறைந்த பிரதேசங்களுக்கு விநியோகிப்பவர் எல்லோரிடமுமே இந்த அலட்சியம் காணப்படுகிறது. இந்த அலட்சியந்தான் சேதத்துக்கு மூல காரணம்.

குடியானவன் வெகுநாள் வரையிலும் பயிரை அறுவடை செய்யாமல் வயலில் விட்டுவிடுகிறான். இதனால் தானியத்தின் கனம் குறைந்துவிடுகிறது. மில்லில் அரைப்பதால் ஆடு மாடுகளின் தீனியான நொய் தவிடுகளை இழக்கநேரிடுகிறது.

தானியத்தைச் சுத்தம் செய்யாமல் பல நிலைகளில் வண்டிகளில் ஏற்றிக் கடத்துவதால் 10 கோடி டன் தானியத்தை ஒரு மைல் கொண்டு போவதற்கு வேண்டிய சக்தி நஷ்டமாகிறது.

மண்டிக்குப் போன தானியத்தைக் கவனிப்பார் யாரும் இல்லை. உற்பத்தியாளனின் பிரதிநிதியாகவோ, வாங்குகிறவனின் பிரதிநிதியாகவோதான் மண்டிக்காரன் தானியத்தைத் தன்னிடம் வைத்திருக்கிறான். அவனுக்கு அதன் சேதாரத்தைப்பற்றிக் கவலை இல்லை. மண்டியின் சேதாரத்தால் ஏற்படும் நஷ்டத்தை யார் தலையிலாவது கட்ட மண்டி வியாபாரிக்கு நன்றாகத் தெரியும். "என்னப்பா; எலி, காக்கை, புறா இவை சேதப்படுத்தாமல் காப்பாற்றக் கூடாதா?" என்று மண்டி வியாபாரியைக் கேட்டால், அவன், "அவையும் கடவுள் சிருஷ்டி தாமே? அவற்றுக்கும் உணவு வேண்டாமா?" என்று தமாஷ் செய்கிறான். மண்டிகளிலும் ரெயில்வே பிளாட்பாரங்களிலும் உணவுத் தானியங்களுக்கு ஏற்படும் சேதத்துக்குக் கணக்கே இல்லை. போக்குவரத்தின் போது ஓட்டைப் பைகளிலிருந்து சிந்துவதால் ஏற்படும் நஷ்டமும் ஏராளம். கிராமத்திலிருந்து மண்டிக்குப் போகும் வழி நெடுக, மண்டியிலிருந்து ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் வழி நெடுக, ரெயில் வண்டிகளுக்குள், மறுபடியும் இறங்கும் இடத்தில், விநியோகமாகும் கடைகளில்

இங்கெல்லாம் இந்தியா முழுவதும் பல்லாயிரம் சந்தர்ப்பங்களில் இறைபடும் தானியம் எவ்வள விருக்கும்!

தானியம் வாங்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் அலட்சியத்தால் ஏற்படும் நஷ்டமும் மிக அதிகம். லாகூருக்கும் பாதாமிபாக் ஸ்டேஷனுக்கும் இடையில் ஒரு ஸ்டேஷனில் ஏராளமான கோதுமை மூட்டைகள் கண்டபடி கீழேயும் திறந்த வண்டிகளிலும் இறைந்து கிடப்பதை நான் கண்டேன். பின்னல் இந்த மூட்டைகளின் எண்ணிக்கை 40,000 என்பது தெரிய வந்தது. இந்தக் கோதுமை சிந்தி அழிவதையும், மழையில் நனைவதையும், இதை எலியும் பறவையும் தின்பதையும், தடுக்க ஆளே இல்லை.

குவெட்டா டிபோ ஒன்றில் 200 மூட்டை கோதுமை ஓட்டைச் சாக்குகளில் இருந்தது. இவ்வளவு மூட்டைகளும் மணலில் கிடந்தன. இந்தியக் கோதுமை மணலோடு கலந்து இறைந்து கிடந்தது. "இப்படி வீணாகிறதே" என்பதை நான் அந்த டிபோ அரசாங்க உத்தியோகஸ்தருக்கு எடுத்துக் காட்டிய போது அவர், "அதை ரெயில்வே அதிகாரிகளுக்கு ஒப்படைத்தாகி விட்டது. இனிமேல் எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை" என்று சொல்லிவிட்டார்!

ஸிபிக்கும் ஜேகோபாபாத்துக்கும் இடையில் உள்ள நான்கு ஸ்டேஷன்களில் 20,000 மூட்டை சோளம் 18 மாத காலம் மழையிலும் வெயிலிலும் கிடந்து அழிந்து பன்றிக்குக்கூட உதவாத நிலைக்கு வந்து நாசமாகிவிட்டது.

ஜம்மு என்பது உணவு குறைந்த பிரதேசம். இங்கேயாவது உணவுத் தானியத்தை நன்கு பாதுகாக்க வேண்டாமா? தானியம் போட்டிருந்த ஒன்பது மண்டிகளை நான் பார்த்தேன். ஒன்பது மண்டிகளுக்குள்ளும் மழை பெய்தால் ஜலம் புகும். இப்படி மழையால் தானிய மூட்டைகள் பல நனைந்து கெட்டுக் கிடந்தன. மண்டிக்கு வெளியே இருந்த புழுதியில் நிறையத் தானியம் சிந்திக் கிடந்தது!

கராச்சியில் மத்திய அரசாங்கத்துக்கு உரிய தானிய மூட்டைகள் ஒரு பக்கமும் அதற்கு அருகே மாகாண அரசாங்கத்துக்கு உரிய தானிய மூட்டைகள் மறு பக்கமும் வெட்டவெளியில் மெழுகுத் துணியால் மூடி வைக்கப்பட்டிருந்தன. மத்திய அரசாங்க அதிகாரி மூட்டைகளுக்கு அடியில் பயனற்ற சாக்கு முதலியவற்றைப் போட்டு ஒரு திண்ணைபோல் செய்து அதற்கு மேல் மூட்டைகளை அடுக்கியிருந்தார். மாகாண மூட்டைகள் தரையிலேயே அடுக்கிக்கிடந்தன.

பெருமழை ஒன்று பெய்தது. மத்திய அரசாங்கத் தானியம் சேதமில்லாமல் தப்பிற்று. ஆனால் மாகாணச் சரக்கில் 8000 டன் தானியம் சேதமாகிவிட்டது! இவை சில உதாரணங்களே. இப்படிப் பல இடங்களில் நடக்கிறது.

இந்தமாதிரியான சேதாரங்களை எல்லாம் நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் எல்லோர் மனத்திலும் உதித்து இது நின்றாலொழிய, உணவு நெருக்கடி தீர மார்க்கமே இல்லை.

# நமது அயல் நாட்டு இலாக்கா

**மதனகோபால்**

**விஜயலட்சுமியைப் போன்றவர்கள், நம் ராஜதந்திர தூதர்களாய் வெளி நாடுகளுக்குச் செல்வதனல், எவ்வளவு அபூர்வ காரியங்கள் சாதகமாகின்றன என்பது இப்போதே நாம் அறிந்த விஷயம். இன்னும் இவர்போன்ற ராஜதந்திரிகளைத் தயாரிக்க, டில்லியில் ஒரு பயிற்சிச் சாலையே நடந்துவருகிறது. நம் ராஜ தந்திரிகள் என்ன பயிற்சி பெறவேண்டும்? நம் அயல் நாட்டு இலாக்கா என்ன வேலைகள் புரியவேண்டும்? இவற்றை விளக்கும் இந்தக் கட்டுரை ஆசிரியர், 'காரவா'னின் லண்டன் நிருபராய் இருப்பவர். விஷயம் அறிந்தவர்.**

ஒரு தேசத்தின் அயல்நாட்டு விவகாரங்களை, மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

(1) ராஜதந்திர உறவுகள்.
(2) பொருளாதாரத் தொடர்புகள்.
(3) பிரசாரம்.

இந்தியாவின் அயல்நாட்டு உறவுகளை, இன்று நாம் புதிதாய்த் தொடங்கவேண்டியிருக்கிறது. நம் நாட்டுப் பாதுகாப்பு, பொருளாதார பலம் இவற்றுக்கு உதவியாயிருக்கக் கூடிய சகல நாடுகளுடனும், நாம் ராஜதந்திர உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த ராஜதந்திர உறவுப் பிரிவில், பல இலாக்காக்கள் இருக்கும். ஒன்று, சர்வதேச மகாநாடுகளையே கவனிக்கும். மற்ற ஒவ்வொன்றும் இப்படியே ஒவ்வொரு விஷயத்தைக் கவனிக்கும். ஒவ்வொன்றும் ஒரு காரிய தரிசியின் தலைமையில் வேலை செய்யும்.

வெளிநாடுகளுடன் இந்தியா நடத்தும் வியாபாரப் பற்றுவரவை, பொருளாதாரத் தொடர்புப் பிரிவு கவனித்துக்கொள்ளும். ஐக்கியநாடுகளின் பொருளாதார ஸ்தாபனங்களின் விவகாரங்களையும் இது கவனித்துக் கொள்ளும்.

மேற்கண்ட இரு பிரிவுகளும் பழமையானவை. பிரசாரம் என்ற பிரிவு, 1919-ஆம் வருஷத்திய சமாதான உடன்படிக்கைக்குப் பிறகே முக்கியமான தாயிற்று. இந்தியாவைப்பற்றி அயல்நாடுகளில் ஏகாதிபத்திய வாதிகள் பரப்பிய பொய்யும் அறியாமையும் அவற்றில் சூழ்ந்திருக்கின்றன. ஆகையால், இந்தியா இப்போது அயல்நாடுகளில் முழுமூச்சோடு பிரசாரம் செய்ய வேண்டும். ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இந்தியா பற்றிய உண்மைகளை அறியப் பேராவல் கொண்டிருக்கின்றன. இந்த ஆவலை இந்தியா பூர்த்தி செய்ய வேண்டும். ருஷ்யா, சைனா, மத்தியக் கிழக்கு, தென்கிழக்கு, ஆசிய நாடுகளி லெல்லாம் இந்தியாவுக்கு விசேஷக் கவலை உண்டு. ஆகவே, இவற்றுக்கு நம் மாணவர்களை அனுப்பவேண்டும்; இவற்றின் மாணவர்களை இங்கே வரவழைக்க வேண்டும்.

காப்பிரைட்; காரவான் (ஆங்கிலம் - செப்டம்பர் '47),
டெல்லி பிரெஸ், கனாட் ஸர்க்கஸ், த. பெ. 17, புது டெல்லி.

இந்த மூன்று பிரிவுகளும் நம் அயல்நாட்டு மந்திரியின் கண் காணிப்பில் இருக்கும். அயல்நாட்டு மந்திரிக்கு, மூன்று பிரிவுகளிலு முள்ள நிபுணர்கள் உதவி புரிவார் கள். அவர்களின் உதவியைக் கொண்டு, நமது அயல் நாட்டுக் கொள்கையை நம் அயல்நாட்டு மந் திரி வகுப்பார். அதை நம் மந்திரி சபை அங்கீகரித்துவிட்டால், வெளி நாடுகளில் உள்ள நம் பிரதிநிதிகள் அந்தக் கொள்கையை நிறைவேற்றி வைப்பார்கள்.

அயல்நாட்டு மந்திரியின் காரி யாலயத்துக்குள்ளேயே மிக முக்கிய மான ஓர் இலாக்கா பட்ஜெட் இலாக்கா. ராஜதந்திர சேவைக்கு ஊழியர்களைப் பொறுக்கவும், அவர் களுக்குப் பயிற்சியளிக்கவும் ராஜ தந்திர ஊழியர்களை நிர்வகிக்கவும் ஓர் இலாக்கா இருக்கும். தஸ்தா வேஜிகளைப் பாதுகாக்க ஓர் இலாக்கா. சங்கேத பாஷை உப யோகிக்க ஓர் இலாக்கா. நம் ராஜ தந்திரிகள் அனுப்பும் அறிக்கைக ளுக்கும் நம் நாட்டைக் குறித்துப் பிற நாட்டு ராஜீயவாதிகள் செய் யும் பிரசங்கங்கள் முதலியவற்றுக் கும் பொருட் குறிப்பு அகராதிக ளைத் தயாரித்து வைத்து வர ஓர் இலாக்கா. இப்படிப் பல இலாக் காக்களுக்கும் ஆகும் வரவு செலவு களுக்கெல்லாம் திட்டம் தயாரிப் பது பட்ஜெட் இலாக்காவின் வேலை.

அயல் நாடுகளில் நம் ராஜாங்கத் தின் கண்ணும் காதும் போல் இருப் பவர்கள், அங்கங்கேயுள்ள நம் ராஜ தந்திரிகளே. ஸ்தானிகர்கள் என்றும் கான்ஸல்கள் என்றும் இவர்கள் இருவகையாவர்.

இவர்கள் அயல் நாட்டுச் சர்க் கார்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவார்கள்; தவிர, உடன்படிக் கைகளும் ஒப்பந்தங்களும் செய்து கொள்ளுவார்கள். அயல் நாடுக ளில் உள்ள நம் நாட்டவர்களின் நல உரிமைகளையும் பாதுகாப்பார் கள். அயல் நாட்டுச் சர்க்காரின் வியாபார இலாக்காக்களுடன் ஒத் துழைப்பார்கள். இந்தியாவின் மத் திய சர்க்காருக்கோ, மாகாண சர்க் காருக்கோ பயன் படத்தக்க சகல தகவல்களையும் சேகரித்து அனுப்பு வார்கள்.

அயல் நாடுகளில் ஏற்படக்கூடிய சர்க்கார் மாறுதல்கள், கொள்கை மாறுதல்களை யெல்லாம் முன்ன தாகவே நம் சர்க்காருக்கு அறிவிப்ப தும் இவர்களின் வேலையாகும். அயல் நாடுகளின் சர்க்கார்களோ கொள்கைகளோ திடீரென்று மாறி னால், அந்த நிலையைச் சமா ளிக்க நம் சர்க்கார் திணற நேரிடும். அப்படிக் கில்லாமல், முன்னதாக வே அந்த மாறுதல்களை நம் ராஜ தந்திர தூதர்களின் மூலம் அறிந்து கொண்டால், அவற்றைச் சமாளிப் பது நம் சர்க்காருக்குச் சுலபமாகும்.

ஒரு நாட்டின் கட்சிப் பிரதிகட்சி அரசியல் நிலைமையை யெல்லாம் பூரணமாய்த் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், அந்த நாட்டில் சர்க்காரை எதிர்க்கும் கட்சி உள்பட அதன் சகல கட்சித் தலைவர்க ளுடனும், நம் ராஜதந்திர தூதர்கள் நட்புக் கொள்ளவேண்டும். இது சில சமயம் அந்த நாட்டின் ராஜாங்கக் காரியங்களுக்கே அபாய மாய் முடிவதுண்டு.

ராஜதந்திர தூதர்களின் வேலை ரகசியமாய் நடக்கவேண்டி யிருப்ப தால், அவர்களுக்குச் சில விசேஷ உரிமைகள் உண்டு. அவர்களின் கடி தப் போக்குவரத்துகளை அந்நிய சர்க்கார்கள் தணிக்கை செய்யமாட் டார்கள். மரியாதைக் கிரமத்தில், ஒரு பெரிய வல்லரசின் மந்திரிக்கு

முன்பே, ஒரு சிறிய நாட்டின் ஸ்தானிகர் இடம் பெறுகிறார். உதாரணமாக, பிரிட்டிஷ் மன்னரின் மகுடாபிஷேகம் நடக்கும்போது, ஒரு சிறிய ராஜ்யமான கியூபாவின் ஸ்தானிகருக்கு ஆசனம் கொடுத்த பின்பே, பெரிய வல்லரசான ருஷ்ய சர்க்காரின் ஒரு மந்திரிக்கு ஆசனம் அளிக்கிறார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய டொமினியன் நாடுகளின் ஹைகமிஷனர்களை யெல்லாம் ஸ்தானிகர்களைப் போலவே பாவிக்க வேண்டும் என்று ஏழாம் எட்வர்டு மன்னர் 1910-ஆம் ஆண்டில் வற்புறுத்தினராம். அது முதல் அப்படியே நடந்து வருகிறது.

ஒரு நாட்டின் கான்ஸல்கள், அயல் நாட்டின் மத்திய சர்க்காருடன் தொடர்பு கொள்வதில்லை; அதன் மாகாண சர்க்கார்களுடனே தொடர்பு கொள்கிறார்கள். அவர்கள் அனுப்பும் அறிக்கைகளை, ஸ்தானிகர் காரியாலயம் உபயோகித்துக் கொண்டு வேலை செய்கிறது.

ராஜதந்திரிகளாய் வேலை செய்ய, விசேஷத் திறமை உள்ளவர்களே வேண்டும். அவர்களுக்கு உலக விவகாரங்களில் நல்ல பிரக்ஞை இருக்க வேண்டும்.

மிகச் சிறந்த திறமையுள்ள இந்தியர்களைப் பொறுக்கி, அவசியமான பூர்வாங்கப் பயிற்சிகளையெல்லாம் அவர்களுக்குக் கொடுத்து, அவர்களையே அயல் நாடுகளுக்கு நம் ஸ்தானிகர்களாக அனுப்பவேண்டும். இந்தக் காரியத்துக்காக, அகில இந்திய நிர்வாகக் கலாசாலை என்ற ஒன்றை இந்திய சர்க்கார் இப்போது நடத்திவருகிறார்கள். இது பாராட்டத் தக்க முயற்சியே யாகும். ஆனால், இதனால் பலன் விளையுமா என்பதை இதற்குள்ளே சொல்ல முடியாது. யோக்கியதாம்சத்தையே முக்கியமாய்க் கொண்டு சிறந்த அபேட்சகர்களையே பார்த்துப் பொறுக்கி, அவர்களுக்குத் திறமை மிக்க போதகர்களைக் கொண்டு பயிற்சியளித்தால், இந்தக் கலாசாலை வெற்றி பெறத் தடை என்ன?

---

## ஆங்கில அலங்காரிகள்

சமீபத்தில் இங்கிலாந்து போய் வந்த சகோதரர் ஒருவரை அந்தத் தேசத்துப் பெண்களைப் பற்றி வினவினேன். "இங்கிலீஷ் பெண்கள் சுதந்தரத்துடன் இருக்கிறார்களா?" என்று கேட்டேன்.

"உம்! பொருளாதார சுதந்தரம் அவர்களுக்கு இருக்கிறது. ஆத்ம சுதந்தரத்தில் அவர்கள் முன்னேற்றம் பெறவில்லை. அவர்கள் சதா காலமும் அலங்கரித்துக் கொள்வதிலேயே கருத்தாக அவதிப்படுகிறார்கள். அங்கேயே ஒரு ருஷ்யப் பெண்ணைச் சந்தித்தேன். அவள் மிகவும் சுதந்தர மனப்பான்மை உடையவள். 'இது என்ன, இந்தப் பிரிட்டிஷ் பெண்கள் இவ்வளவு அசட்டுத்தனமாக நடந்து கொள்ளுகிறார்கள்! புருஷர்களை எவ்விதம் பிரியப்படுத்துவது, மயக்குவது, திருப்தி செய்வது என்ற கவலையிலேயே அவர்கள் தங்கள் பொழுதில் முக்கால் பாகத்தைச் செலவு செய்கிறார்களே! என்ன வாழ்க்கை! என்ன பேதைமை!' என்று அவள் பரிகாசம் செய்தாள்" என்றார் அவர்.

—'குமுதினி', (கலைமகள்)



# குழந்தைகள் குறும்பு

குழந்தைகளின் பேச்சும் செயலும் சில சமயம் மிகவும் சுவையாயிருக்கும். அந்த விசித்திரப் பேச்சையும் செயலையும் ஒவ்வொரு வீட்டிலும் பல சமயம் கண்டு கேட்டுக் களித்திருப்பர் பெற்றோரும் பிறரும். அவற்றை மற்றவருக்கும் எடுத்துச் சொன்னால், அவர்களும் அநுபவிப்பார்கள் அல்லவா? 'மஞ்சரி'யில் இந்தப் பகுதியைத் தொடங்கியிருப்பது அந்த நோக்கத்துடன்தான். குழந்தைகளின் சில ரசமான பேச்சு, செயல்களை இங்கே உதாரணம் தந்திருக்கிறோம். இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்கப் படாதவை திருப்பி அனுப்பப் படமாட்டா. அவை சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது. —**ஆசிரியர்.**

“நான் உன் வயசில் பொய்யே சொன்னதில்லையடா!” என்று தன் ஆறு வயசு மகன் மணியைப் பார்த்துக் கோபித்துக் கொண்டார் தந்தை சந்திரசேகர்.



பையன் வெகு ஆவலோடு, “அப்ப நீங்க எத்தனை வயசிலே அதைச் சொல்ல ஆரம்பிச்சகள், அப்பா?” என்று கேட்டான்!

* *

என் மகன் சேது மூன்றாம் வகுப்பில் படிப்பவன். “பள்ளிக்கூடத்துக்குக் கலர் பாக்ஸ் வாங்கிக் கொண்டு போகணும். எட்டணாப் பணம் கொடு” என்று அவன் என்னைக் கேட்டான்.

“சாயங்காலம் தருகிறேன்” என்றேன்.



"இப்போதே வேண்டும்" என்று அவன் பிடிவாதம் பிடித்தான்.

நான் எரிச்சலோடு, "இப்போதே நீ ஒரு பிள்ளையைப் பெறு" என்றேன்.

"எனக்குக் கலியாணமாகியிருக்கோ!" என்று சர்வசாதாரணமாகப்பதில் சொல்லிவிட்டான் என் எட்டு வயதுக் குழந்தை சேது!

—ஒரு தாய்

* *

குழந்தை ராஜம் ஒரு நாள் தன் தாயை, "அம்மா, சுவாமி மானத்திலே யிருந்துண்டு, நாம் செய்கிறதை யெல்லாம் பார்க்கிறாராமே; இது நிஜமா?" என்று கேட்டான்.

"நிஜந்தான், தங்கம்" என்றாள் தாய்.

"மப்புப் போட்டு, மேகம் கவிந்திருக்கிறபோது கூடவா?" என்றான் குழந்தை.

* *



"இந்த வீட்டிலே ஒரு நிமிஷமாவது நிம்மதி கிடையாது" என்று அலுத்துக்கொண்டே கூடத்துக்கு ஓடினாள் தாய். கூடத்திலே தொட்டில் குழந்தையை ஆட்டிக்கொண்டிருந்த சிறுவனின் கூச்சலைக் கேட்டே, அவள் இப்படி ஓடிவந்தாள்.

"அம்மா, தம்பி என் மயிரைப் பிடிச்சு இழுக்கிறான்" என்று புகார் சொன்னான் சிறுவன்.

"எண்டா, அது சின்னக் குழந்தை தானே! மயிரைப் பிடிச்சு இழுத்தால் வலிக்கும்னு தம்பிக்குத் தெரியாது" என்று சமாதானம் சொல்லிவிட்டுத் தாய் உள்ளே போனாள்.

அடுத்த நிமிஷமே மறுபடியும் கூடத்திலேயிருந்து கூச்சல் வந்தது. தாய் மீண்டும் ஓடினாள்.

பேசத் தெரியாத தொட்டில் குழந்தை இந்தத் தடவை கத்திக் கொண்டிருந்தது. "எண்டா தம்பி கத்தறது?" என்று தாய் சிறுவனைக் கேட்டாள்.

"ஒண்ணுமில்லே, அம்மா. தம்பிக்கு வலி தெரிஞ்சு போச்சு. நான் தெரியப் பண்ணிவிட்டேன்" என்றான் சிறுவன்.

**போலீஸ் ஜவான் பெரிய தர்பார் நடத்திய காலம் ஒன்று உண்டு. ஆனால், அவன் இப்போது எவ்வளவு தூரம் மாறிவிட்டான்!**

# கடவுளை வணங்கிய போலீஸ்காரன்

**என். வி. ஈச்வர்**

சில நாளைக்கு முன் ஒருநாள் இரவு ஒரு தெருவில் நான் நடந்துகொண்டிருந்தேன். மிகவும் ஜன நடமாட்டம் உள்ள தெரு. அங்கே ஒரு கோயிலின் முன்னே ஒரு போலீஸ்காரன் இரு கையும் கூப்பி நிற்கக் கண்டேன். அவன் தன் கைத்தடியை முழங்கால்களுக்கு இடையிலே இடுக்கிக்கொண்டிருந்தான். நான் பிரமிப்படைந்தேன். போலீஸ்காரனா கடவுளை வணங்குகிறான்? திரும்பவும் கவனித்துப் பார்த்தேன். சந்தேகமில்லை; அவன் போலீஸ்காரன்தான். சாமான்யமான இதர மானிடர்களைப் போல், போலீஸ்காரனும் பிரார்த்தனை செய்கிறானே! போலீஸ்காரனைப் பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்துக்களுக்கெல்லாம் மாறாக அல்லவா இருக்கிறது இது!

பூமியை ஆதிசேஷன் சுமக்கிற மாதிரி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முழுப் பாரத்தையும் சுமந்து கொண்டிருந்தவன் போலீஸ்காரனே. வீதியிலே அவன் வருகிறான் என்றால், எல்லாரும் வழி விலக வேண்டும். ஜனங்களெல்லாம் ஆமைமாதிரி தங்கள் வீட்டுக் கதவுகளுக்குப் பின்னே தலையை இழுத்துக் கொள்வார்கள். பளபளப்பான உடுப்பும் தொப்பியும் அணிந்து, கைத்தடியை ஆட்டிக் கொண்டு போலீஸ்காரன் நடப்பான். கைத்தடியும் போலீஸ்காரனும் இணைபிரியாத் தோழர்கள். அவன் ஒரு வார்த்தை சொன்னாலும், கிராம வாசிகளெல்லாம் நடுங்குவார்கள்.

போலீஸ்காரனுக்கு அகம்பாவமில்லாமல் பேசவே தெரியாது. எந்த மனிதனையும் அவன் மதிக்க மாட்டான். எவனும் அவனுக்குக் காலின் கீழே கிடக்கும் துரும்புக்குச் சமானம். யார் மீதும் அவன் குதிரை ஏறுவான். போகுமிடமெல்லாம் அவனே ராஜா. எந்தக் கடைக்குள்ளும் அவன் நுழைவான். இஷ்டப்பட்ட சாமானில் கை வைத்து விடுவான். அதைத் தன் வீட்டிலே கொண்டுவந்து கொடுக்கவும் சொல்லுவான். விலையைப் பற்றிய பேச்சே கிளம்பாது.

போலீஸ்காரன் வருகிற சத்தம் கேட்டால், விளையாடும் குழந்தைகளெல்லாம் அணில் குஞ்சுகள் மாதிரி நாலுதிசைகளிலும் தலைவிரி கோலமாய் ஓட்டம் பிடிக்கும். வைக்கோற் போரிலும் மரக்கிளைகளிலும் போய் ஒளிந்துகொள்ளும்.

ஆமாம், நாடு முழுவதுமே போலீஸ்காரனுக்குச் சொந்தமா

காப்பிரைட்: ஸவுண்ட் (ஆங்கிலம் - செப்டம்பர்'47), ஸர் பி. எம். ரோட், பம்பாய்.

யிருந்தது. ஜனங்களெல்லாம் அவன் கருணையிலேதான் பிழைத்துக்கொண்டிருந்தார்கள். போலீஸ்காரன் சர்க்காரின் பிரதிநிதியாக மட்டுமல்ல; சர்க்காராகவே இருந்தான். அவனுக்கு மேற்பட்ட அதிகாரமே இல்லை. அவன் சர்வசக்தியுள்ளவன். லௌகிக சக்தி மட்டுமல்ல; ஆத்மிக சக்தியுங்கூடத்தான் அவனிடம் இருந்தது. இல்லை யானால், ஜனங்களெல்லாம் சட்டை தரித்தபடி கோயிலுக்குள்ளே நுழையக்கூடா தென்றிருந்த போது, போலீஸ்காரன் மாத்திரம் சட்டை தரித்தபடியே கோயிலுக்குள் நுழைந்துகொண்டிருந்தானே, அதற்கென்ன சொல்லுகிறீர்கள்?

காந்தி சகாப்தம் உதயமாயிற்று. போலீஸ்காரனின் ராஜ்யம் ஆட்டமெடுத்தது. போலீஸ்காரனை ஜனங்கள் எதிரே நின்று நிமிர்ந்து பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். அவன் முறைத்தால், இவர்களும் விடுவதில்லை. போலீஸ்காரனின் அந்தஸ்துக்குச் சிறிது ஹானி ஏற்பட்டது.

ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தது. போலீஸ்காரன் பழைய படி தலை நிமிர்ந்தான். பூர்வ அந்தஸ்தைத் திரும்பப் பெற்றான். ஆனால், ஜனங்களிடம் அவன் காறு பாறு செல்லவில்லை. அவர்களை அவன் தடியால் அடித்தான். சனியனாலும் குத்தினான். என்றாலும், வேறு வேறு ஜனங்கள் அவன் மார்க்கத்தில் குறுக்கிட்டுக் குழுமிக் கொண்டேயிருந்தார்கள். மாகாணங்களில் காங்கிரஸ் பதவி ஏற்றது. போலீஸ்காரனுக்குப் பெருந் தொல்லை யாயிற்று. அவனுக்கு இருந்த பெருமையும் மகிமையுமெல்லாம் போய்விட்டன.

ராஜாஜி சென்னை மந்திரியானார். அவரிடந்தான் போலீஸ்காரன் மகா சங்கடம் அடைந்தான். எத்தனை இன்பமான தாலாட்டுப் பாடினாலும் தூங்காமல் சண்டி செய்த குழந்தையெல்லாம், போலீஸ்காரன் என்ற சொல்லைக் கேட்டதுமே நடுங்கி ஒடுங்கிப் படுக்கையிலே சுருண்டுவிடும். குழந்தைகள் மீது போலீஸ்காரனுக்கு இந்த மந்திர சக்தி இருந்தது. ராஜாஜி பிரதம மந்திரியாக இருந்த காலத்தில், போலீஸ்காரனிடம் குழந்தைகளுக்கிருந்த பயம் முற்றும் போய்விட்டது. சில குழந்தைகள் அவனை 'மாமா' என்று கூப்பிடவும் தொடங்கின. ஸ்தலக் குழந்தைகளுடன் நேசமாயிருக்கவேண்டும் என்று போலீஸ்காரர்களுக்கு ராஜாஜி கட்டளை கூடப் போட்டாராம். ஸ்தலக் குழந்தைகளுடன் விளையாட வேண்டும் என்றும் போலீஸ்காரனுக்கு அவர் தாக்கீது போட்டாராம். ஆகவே, போலீஸ்காரனைக் குழந்தைகள் விளையாட்டுத் தோழனாக மதித்துவிட்டன. போலீஸ்காரன் வெறும் குழந்தையாகிவிட்டான்.

ஆனால், 1942-ஆம் ஆண்டு 'வெள்ளையனே, வெளியேறு' என்ற இயக்கம் வந்தது. தான் இழந்த கௌரவத்தைப் போலீஸ்காரன் திரும்பப் பெற்றான். மறுபடியும் அதிகார தோரணையில் நடைபோட்டான். என்றாலும், அந்தப் பெருமை நீடிக்கவில்லை. யாரும் போலீஸ்காரனை லட்சியம் செய்யவில்லை. ராணுவம் வந்து அவனுக்கு உதவி புரியவேயில்லை. இது அவனுடைய பலவீனத்தை அம்பலப்படுத்திவிட்டது.

இப்போதோ, போலீஸ்காரன் பொதுக் கூட்டங்களிலே பயங்கரமாயில்லை. கும்பலோடு கும்பலாக அவனும் ஐக்கியமாகிவிடுகிறான். இதர மானிடர்களைப் போலவே, அவனும் பிரசங்கிகளின் பிரசங்கங்களை வெகு

பயபக்தியாய்க் கேட்கிறுன். கலியாண ஊர்வலங்கள், பிரேத ஊர்வலங்கள், சுவாமி ஊர்வலங்கள், வேலே நிறுத்தத் தொழிலாளர் ஊர்வலங்கள் ஆகிய சகலத்திலும் போலீஸ்காரன் இணேபிரியாத அம்சமாய்க் காட்சி யளிக்கிறுன். இன்று அவன் தன்னேச் சூழ உள்ள மானிடஜீவர்களோடு தானும் ஒரு மானிடஜீவனுகவே ஆகிவிட்டான்.

இவ்விதம் அவன் மாறிவிட்ட காரணத்தாலேதான், அந்தப் போலீஸ்காரன் கடவுளேக் கைகூப்பித் தொழுதிருக்க வேண்டும். "பிறக்கப்போகும் புதிய இந்தியாவின் ஒரு மூலேயில் எனக்கும் ஓர் இடம் அளிக்கவேண்டும், ஆண்டவனே!" என்று ஒருவேளே அவன் பிரார்த்தித்தானே? அல்லது சென்ற நூற்றுண்டுகளில் தான் இழைத்த பழைய பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பு வேண்டித்தான் பிரார்த்தித்தானே? எதுவென்று நான் அறியேன்.

---

## ரவீந்திரர் ஆங்கிலம் பழகியது

ஆங்கிலத்தில் கீதாஞ்சலி வெளிவந்தது; குருதேவர் நோபல் பரிசு பெற்ருர். இதற்குப் பிறகு ஒரு நாள் நான் அவரோடு பேசிக்கொண் டிருந்தேன். அவர் ஆங்கிலத்தில் எழுதுவதைப் பற்றிப் பேச்சு வந்தது. கீதாஞ்சலியின் ஆங்கில மொழிபெயர்ப்பு அவருடையதா என்று பலருக்குச் சந்தேகம் இருந்தது. "குருதேவர் ஆண்ட்ரூஸை விட்டு மொழிபெயர்த்திருப்பார்" என்று அவர்கள் சொன்னுர்கள்.

இதைக் கவியரசரிடம் சொன்னபோது, "அப்படியாளுல் ஏன் ஆண்ட்ரூஸ் தம் பெயரிலேயே அதை வெளியிடவில்லே? அவருக்குக் கிடைத்திருக்குமல்லவா பரிசு?" என்று அவர் பதிலளித்தார்.

"நீங்கள் முன்னெல்லாம் ஆங்கிலத்தில் ஏன் எழுதுவதில்லே?" என்று நான் கேட்டேன்.

அவர் சொன்னதாவது: "ஆங்கிலத்தில் நான் பிரமாதமாக எழுதிவிடப் போகிறேன் என்று எனக்கு மட்டும் தெரியுமா என்ன? சில வேளே அஜித் சக்கரவர்த்தி போன்றவர்களேக் கொண்டு ஆங்கிலக் கடிதங்கள் எழுதச் செய்வேன். அப்புறம் ஒரு நாள் தசராவின்போது சிலாயிதஹ் சென்றேன். அங்கே படகில் உட்கார்ந்திருந்தேன். பேஞ, பென்சில் எல்லாம் கிடந்தன. எடுத்து ஏதோ கைக்கு வந்ததை இங்கொன்று அங்கொன்று எழுத ஆரம்பித்தேன். கொஞ்சம் ஆங்கிலத்திலும் எழுதினேன். மெல்ல மெல்ல ஆங்கிலத்தில் சகஜமாகப் பேஞ ஓடியது. எனக்கும் அந்தப் பாஷையில் எழுத வரும் என்பதை உணர்ந்தேன். அன்று முதல் அதிலே கவனம் செலுத்தத் தொடங்கினேன். அதன் பலனுக ஆங்கிலத்தில் கீதாஞ்சலியையும் ஆக்க முடிந்தது."

— விதுசேகர சாஸ்திரி, (ப்ரபாஸி)

**ஊழியரின் காசை வீசி எறிந்தார் குமாஸ்தா. அம்மையார் மனம் பதைத்தார். ஆனால், குமாஸ்தாவைக் கோபிக்கவில்லை. வேறு வழியில் பரிகாரம் தேடிவிட்டார்.**

# பெஸண்டின் பெருந்தன்மை

**ஜி. எ. நடேசன்**

அன்னி பெஸண்ட் அம்மையார் அடையாற்றுக்கு வந்து சில வருஷங்களே ஆகியிருக்கும். அதற்குள்ளாகவே எனக்கும் அவருக்கும் பரிசயம் உண்டாகிவிட்டது. அவரை நினைக்கும் போதெல்லாம் அவரைப் பற்றிய பல விஷயங்கள் என் நினைவுக்கு வருகின்றன. அடையாற்றில் ஆல்காட் பஞ்சமர் பள்ளிக்கூடம் ஒன்றை அம்மையார் ஸ்தாபித்தார். அதன் திறப்பு விழா அழைப்பு எனக்கு வந்தது. என் நினைவில் முதல் விஷயமாக நிற்பது இந்த அழைப்புத்தான். நான் அடையாற்றுக்குப் போனேன். எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்த பிறகு அவரும் நாங்கள் சிலருமாக ஓரிடத்தில் பேச உட்கார்ந்தோம். ஹிந்துக்கள் பஞ்சமர்களிடம் நடந்து கொள்ளும் கேவலமான முறையை அம்மையார் பலமாகக் கண்டித்தார். பஞ்சமர்களின் நிலையை உயர்த்துவதற்காக முக்கியமாக ஜாதி ஹிந்துக்கள் தாம் பெருமுயற்சி செய்யவேண்டும் என்று அவர் கூறினார். பஞ்சமர்களை நாம் பறையர் என்று சொல்வது அவருக்குப் பிடிக்கவே இல்லை. அப்படிச் சொல்வது பெருங்கொடுமை - மனிதப் பண்புக்கே பெருங்கொடுமை - என்பது அவர் அபிப்பிராயம். எழுத்திலும் பேச்சிலும் பஞ்சமர் என்ற சொல்லை அவர்கள் விஷயமாக முதல் முதலில் உபயோகித்தவர் அவர்தாம் என்பது என் ஞாபகம். ஜாதி ஹிந்துக்களைக் கண்டால் பஞ்சமர்கள் தூர ஓடி விலகவேண்டும், தொலைவில் நின்றுதான் பேசவேண்டும் என்ற பழக்கங்களை அவர் அறவே வெறுத்தார்.

பல பஞ்சமர்கள் அடையாற்றில் வேலை செய்தார்கள். வேலைக்காரர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்யும் குமாஸ்தா ஒரு ஹிந்து. இந்தக் குமாஸ்தா, ஊழியர் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லிக் கூப்பிட்டுச் சம்பளத்தை அவரவர் கையில் கொடுப்பார். ஆனால், ஊழியர் பஞ்சமராக இருந்தால், குமாஸ்தாவின் பக்கத்தில் அவர் வரக்கூடாது; தூரவே நிற்க வேண்டும். பஞ்சம ஊழியரின் சம்பளப் பணத்தை இந்தக் குமாஸ்தா வீசித் தரையிலே எறிவார். ஊழியர் அதைப் பொறுக்கிக்கொள்ள வேண்டும்.

ஒரு முறை இதைக் கண்ட அம்மையார் மனம் பதைத்தார். "அடுத்த மாதம் சம்பளம் கொடுக்கும்போது நானும் கூட இருக்கிறேன்" என்று சம்பளக் குமாஸ்தா

காப்பிரைட்: இந்தியன் ரிவ்யூ (ஆங்கிலம்-அக்டோபர் '47), 3, சுங்குராம செட்டி தெரு, சென்னை.

விடம் சொன்னர். அடுத்த மாதச் சம்பளம் கொடுபட்ட போது, அம்மையார் நேரே இருந்தார். ஒவ்வொருவரின் சம்பளத்தையும் பொட்டலங் கட்டச் சொன்னர். அதைத் தாமே அவரவர் கையிலே கொடுத்தார். அன்று முதல் அடையாற்றிலிருந்த ஹிந்துக்களெல்லாம் அங்கிருந்த பஞ்சமர்களிடம் அநுதாபத்தோடு நடந்துகொண்டனர்.

இப்படியெல்லாம் பஞ்சமர்களுக்காக மனமார உழைத்த முதல் பெரியார் அம்மையாரே. பஞ்சமர்களுக்காகப் பல பள்ளிக்கூடங்கள் ஏற்படக் காரணமாக இருந்தவர் அம்மையார்.

நம் நாட்டுக் கலை இயலை ஊட்டும் கல்வி நாட்டிலே பரவ வேண்டும் என்பதற்காகவும் இவர் நிறைய உழைத்தார். காசியில் இவர் முயற்சியால் முதல் முதல் ஏற்பட்ட மத்திய ஹிந்து காலேஜ்தான் இன்று காசி ஹிந்து சர்வகலாசாலையாக ஒளிவிடுகிறது. அம்மையார் பல பிரசங்கங்களில் ஹிந்துமதத்தின் பல அம்சங்களைப் பற்றிப் பேசியிருக்கிருர். அவதாரங்களைப் பற்றியும், ஸ்ரீராமபிரானைப் பற்றியும் அவர் எழுதிய நூல்கள் இன்றும் இலக்கியங்களாக நம்மிடையே இருக்கின்றன. அவர் செய்த பகவத் கீதையின் மொழி பெயர்ப்பு இன்றும் பெரு மதிப்புடையதாகவே இருக்கிறது.

ஹோம் ரூல் இயக்கம் என்ற இந்திய சுதந்தர இயக்கத்தை ஆரம்பித்து அதற்காகத் தீவிரமாக உழைத்த முதல் பெருமையும் அவரைச் சேர்ந்ததுதான்.

"இங்கிலாந்துக்கு ஆபத்து வரும் போது பெல்ஜியத்தின் சுதந்தரத்தைக் காப்பாற்றவேண்டும் என்றும், உடன்படிக்கைகளை மதிக்கவேண்டும் என்றும் பிரசாரம் செய்து இந்தியாவிலிருந்து போர்வீரர்களைப் பிரிட்டன் கூப்பிடுகிறது. ஆனல் அவர்கள் காரியத்தை முடித்துக் கொடுத்து, வேறு நாடுகளின் சுதந்தரத்தையும் காப்பாற்றிக் கொடுத்துவிட்டுத் திரும்பும் இந்தியப் போர் வீரர்கள் அடிமை இந்தியாவுக்குத் திரும்ப வேண்டி இருக்கிறது" என்று உருக்கமாக அம்மையார் லட்சுமணபுரி காங்கிரஸில் பேசிய பேச்சு எனக்கு இன்னும் நினைவிருக்கிறது.

அம்மையார் இறந்த பிறகு அவர் எழுதி வைத்துச் சென்ற உயிலில் ஒரு விஷயம் இருந்தது: "என்னிடம் உழைத்த வேலைக்காரர்களுக்கெல்லாம், அவர்கள் இன்று வாங்கும் சம்பளத்தைச் சாகும் வரையில் குறையாமல் கொடுத்து வர வேண்டும்" என்பதுதான் அந்த விஷயம். அம்மையாரின் பெருந்தன்மையையும் கருணையையும் காட்ட இது ஒன்று போதும்.

---

## நிறுப்பவர்கள்

பலசரக்குக் கடைக்காரன் புளியையும் வெல்லத்தையும் நிறுக்கிருன். தட்டான் பொன்னை நிறுக்கிருன். ஜட்கா வண்டிக்காரனே ஆளையே நிறுத்துப் பார்க்கிருன். "முன் பாரம் போதாது ; முன்னே வாருங்கள்'' என்று அவன் சொல்வதற்கு வேறு என்ன அர்த்தம் ?

நாய்க்கு அநேக நண்பர்கள் இருப்பதன் காரணம் என்ன தெரியுமா? அது தன் நாவை ஆட்டாமல் வாலை ஆட்டுவதுதான்.

—ஆலிஸ் கிப்ஸன்.

# புயல் ஹேஷ்யம்

என். எஸ். மலூர்கர்

நாளைக்கு மழை வருமா? புயல் அடிக்குமா? இந்தக் கேள்விக்கு வானிலே ஆராய்ச்சி அதிகாரிகள் தினந்தோறும் பத்திரிகையிலும் ரேடியோவிலும் பதில் சொல்லி வருகிறார்களே, அது எப்படி? எந்தக் கருவியும் அதை அவர்களுக்குக் காட்டி விடவில்லை. பல அநுமானங்களைக் கொண்டு, ஹேஷ்யமே செய்கிறார்கள். அந்த ரகஸ்யத்தை விளக்குகிறார், இவ் விஷயத்தில் அநுபவமுள்ள இந்த நிபுணர்.

இந்தியாவிலும் இந்தியாவின் அருகிலுள்ள கடல்களிலும் புயல் வருமா என்று சொல்ல வேண்மோனால், பூமத்திய ரேகையின் சுற்றுவட்டக் காற்று நிலை தெரியவேண்டும். பூமத்திய ரேகையின் இரண்டு புறமும் உள்ள உஷ்ணப் பிரதேசத்தில் புயல் ஏற்படுமா, புயல் இருக்கிறதா என்று தெரிய வேண்டுமானால், மூன்று வகைக் காற்றுகளின் போக்கு நமக்குத் தெரிய வேண்டும்: (1) பூமியின் தென் பாதியிலிருந்து பூமத்திய ரேகையைக் கடந்து வடபாதிக்கு வீசும் கடற் காற்று; (2) வட பசிபிக் சமுத்திரத்திலிருந்து புறப்படும் கடற் காற்றும் வட ஆசியாவிலிருந்து புறப்படும் நிலக்காற்றும் கலந்த கலவைக் காற்று; (3) வட துருவத்திலிருந்தும் உஷ்ணமண்டலத்துக்கு வடக்கே உள்ள நிலப் பகுதிகளிலிருந்தும் கலவையாக வீசும் நீராவி குறைந்து வறண்ட நிலக்காற்று.

முதலில் சொன்ன கடற் காற்றின் நிலைதான் உஷ்ணப் பிரதேசப் புயல் ஹேஷ்யத்துக்கு மிகவும் அவசியமானது. இதுதான் பூமத்திய ரேகையின் தெற்கே உள்ள பரந்த கடற் பிரதேசத்திலிருந்து பூமத்திய ரேகையைக் கடந்து வடக்கே வீசும் காற்று. மற்ற இரண்டு காற்றுகளும் பூமத்திய ரேகைக்கு வடக்கே வீசுவன. ஆகையால் இந்தியாவில் உள்ளவர்கள் இவற்றைப் பற்றிச் சுலபமாக அறிந்துகொள்ளலாம்.

மேற் சொன்ன கடற் காற்று சாதாரணமாகப் பூமத்திய ரேகைக்குத் தெற்கேதான் வீசிக்கொண்டிருக்கும். ஆனால் பூமத்திய ரேகைக்குத் தெற்கே புயல் ஏற்பட்டால், இதன் போக்கு அதனால் தடைப்படும். அப்பொழுது இது பூமத்திய ரேகையைக் கடந்து வடபாதிக்கு வீசும். எனவே இந்தக் காற்று அப்பொழுது தெற்கே புயல் வீசுகிறது என்பதைக் காட்டும் நாடிக் காற்றாகிறது.

தெற்கே ஏற்பட்ட புயலால் தடைப்பட்டு இப்படி ஒரு முதல் நாடிக் காற்று வடக்கே வீசினால், இதற்கு மேற்கேயிருந்தும் இப்படியே தடைப்பட்டு இன்னொரு துணைநாடிக் காற்று வடக்கே வீசும். அதற்கு மேற்கே இன்னொரு துணை நாடி வீசும். இப்படித் துணைநாடிக் காற்றுச் சங்கிலி ஒன்றே உண்டாகிவிடும். இந்தத் துணைநாடிகள் இந்து மகா சமுத்திரத்தின் வழியே வீசும் போது, முன் சொன்ன

காப்பிரைட்: கரண்ட் ஸயின்ஸ் (ஆங்கிலம் - செப்டம்பர் '47), பெங்களூர்.

அடுத்த இரண்டு வகைக் காற்றுகளும் இவற்ேறாடு கலந்துகொண்டால், வடக்கு இந்து மகா சமுத்திரத்தில் ஒரு புயல் ஏற்பட்டுவிடும்.

சைனக் கடலில் புயல் என்றால், இந்து மகா சமுத்திரத்திலும் ஒரு புயல் தோன்றும். வங்காளக் குடாக்கடலில் புயல் என்றால், அரபிக் கடலின் தென் கோடியிலும் ஒரு புயல் தோன்றுவது சகஜம். காரணம், மேற் சொன்ன நாடிக் காற்றுச் சங்கிலியே.

எங்கேயோ ஓரிடத்தில் புயல் இருப்பதாகத் தெரிந்தால் போதும்; அதன் பலனாக வேறு எங்கெல்லாம் புயல் தோன்றும் என்று சொல்லி விடலாம். ஆஸ்திரேலியாவின் வட பகுதியில் புயல் என்றால், துணைநாடிகள் காரணமாக இந்து மகா சமுத்திரத்தின் தென்பகுதியிலும் ஒரு புயல் தோன்றும் என்று சொல்லி விடலாம். முதல் புயல்பற்றிய செய்தி பத்திரிகைச் செய்தியாகவோ ரேடியோச் செய்தியாகவோ இருந்தால்கூடப் போதும். புயல் வீசிய செய்தியே வேண்டாம்; புயலை அநுமானிக்கும் செய்தி இருந்தாலும் போதும்.

1946ஆம் ஆண்டு டிசம்பர் 2-ஆம் உ ஆஸ்திரேலியாவின் தலைநகரான மெல்போர்னிலிருந்து ஒரு ரேடியோச் செய்தி வந்தது. முந்திய வார முடிவில் (சுமார் நவம்பர் 30) நியூகினிக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலுள்ள டாரெஸ் ஜலசந்தியில் ஒரு கப்பல் முழுகிவிட்டதாக அந்தச் செய்தியால் தெரிந்தது. அங்கே ஒரு கடும் புயல் வீசியதாகவும் அந்தச் செய்தி சொல்லியது. இந்தப் புயலின் விளைவாக, டிசம்பர் முதல் வாரம் முழுவதும் வங்காளக் குடாக் கடல் கொந்தளித்தது. சென்னை ராஜதானி முழுவதிலும் போக்குவரத்து நிலைகுலைந்தது.

உஷ்ணப் பிரதேசத்துக்கு வெளி எல்லையிலுள்ள எகிப்து, பாலஸ்தீனம் முதலிய பிராந்தியங்களில் வீசும் புயலைப் பொறுத்தவை இந்தியாவின் குளிர்காலப் புயல்கள். இந்தப் பிரதேசங்கள் வெறும் வெட்ட வெளிகளாகவும் பாலைவனங்களாகவுமே இருப்பதால், இங்கே கால நிலை ஆராய்ச்சிச்சாலைகள் இல்லை. இங்கே ஏற்படும் சேதம் மிக அதிகமாக இருந்தாலொழிய, சேதத்தைப் பற்றிய செய்திகளும் பத்திரிகைகளிலோ ரேடியோவிலோ அடிக்கடி வருவதில்லை.

1944-ஆம் வருஷம் மார்ச் கடைசியில் ஒரு நாள் துருக்கியின் தலைநகரான அங்காராவிலிருந்து வர வேண்டிய ரேடியோச் செய்தி வரவில்லை. 'சரி, அங்கே புயல் இருக்க வேண்டும்' என்று இந்தியக் கால நிலை நிபுணர் ஊகித்தார். ஏப்ரல் மாதம் முதல் வாரம் வட இந்தியாவில் ஒரு சிறு புயல் வீசும் என்று அவர் ஹேஷ்யம் கூறினார். அவர் கூறியபடியே அந்த வாரம் முழுவதும் வட இந்தியாவில் நல்ல மழை பெய்தது. பின்னால் அங்காராவிலிருந்து வந்த ஒரு செய்தி, மார்ச் கடைசியில் துருக்கி, எகிப்துப் பிராந்தியத்தில் புயல் வீசிற்று என்பதை ஊர்ஜிதம் செய்தது. இதனால் ஏற்பட்ட வட இந்தியப் புயல் எப்ரல் மீ 4ஆம் உ ஓய்ந்துவிட்டது. இதற்குக் காரணம் பூமத்திய ரேகைக்குத் தெற்கே இன்னொரு புயல் தோன்றியது தான்.

தென் பாதியில் தோன்றும் முதல் புயல் காரணமாக வட பாதியில் ஒரு துணைப் புயல் தோன்றுவதாக வைத்துக்கொள்வோம். இந்த இரண்டு புயல்களுள் ஏதாவது ஒன்று வலுத்துவிட்டால் மற்றது ஓய்ந்துவிடும்.

நவாபைப் பிரிட்டிஷார் எப்படிக் கசக்கிப் பிழிந்தார்கள் என்ற இந்த உருக்கமான சம்பவம் கட்டுக்கதை அல்ல. சரித்திரம்.

# மீர் ஜாபரின் நஷ்ட ஈடு

## பி. வி. ராய்

துன்புற்ற மக்களுக்குக் கஷ்ட நிவாரணமும் நஷ்ட ஈடும் வேண்டும் என்று இன்று பத்திரிகைகளில் சகஜமாய் வாதிக்கிறார்கள். ஆனால், பதினெட்டாம் நூற்றாண்டில் இம் மாதிரி நடந்த ஒரு சம்பவம் பெரும்பாலோருக்குத் தெரிந்திராது.

கல்கத்தா நகரை 1756-ஆம் ஆண்டு சிராஜ் உத்தௌலா படையெடுத்துப் பிடித்தார். அடுத்த வருஷமே பிரிட்டிஷார் அந்த நகரைத் திருப்பிப் பிடித்தார்கள். அதன் பின்பு, வங்காளத்தின் அடுத்த நவாபான மீர் ஜாபரிடமிருந்து, எழுபத்தேழு லட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்ட ஈடாகப் பிரிட்டிஷார் கசக்கிப் பிழிந்துகொண்டார்கள்.

பிளாசி யுத்தத்தில் சிராஜ் உத்தௌலா தோற்றபிறகு, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி வியாபாரிகள், ராஜாக்களையே ஆக்கவும் அழிக்கவும் வல்ல சிருஷ்டிகர்த்தாக்களாக மாறிவிட்டார்கள். 1761-ஆம் ஆண்டு கல்கத்தா கவர்னராக வந்த வான்ஸிடார்ட், வங்காள சுபேதார் பதவியிலிருந்து மீர் ஜாபரை விலக்கிவிட்டார். மீர் காஸிமை அந்தச் சுபேதார் பதவியில் நியமித்தார். சிறிது காலத்தில் அவருக்கும் ஆங்கிலேயருக்கும் மனஸ்தாபம் மூண்டது. அதன் பலனாக, பாட்னா நகரில் உள்ள சகல ஆங்கிலேயரும் படுகொலை செய்யப்பட்டார்கள். வங்காள மகாராஜாக்கள் பலரும் கொலையுண்டார்கள். ஆங்கிலேயர் படையெடுத்து, மீர் காஸிமைத் தோற்கடித்தார்கள்.

இச்சமயம் லார்டு கிளைவ் இங்கிலாந்தில் இருந்தார். அவரை ஆங்கிலேயர் மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பினார்கள். 1765-ஆம் ஆண்டு மே மீ 3-ஆம் உ கிளைவ் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். அவரது முகத்தைக் காணவும் வெட்கங்கொண்டு, முன்னதாகவே வான்ஸிடார்ட் கப்பலேறிவிட்டார்.

பேராசை கொண்ட ஆங்கில உத்தியோகஸ்தர்கள் ஏழை நவாப் மீர் ஜாபரை நிர்ப்பந்தம் செய்து நஷ்ட ஈடு என்று சொல்லி மேலும் மேலும் ஏராளமாய்ப் பணம் வசூலித்த அநியாயத்தை, கிளைவ் விசாரணை செய்தார்.

ஒரு சரித்திராசிரியர் சொல்கிறார்: "கிளைவ் தலைமையில் ஒரு கமிட்டி அமைந்தது. மீர் ஜாபரிடம் கம்பெனி அதிகாரிகள் வசூலித்த நஷ்ட ஈடுகளையும் நன்கொடைகளையும் பற்றி அது விசாரித்தது. மகாராஜா நந்தகுமார், மகாராஜா நவ

காப்பிரைட்: ஓரியெண்ட் (ஆங்கிலம் - 14 செப்டம்பர், '47),
93 - ஏ, தரம்தோலா தெரு, கல்கத்தா.

கிருஷ்ணன் ஆகிய இருவரும் சாட்சி சொன்னார்கள்.''

நவகிருஷ்ணன் சொன்ன சாட்சியமாவது: ''நவாப் மீர் ஜாபர் கல்கத்தாவுக்கு வந்த இரண்டொரு தினங்களுக்கெல்லாம், அவரிடம் வான்ஸிடார்ட் நாற்பது லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கேட்டார். 'முன்னே பத்து லட்சந்தானே கேட்டீர்கள்?' என்று கோபமாய்ச் சொன்னார் நவாப். தாம் பல்லக்கில் ஏறுகையில் நவாப் என்னிடம், 'நீர் ஸ்பென்ஸரிடம் போம். அவர்கள் என்னதான் நினைத்துக்கொண்டு இப்படி அநியாயமாய்ப் பணம் கேட்கிறார்கள் என்று அவரைக் கேளும்' என்றார். அப்படியே நான் ஸ்பென்ஸரிடம் போனேன். 'துன்புற்றவர்களின் நஷ்டங்களையெல்லாம் விசாரணை செய்தவன் நான். அந்த நஷ்டங்களை யெல்லாம் கணக்கிட்டால், கோரிய தொகையே வருகிறது' என்று அவர் சொல்லிவிட்டார்.

''வான்ஸிடார்ட் புதிய கோரிக்கை ஒன்றை விடுத்தார். நவாப் என்னை ஸ்பென்ஸரிடம் மீண்டும் அனுப்பினார். 'ராணுவத்துக்கென்றும் நஷ்ட ஈட்டுக்கென்றும் ஒவ்வொரு மாதமும் துருப்புகளுக்குச் சம்பள மென்றும் எத்தனை பணம் கறக்கிறார்கள்! நாடோ களைத்துப் போய், இன்னும் ஒரு நிலவரத்துக்கு வரவில்லை. இப்போது கடற்படைக்கு வேறே பணம் வேண்டுமாம்! இதெல்லாம் என்னால் சாத்தியமே இல்லை. இப்படி அவர்கள் செய்துகொண்டிருந்தால், நான் ராஜீநாமாச் செய்துவிடுகிறேன். அவர்கள் யாரை வேண்டுமானாலும் நியமித்துச் சர்க்காரை நடத்தட்டும். இப்படி அவரிடம் சொல்லும்' என்றார் நவாப். ஸ்பென்ஸரிடம் போய் இதை நான் சொன்னேன். 'கோரிக்கைகளில் பலவும் நவாப் ஏற்கனவே ஒப்புக்கொண்டவை. நானே இன்னும் கவர்னராகவில்லை. நவாப் இந்த நாற்பது லட்சரூபாய் நஷ்ட ஈட்டுக் கோரிக்கையை ஒப்புக் கொண்டு விடுவதே நல்லது. ஏனென்றால், தினம் தினம் புதிது புதிதாகக் கோரிக்கைகள் வந்து கொண்டே இருக்கின்றன. அவற்றைத் தடுக்க, இந்த நாற்பது லட்சத்தை நவாப் உடனே ஒப்புக் கொள்வதுதான் சரியான வழி' என்றார் ஸ்பென்ஸர். நவாபுக்கு ஆத்திரம் வந்தது. 'ஐரோப்பாவிலிருந்து ஒரு பதில் வர எத்தனை நாளாகும்?' என்றார் நவாப். பதினெட்டு மாதம் ஆகும் என்று நான் சொன்னேன். உடனே நவாப் உட்கார்ந்து, கம்பெனி டைரக்டர்களுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதத் தொடங்கினார். ஆனால், நவாப் அந்தக் கடிதத்தை எழுதி முடிக்கு முன்னேயே நாற்பது லட்சம் ரூபாய்ப் பத்திரத்தில் அவர் கையெழுத்திட வேண்டியதாயிற்று. இதற்குப் பிறகு, இன்னும் ஓர் எட்டு லட்சம் ரூபாய் கேட்கத் தொடங்கி விட்டார்கள்.''

கடற்படைக்குப் பணம் கேட்ட புதிய கோரிக்கையைப்பற்றி நவகிருஷ்ணன் சொன்ன சாட்சியமாவது: ''நான் 1763 - ஆம் ஷூ மேஜர் ஆடம்ஸின் படையோடு தூர்க்காதி நகரில் இருந்தேன். அங்கே மேஜர் ஆடம்ஸுக்கு வான்ஸிடார்ட்டிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதன் கருத்தை அவர் என்னிடம் சொன்னார்: 'அட்மிரல் வாட்ஸனுடன் முன்பு இங்கே கடற்படை வந்தபோது, கடற்படை, தரைப்படை இரண்டையும் கூட்டாக உபயோகித்துக் கொள்வதற்காக நவாப் ஐம்பது லட்சம் ரூபாய் பணம் கொடுத்தார். டிங்கர் இப்போது வந்திருக்கிறார். இவர் மிக

வும் பெரிய மனிதர். இவருக்கு 25 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். இதுபற்றி நவாபிடம் சொல்லவும்' என்பது கடிதத்தின் கருத்து. நவாபிடம் இதை நான் சொன்னேன். 'யார் இந்த டிங்கர்? இவர் எனக்கு ஒரு சேவையும் செய்யவில்லையே. டிங்கரை எனக்கு வேண்டியிருந்தால், அழைத்திருப்பேன். அவருக்குச் சம்மானமும் கொடுத்திருப்பேன். அவர் எனக்கு என்ன செய்தார்?' என்று நவாப் பதில் சொன்னார்.''

இந்த உப்ரிதண்டத்தைச் செலுத்த நவாப் மறுத்தார். நந்தகுமாரைத் திவான் பதவியிலிருந்து நீக்கித் துர்லபராமைத் திவானாக நியமித்து விடப்போவதாக, நவாபை வான் விடார்ட் மிரட்டினார். இதற்கிடையில் மேஜர் ஆடம்ஸ் இறந்துவிட்டார். நவாபை இப்போது டிங்கரும் மிரட்டத் தொடங்கினார். இதுபற்றி நவகிருஷ்ணன் சொல்கிறார்:

''டிங்கர் என்னிடம், 'மேஜர் ஆடம்ஸ் நவாபுக்கு நல்ல நண்பர். அவரை நவாப் இழந்துவிட்டார். ஆனால் நான் ஆடம்ஸைவிட மிகப் பெரிய மனிதன். நவாபுக்கு அதிகச் சேவை செய்வேன். கவுன்ஸிலிடமும் கம்பெனியிடமும் இங்கிலாந்து மன்னரிடமுமேகூட, நவாபின் விவகாரங்களைச் சரிக்கட்டுவேன். இதை நீர் நவாபுக்குச் சொல்லும்' என்றார். பிறகு ஏராளமான காகிதங்கள் இருந்த ஒரு பெட்டியை எடுத்துக் காட்டினார். 'இதோ பாரும். இவையெல்லாம் இந்த நாட்டு நிலவரங்களைப்பற்றி இங்கிலாந்து மன்னருக்கு நான் எழுதிய காகிதங்களாகும். அவர் இவற்றை மிகவும் கவனிப்பார். இரண்டே வருஷத்தில் நவாபுக்குக் கவுன்ஸிலைப்பற்றிக் கவலையே இல்லாதபடி நான் செய்துவிடுகிறேன்' என்றார். கப்பற் படைக்குப் பணம் கொடுக்கச் சம்மதிக்காவிட்டால், தாமோ நந்தகுமாரோ கல்கத்தாவை விட்டுப் போக வான் விடார்ட் விடமாட்டார் என்று நவாப் என்னிடம் சொன்னார். ஆகவே, தாம் சம்மதிக்க வேண்டியதுதான் என்றும் கூறினார். அதன் பலனாகப் பல பத்திரங்கள் கையெழுத்தாயின. பின்பு, தாம் கடற்படைக்குக் கொடுத்த பணம் தம்மிச்சையாகவும் சுதந்தரமாகவும் அளித்த நன்கொடையே என்று நவாப் ஒரு கடிதம் தரவேண்டுமென்று அவரை வான்விடார்ட் கேட்டாராம். இதை டிங்கர் எனக்குச் சொன்னார்.''

ஆஹா! எவ்வளவு 'தம்மிச்சை'யான நன்கொடை!

---

## 'படி படி'

மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையரவர்கள் ஓர் இடத்திற்குச் சென்று கனவான் ஒருவரைச் சந்தித்துவிட்டுத் திரும்பி வீட்டுக்குப் புறப்பட்டார். ஒரு படிக்கட்டில் இறங்கிவர வேண்டியிருந்தது. தளர்ந்த பருவத்தினராகிய ஐயரவர்களை ஓர் இளைஞன் மெல்ல அழைத்துவந்தான். படிக்கட்டு வந்தவுடன், ''படி, படி'' என்றான். உடனே ஐயரவர்கள், ''நல்ல உபதேசம், அப்பா; நான் இன்னும் படித்துக்கொண்டுதான் இருக்கிறேன்; படிந்து நடக்கவும் முயன்று வருகிறேன்'' என்றார்.

# காந்தி வாழ்வும் வாக்கும்

நினைப்பதைச் சொல்லுவார், சொல்லுவதைச் செய்கையில் காட்டுவார் காந்திஜி. அவர் வாழ்வு நமக்கு வழிகாட்டி. அவர் சொல் நமக்கு அமுதம்.

என்னைச் சுற்றிலும் உள்ள சகலமும் சதா மறைந்துகொண்டிருக்கின்றன; சதா மாய்ந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சகல மாறுதல்களுக்கும் இடையிலே, ஒரு ஜீவசக்தி நிலவுவதை நான் மங்கலாகக் காண்கிறேன். அது மாருதது; சகலத்தையும் சேர்த்திணைப்பது; சிருஷ்டிப்பது; மாய்ப்பது; மறுபடியும் சிருஷ்டிப்பது. அறிவுறுத்தும் அந்த ஜீவ சக்தியே ஆத்மா, அல்லது கடவுளாகும். என் புலன்களினுல் மட்டிலுமே காணும் வேறெந்தப் பொருளும் நிலைத்திருக்க முடியாது; நிலைத்திருக்கப்போவதில்லை. எனவே, அவனே உள்ளவன்.

இந்தச் சக்தி நன்மை புரிவதா? கேடு புரிவதா? அது முற்றும் நன்மை புரிவதாகவே நான் காண்கிறேன். ஏனென்ருல், சாவுக்கு நடுவே வாழ்வு நிலைத்திருக்கிறது; பொய்க்கு நடுவே உண்மை நிலைத்திருக்கிறது; இருளுக்கு நடுவே ஒளி நிலைத்திருக்கிறது. இதை நான் காண முடிகிறது. ஆகவே, கடவுள் உயிரும் உண்மையும் ஒளியுமாவான் என்று நான் ஊகிக்கிறேன். அவன் அன்பு மயமாவான்; உன்னத நன்மையுமாவான். - மகாத்மா காந்தி

● **காந்தியை அறிந்த கஸ்தூர்பா:** 1922 - க்கும் 1924 - க்குமிடையே மகாத்மா காந்தி எரவாடா சிறையில் இருந்தார். கஸ்தூர்பா அவரைக் காண வந்த போது, அவர் மிகவும் மெலிந்திருந்தார். ஏதோ காரணத்தினுல் நான்கு வாரமாக வெறும் பாலையே உட்கொண்டு வந்ததனுல், அவர் நிறை குறைந்திருந்தது. படிகளில் ஏறும்போது அசக்தியினுல் அவர் கால்கள் தடுமாறின. கஸ்தூர்பாவும் மற்றவர்களும் அவரைப் பழம் சாப்பிட வற்புறுத்தியதும், அதற்கு அவர் ஒப்புக்கொண்டார்.

இதைக் கண்ட எரவாடா சிறை

அதிகாரி, "காந்தி எப்போதுமே இப்படியெல்லாம் செய்கிறார்! இதில் என் குற்றம் ஏதுமில்லை" என்றார்.

"யெஸ், யெஸ். ஐ நியூ மை ஹஸ்பண்ட். ஹி ஆல்வேஸ் மிஸ்சிப்" (ஆம், ஆம். நான் அறிவேன் என் கணவரை. அவர் எப்போதும் விஷமந்தான்) என்று அரைகுறை ஆங்கிலத்தில் கஸ்தூர்பா பதில் சொன்னார்.

—கிர்லோஸ்கர்.

* * *

● **வேரும் கனியும்:** ஓர் ஆங்கிலப் பத்திரிகை நிருபர் பெலிய கட்டாவுக்கு வந்தார். "தங்கள் செயல்களை யெல்லாம் ஊன்றிக் கவனிக்கும்போது, அத்தனைக்கும் மூலவேர் போல் இருப்பது மோட்ச விருப்பமே என்று எனக்குப் புலப்படுகிறது. ஆனால், இதை என் நீங்கள் போதிய அளவு அழுத்தமாய்ச் சொல்லவில்லை?" என்று காந்திஜியைக் கேட்டார்.

காந்திஜி புன்சிரிப்புடன் சொன்ன பதிலாவது: "மோட்ச விருப்பம் அவற்றில் இருக்கத்தான் இருக்கிறது. ஆயினும், அதில் மற்றவருக்குச் சம்பந்தமில்லை. மோட்ச விருப்பம் தனிப்பட்டவனின் சொந்த விஷயம். உலகத்துக்கு வேரைப் பற்றிக் கவலையில்லை; கனியைப் பற்றியே கவலை. ஆனால், மரத்துக்கோ வேரைப் பற்றியே முக்கியமாய்க் கவலை; கனியைப் பற்றியல்ல. தனி மனிதன் தன் அந்தராத்மாவிலே தான் ஒருமுனைப்படவேண்டும்; தன் உழைப்பையும் துன்பங்களையும் கொண்டு அதை ஊட்டி வளர்க்க வேண்டும். வேரே அவனுடைய முக்கியக் கவலையாக இருக்க வேண்டும். ஆனால், சமூகத்துக்கோ கனியைப் பற்றி மட்டிலுமே கவலை.



ஒரு மனிதன் செய்யும் செயலின் கனிகளைப்பற்றி யன்றி, அவனைப்பற்றித் தீர்ப்புக் கூற வேறு என்ன ஆதாரம் உண்டு? கனிகளைக் கொண்டுதானே, மரத்தின் தன்மையை நிர்ணயிக்கிறோம்?"

—என். கே. போஸ் (ஹரிஜன்-28-10-47)

* * *

● **'இந்தியாவின் ராஜா':** காந்தி வந்திருப்பதாகக் கேள்வியுற்று, ஒரு முட்டாள் கூட்டம் எங்கள் வீட்டைப் படையெடுத்து வந்துவிட்டது. டெலிபோன் சதா காலமும் சத்தமிட்டுக் கொண்டிருந்தது. போட்டோக்காரர்கள் புதர்களில் மறைந்து படம் பிடித்த வண்ணம் இருந்தார்கள்.

"இந்தியாவின் ராஜா வந்திருப்பதால், அவர் தங்கும் வரையில் அவருக்குச் சாப்பாடு அளிக்கும் பொறுப்பை நாங்களே தாம் ஏற்றுக்கொள்வோம்" என்று பால்காரர் சங்கம் எனக்கு எழுதியது.

பாதிரிமார்களிடமிருந்து பல கடிதங்கள் வந்தன. "எங்கள் நாட்டு க்ஷேமத்துக்காக நடைபெறும் லாட்டிரியில் பத்து அதிருஷ்ட எண்களை எழுதுங்கள்" என்று சில இதாலியர்கள் கடித மூலம் மகாத்மாவை வேண்டினார்கள்.

—ரோமேன் ரோலந்து.

முன்காலத்திய இரட்டைப் புலவர்களைப் போல இந்த மூன்று ஆசிரியர்களும் சேர்ந்தே எந்தக் கட்டுரையும் எழுதுகிறார்கள்.

# வேர்க்கடலையின் வருங்காலம்

பன்ஸி காந்தி
புரொபஸர் ஜயந்திலால் ஓஜா
டாக்டர் நரஸிம்ம ஷா

நற்காலக் கைத்தொழில்களுக்கு எண்ணெய்களும் எண்ணெய் விதைகளும் மிகவும் பயன்படுகின்றன. வேர்க்கடலையும் கடலை எண்ணெயும் அவற்றுள் முக்கியமானவை. யுத்தத்துக்கு முன்பு ஆறு லட்சம் டன் வேர்க்கடலை அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகி வந்தது.

இந்தியாவில் வேர்க்கடலை பொதுவாக எங்கும் விளைகிறது. முக்கியமாகச் சென்னை பம்பாய் மாகாணங்களிலும், தக்காணத்திலும், காட்டியாவாடிலும் மிகுதியாக விளைகிறது. செக்கில் ஆட்டி எண்ணெய் எடுப்பதோடு, அங்கங்கே பெரிய ஆலைகளும் இருக்கின்றன. திராவகமாக எண்ணெய் எடுக்கும் முறை இன்னும் நமது நாட்டுக்கு வந்ததாகத் தெரியவில்லை.

புரொட்டீன் நிறைய இருப்பதனால், மக்கள் வேர்க்கடலையை வறுத்தும் மாவரைத்தும் உணவாகக் கொள்ளுகிறார்கள். வர்ணம், செயற்கைச் சாம்பிராணி, சோப்பு, வாட்டர் புரூப், ரப்பரில் செய்த செயற்கைப் பண்டங்கள், அச்சிடும் மை, மெழுகுவத்தி, மருந்து முதலிய பல தொழில்களுக்கு வேர்க்கடலை பயன்படுகிறது. கறக்கும் பசுக்களுக்குக் கடலைப் பிண்ணாக்கு மிகுந்த உரம் தருகிறது.

ஸோயாபீனைவிட வேர்க்கடலை நல்லது; சுவையுள்ளது. ஸோயா பீனில் புரொட்டீன் அதிகம். வேர்க்கடலையில் கொழுப்புச் சத்து அதிகம்; வைடமினும் கனிப்பொருள்களுங்கூட நிறைய இருக்கின்றன. வேர்க்கடலையில் ஒரு பவுண்டுக்கு 2570 கலோரியும், ஸோயாபீனில் ஒரு பவுண்டுக்கு 1935 கலோரியும் இருக்கின்றன. பால், கோழிமுட்டை, மாமிசம் இவற்றிலுள்ள புரொட்டீனிலிருந்து உண்டாகும் வலுவும், வேர்க்கடலையிலுள்ள புரொட்டீனிலிருந்து உண்டாகும் வலுவும் சமமாக இருக்கின்றன.

ஆலிவ் எண்ணெயும் கடலை எண்ணெயும் அவற்றின் அடக்கப் பொருள் பற்றிய மட்டில் சமமானவை. பூச்சு மருந்துகள், பிளாஸ்டர் முதலியவற்றைத் தயாரிப்பதில் ஆலிவ் எண்ணெய்க்குப் பதிலாகக் கடலை எண்ணெயை உபயோகிக்கிறார்கள். இரண்டு எண்ணெய்களையும் ஒன்றாகக் கலந்துவிட்டால் பிரித்தெடுப்பது சிரமம். கடலை எண்ணெயில் வைடமின் 'ஏ' யின் திரவம் நீண்டகாலம் பாதுகாப்புடன் இருக்கும்.

வேர்க்கடலையையும் கடலை எண்ணெயையுங்கொண்டு வருங்காலத்தில் நம் நாட்டில் பல புதிய மருந்துகளும் கைத்தொழில்களும் உண்டாக்க முடியும்.

காப்பிரைட்: ஊர்மி (குஜராத்தி - ஜுலை '47), பாரதி ஸாஹித்ய ஸங், பம்பாய் 1.

வால் நட்சத்திரம் என்ற பொருளுடைய புனைபெயர் கொண்ட இந்த ஆசிரியர், அதுபோலவே புரட்சி கரமாய்க் குஜராத்தி இலக்கியத்தில் ஒளி வீசுகிறார்.

# எது நல்ல நடை?

## தூமகேது

வசனத்துக்குள்ளே மறைந்து உறைய வேண்டிய காவியப் பண்பைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்காத வரைக்கும், குஜராத்தி இலக்கியத்திலே நாம் எதிர்பார்க்கும் உன்னத சிகரத்தைக் காணப்போவதில்லை. மணிலால் நபுபாய், ஆனந்தசங்கர், கோவர்த்தனராம் முதலிய எத்தனையோ பேர் வசன இலக்கியத் துறையில் எவ்வளவோ அழகிய சிருஷ்டிகளைச் செய்திருக்கிறார்கள்; ஆனால் இவர்களில் யாரிடமும் - கோவர்த்தனராமிடங்கூட - நாம் வேண்டுகிற மறைந்து உறையும் காவியப் பண்பு இல்லை. நாம் வேண்டுகிற இந்தப் பொருள் ஒரு தனிக் கலை. கவி நாநாலாலின் அலங்கார வசனத்திலும் இது இல்லை; முன்ஷியிடமும் இல்லை; மகாத்மா காந்தி, மச்ரூவாலா, காலேல்கர் ஆகியவர்களிடமும் இல்லை. இவர்களில் ஒவ்வொருவரும் அற்புதமான தனித்தனி வசனநடையைத் தோற்றுவித்தவர்கள் என்பதை நாம் மறுக்கவில்லை; ஆனால் இவர்களுடைய சிந்தனைப் போக்கிலே சிறப்பாகத் தென்படும் பொருளுக்கு, அழகிய மாசற்ற மோகனமான கலையுருவைத் தாங்கும் சக்தி இல்லை. ரவீந்திரர், ரஸ்கின், ஜிப்ரான் ஆகியவர்களிடம் தென்படும் கலையுருவம் இவர்களிடம் இல்லை. சொல், வாக்கியம், அமைப்பு, கட்டுக்கோப்பு, நடையின் ஏற்ற இறக்கம், சிந்தனை, உணர்ச்சி, பற்று ஆகிய யாவும் மறைந்து, எழுத்தாளனின் தனிப்பட்ட தன்மையும் கொள்கையும் விஷயத்துக்குள்ளே ஊடுருவிக் கலந்து, அந்த வசனத்திலே ஒவ்வொரு பகுதியும் ஒரு முழுச் சித்திரமாகவும், முழு வசன ஓவியத்தோடு ஒன்றுபட்டு இயைந்ததாகவும் இருக்கக் கூடிய கலையுருவமே நாம் வேண்டுவது.

ஒரு விஷயத்திலே சுவை கண்டுவிட்டால் மட்டும் போதாது; அந்தச் சுவையை அழகிய வசனத்திலே கவர்ச்சிகரமாக அமைக்கும் திறமை வேண்டும். இந்தத் திறமை வாய்ந்த எழுத்தாளர்கள் மிகவும் அருமையாகத்தான் இருப்பார்கள். ஒரு கலைச் சிருஷ்டியின் வெவ்வேறு பகுதிகளையும் எழில்மய மாக்குவதற்கு, எழுத்தாளனுக்கு மிக்க அமைதியும் ஒருமுகமான உள்ளப்பான்மையும் வேண்டும். காதைத் தீட்டி வைத்துக்கொண்டு உலக ஒலியைக் கேட்கும் குணம் எல்லாருக்கும் வராது. கலைப்பொருள் செம்மையாக அமைய வேண்டுமே என்ற அச்சத்தோடு முன் ஜாக்கிரதையும், விஷய அறிவும், உள்ளத்திலே அமைதியான மகிழ்ச்சியும் வேண்டும். இவ்விதம் எழுதப்படும் வசனத்திலே

காப்பிரைட்; நவரசனு (குஜராத்தி - ஜூலை '47), பாரதி ஸாஹித்ய ஸங், பம்பாய் 1.

ஓர் அழகிய காவியப்பண்பு மறைந்து உறையும். பொதுமக்களின் பேச்சுக்களையும் வெவ்வேறு சூழ்நிலைகளையும் விதவிதமான சொற்களையும் அடிக்கடி சிந்திப்பதனால் நமக்குப் புதிய அறிவும், அழகுப் பார்வையும், உள்ள நிறைவும் உண்டாகும். அப்பொழுது நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லும் அமைதியையும் தூய்மையையும் வேகத்தையும் பரப்பும்.

இன்று மனிதன் பேசிவரும் சொற்களைப் பார்த்தால் - ஆயிரமாயிரம் மக்களைக் கொன்று குவித்துக்கொண்டே அவன் வளவள வென்று பேசும் மோகனமான தத்துவ பாஷையைக் கேட்டால் - சொல்லின் உண்மையான ரகசியத்தை நாம் இன்னமும் அறியவில்லை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. வசன இலக்கியத்தைப் பயன்படும் முறையிலே வளர்க்க இது தக்க தருணம். அணுக்குண்டைப் போலவே, வீணாக உளறும் சொற்களும் நமக்குத் தீங்கு விளைவிப்பவை.

நம்முடைய வசன இலக்கியத்தைத் தேசியச் செல்வமாக்க வேண்டிய இந்த நேரத்தில், நாம் மிகவும் ஜாக்கிரதையாகக் கலையைச் சமைக்க வேண்டும். இந்தக் கலை மக்களுக்குப் புதிய பார்வையையும் கல்வியையும் கலைப்பண்பையும் தர வேண்டும். சாதாரண மனிதன் ஒவ்வொருவனும் இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உண்மையும், ஒருமுக நோக்கும், தெளிவும், எளிமையும் வாய்ந்ததாக நமது வசனம் இருந்தால், அது மிகப் பெரிய தொண்டாகும். நாட்டிலே என்றுமில்லாத ஒரு புரட்சிகரமான நிலைமை தோன்றினால் அதைச் சமாளிக்க உதவாத இலக்கியத்தை நாம் படைத்துப் பயனில்லை. மிகவும் எளிய, அழகிய, தெளிவான சொற்களிலே எதையும் சொல்ல நாம் பழக வேண்டும். நாட்டின் தேவையைப்பற்றியும், தேவையான பொருள்களைப் பெறும் வழியைப்பறறியும் ஓர் எழுத்தாளன் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகச் சிந்திக்கிறானே அவ்வளவுக்கு அவ்வளவு அவன் முற்போக்கு உள்ளவனாவான்.

---

### தலைவர்கள் சிருஷ்டி

அமெரிக்காவில் நமக்குத் தலைவர்கள் சிருஷ்டியாகி வருகிறார்கள். நியூயார்க் நகரில் ஆசிய இன்ஸ்டிட்யூட் என்ற கலாசாலை இருக்கிறது. அதில் கீழ்நாடுகள் சம்பந்தமான பூகோளம், சரித்திரம், கலைகள் ஆகிய 300 விஷயங்களும் 47 ஆசியா பாஷைகளும் போதிக்கப் படுவதாக, அமெரிக்கப் பிரசார இலாக்கா சொல்கிறது. இந்தக் கலாசாலையின் தலைவர் டாக்டர் ஆர்த்தர் உபாம் போப் என்பவர். "பொது ஜனங்களை அறிவுப் பிரகாசம் பெறச் செய்ய, பயிற்சி பெற்ற தலைவர்கள் வேண்டும்" என்கிறார். அந்தத் தலைவர்களைப் பயிற்றுவிப்பதுதான் இந்தக் கலாசாலையின் நோக்கமாம். ஒரு தேசத்தின் பாஷை, கலைகளை மட்டுமன்றி, அதன் பழக்க வழக்கங்களையும் இந்தக் கலாசாலையில் போதிக்கிறார்கள். உதாரணமாக, ஒருவன் சீனவுக்குப் போனால், அங்கே டீ குடிப்பது எப்படி என்று இங்கே போதனை நடக்கிறது! இம்மாதிரி இன்னும் பல பள்ளிக்கூடங்கள் தொடங்கவும் திட்டம் போட்டிருக்கிறார்களாம்.

# பொடிப் பால்

## கே. வி. சுந்தரம் ஐயர்

**பால் பொடியாகிறது. பொடி மீண்டும் பாலாகிறது. இப்படி அது புனர்ஜன்மம் எடுப்பது எங்கே என்று நினைக்கிறீர் கள்? சென்னை நகரிலேதான். இந்த வேலைக்காகச் சென்னை சர்க்கார் ஒரு தொழிற் சாலையே அமைத்திருக்கிறது. அங்கே புனர்ஜன்மம் எடுக் கும் பால் தினந்தோறும் நக ரம் பூராவும் சப்ளை ஆகிறது. அந்தப் பால் தயாராகும் விதத்தை விளக்கமாக நாம் அறிய வேண்டாமா?**

சென்னையில் போதிய அளவு பால் கிடைக்கவில்லை. அதனுல் சென்னை அரசாங்கத்தார் பொடிப் பால் செய்யும் ஒரு தொழிற் சாலையை ஏற்படுத்தியிருக்கிருர்கள். இது ஒரு நல்ல முயற்சியாகும். இப்பொழுது தினம் ஒன்றுக்கு 1000 காலன் (12,500 பட்டணம் படி அளவு) பொடிப் பால் இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி யாகிறது. அரசாங்கத்தாரின் இந்த முயற்சியினுல் சென்னை நகரிலுள்ள ஜனங்களுக்குக் கொஞ்சம் சௌகரி யந்தான்.

இதனுல் ஜனங்கள் அதிகமான பாலை உபயோகிப்பார்கள். அமெரிக் காவிலிருந்தும் ஆஸ்திரேலியாவி லிருந்தும் பால் பொடி இறக்குமதி யாகிறது. கறந்த பாலிலுள்ள கொழுப்புச் சத்தைப் பிரித்து, வற்ற வைத்து, இந்தப் பால் பொடியை அந்த நாடுகளில் செய்கின் றனர். இந்தப் பால் பொடி மலி வாகவும் நீண்ட நாட்களுக்குக் கெடா மலும் இருக்கிறது. பாலில் தண் ணீரே பெரும்பகுதி இருப்பதால் அதை வைத்துக் கொள்வதும் வேறு இடங்களுக்கு அனுப்புவதும் சிரமம். தண்ணீரைமட்டும் விலக்கிப் பால் சத்தைப் பொடியாகச் செய்து கொண்டால் இந்த அசௌகரியம் நீங்கிவிடும்.

இந்தப் பால் பொடியை மீண்டும் தண்ணீரில் கரைத்துத் தகுந்த அள வில் வெண்ணெய்க் கொழுப்பையும் கலந்துவிட்டால், சத்துள்ள இயற் கைப் பாலைப் போன்றதாகிவிடு கிறது. வெண்ணெயோ நெய்யோ கிடைப்பது கஷ்டமாயும் கிராக்கி யாயும் இருக்கிறது. எனவே அர சாங்கத்தார் வாசனையற்ற தேங்காய் எண்ணெயை அந்தப் பாலில் கலக் கிருர்கள். பாலில் எவ்வளவு வெண் ணெய் இருக்குமோ அந்த அளவுக்கு இந்தத் தேங்காய் எண்ணெயைக் கலக்கிருர்கள். ஆனுல் பெரும்பா லான தாவர எண்ணெய்களைப் போலத் தேங்காய் எண்ணெயில் வைடமின் 'ஏ' இல்லை. வைடமின் 'ஏ'யும் 'டி'யும் தேவையான அளவு இருக்கும் மீன் எண்ணெயைக் கலப் பதே சிறந்த முறையாகும். ஆனுல் அதிலிருந்து வரும் முடை வாசனை யாலோவேறுஎதனுலோசிலர் அதை வாங்க மறுக்கிருர்கள். ஆகவே, அதற்குப் பதிலாகச் சிவப்பு முள் ளங்கியில் உள்ள கரோடின் என்ற மஞ்சள் நிறச் சத்தைச் சேர்க்கிருர் கள். கரோடின் என்ற இந்தச் சத்து, தேங்காய் எண்ணெயில் கரையும். இதில் உடலுக்கு அவசிய

**காப்பிரைட்; பீப்பிள்ஸ் ஹெல்த் (ஆங்கிலம் - செப்டம்பர் '47), லாயிட் ரோட், சென்னை 14.**

மான 'ஏ' வைடமினின் தாய்ப் பொருள் நிறைய இருக்கிறது.

கரோடினேயும் தேங்காய் எண்ணெயையும் தண்ணீரில் கரைத்த பால் பொடியுடன் கலந்து இந்தப் பொடிப் பாலைத் தயாரிக்க முடியுமானால், ஏன் அதை நம் வீடுகளிலேயே தயாரிக்கக் கூடாது? அரசாங்கத்தார் இதற்குத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தி யந்திர உதவியை நாடுவானேன் என்று கேட்கலாம். தேங்காய் எண்ணெயைக் கையால் கலக்கினால், உடனே தேங்காய் எண்ணெய் பாலுடன் கலந்துவிட்டதுபோல்தான் இருக்கும். ஆனால் சிறிது நேரத்தில் தேங்காய் எண்ணெய் பாலின் மேல் தனியாக வந்து மிதக்கும். இயற்கையான பாலிலுள்ள வெண்ணெய்க் கொழுப்பு இந்த மாதிரி தனியாகப் பிரிந்து மிதப்பதில்லை. அது பாலில் இரண்டறக் கலந்திருக்கும். செயற்கையாகத் தேங்காய் எண்ணெயை இம்மாதிரி கலக்கும்படி செய்ய, கையால் குலுக்குவது போதாது. யந்திர உதவிதான் தேவை.

அரசாங்கத் தொழிற்சாலையில் அலுமினியப் பாத்திரங்களில் சுத்தமான நல்ல தண்ணீரைச் சரியான உஷ்ணநிலையில் வைக்கிறார்கள். இந்த வெதுவெதுப்பான தண்ணீரில் பால் பொடியைத் தேவையான அளவு கரைக்கிறார்கள். கரோடின் கரைத்த தேங்காய் எண்ணெயைப் போதுமான அளவு அந்தப் பொடிப் பாலிலே ஊற்றியபின், அரைமணி நேரம் மின்சக்தி கொண்டு கலக்குகிறார்கள்.

அந்தக் கலவை பிறகு ஒரு பெரிய குழாய் வழியாக வெளியே கொட்டுகிறது. அந்தக் குழாயின் ஒரு புறத்தில் நுண்ணிய துவாரங்களும் மறுபுறத்தில் வேகமாய்த் தள்ளக்கூடிய பிஸ்டனும் இருக்கின்றன. சாதாரணப் பாலே அந்தத் துவாரங்களின் வழியாகச் செல்ல முடியாது. ஆனால் 1400 பவுண்டு எடையுள்ள அந்தப் பிஸ்டன் உந்தித் தள்ளும் வேகத்தில் அந்தத் துவாரத்தின் வழியே இந்தப் பால் செல்லுகிறது. கொழுப்புச் சத்துக்கள் கண்ணுக்குத் தெரியாதபடி சிதறி, பாலில் சீராகக் கலந்துவிடுகின்றன. குழாயிலிருந்து வெளியான உஷ்ணமான பால் ஒரு தொட்டியில் வந்து சேரும்படி, அதை இறைக்கிறார்கள். அங்கே உடனே அந்தப் பாலைக் குளிரச் செய்து சுகாதாரப் பாதுகாப்புடன் கண்ணாடிப் புட்டிகளில் அடைத்து ஸீல் வைத்துவிடுகிறார்கள். பால் விநியோகம் ஆகும் வரையில், அதன் சுவை கெடாமலிருப்பதற்காக, அந்தப் புட்டிகளைக் குளிர்ச்சியான இடத்திலே வைத்திருக்கிறார்கள். அழுக்குப் படியாமல் தடுத்தால், குளிர்ச்சியான இடத்தில் நாள் கணக்காக இந்தப் பாலைக் கெடாமல் வைத்திருக்கலாம்.

நிஜப் பாலைவிடச் சில சௌகரியங்கள் இந்தப் பொடிப் பாலினால் உண்டாகின்றன. இந்தப் பொடிப் பால் எல்லாச் சமயத்திலும் கிடைக்கும். வைடமின் 'ஏ'யும் கொழுப்பும் சம்பந்தப்பட்டவரையில், நிஜப்பால் அனைத்தும் ஒரே மாதிரி இருப்பதில்லை. பொடிப்பாலில் மிக நுண்மையாக இந்தக் கொழுப்பு இருப்பதால், இயற்கைப்பாலைவிட இந்தப்பொடிப் பால் எளிதில் ஜீரணமாகிறது.

எல்லாவற்றிறகும் மேலாக, சுகாதார முறையைக் கொண்டு தயாராகும் பரிசுத்தமான பால் என்று இதை நாம் கொள்ள முடியும். நேர்த்தியான தயிரும் மோரும் செய்துகொள்ள மிகவும் ஏற்றது இந்தப் பொடிப் பால்.

பேராசை வேண்டாம்; போட்ட பணமாவது திரும்பவேண்டாமா? எச்சரிக்கை இல்லாவிட்டால், அதுவும் போய்விடும். கதை அல்ல; அப்படி ஒரு கேஸே நடந்திருக்கிறது.

# இன்ஷ்யூரன்ஸ் — ஜாக்கிரதை!

ரா. கே. ரானடே

'மனித வாழ்வு என்ன சாசுவதம்? எதற்கும் முன் ஜாக்கிரதையாகக் கொஞ்சம் பணம் சேர்த்துவைப்பது நல்லது' என்று எண்ணித்தான் நாம் இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்கிறோம். மனைவிக்கும் குழந்தை குட்டிகளுக்கும் இயன்ற அளவு பாது காப்புச் செய்வது நமது நோக்கம்.

ஆனால் இதைச் சற்று நினைத்துப் பாருங்கள்: உங்கள் தகப்பனார் எழு பத்தையாயிரம் ரூபாய்க்கு இன்ஷ்யூர் செய்திருக்கிறார். சில தவணைகள் பணம் கட்டியதும் அவர் காலமாகிவிடுகிறார். அதனால் நீங்கள் வருத்தப்படுவது இயல்பு; ஆயினும் இன்ஷ்யூரன்ஸ் தொகை கிடைக்குமே என்ற ஆறுதலும் இருக்கும். அந்தத் தொகையை என்ன செய்யலாமென்று நீங்கள் திட்டம் போடுகிறீர்கள். அதே சமயத்தில், "இன்ஷ்யூரன்ஸ் பாரத்தில் உங்கள் தகப்பனார் தவறான தகவல்கள் கொடுத்திருப்பதனால், உங்களுக்கு ஒரு தம்படிகூடக் கிடைக்காது" என்று கம்பெனியிலிருந்து பதில் வருகிறது. அப்பொழுது உங்களுக்கு என்ன தோன்றும்? இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளையும், ஏஜெண்டுகளையும் கண்டபடி திட்டுவீர்கள்; உடனே வழக்குத் தொடுப்பீர்கள்.

இப்படி ஒரு சம்பவம் உண்மையிலே நடந்தது. ஈ. எம். முத்தப்ப செட்டியார் என்பவரின் தகப்பனார் எழு கம்பெனிகளில் 74,000 ரூபாய்க்கு இன்ஷ்யூர் செய்திருந்தார். 18-1-1937-இல் அவர் இறந்தார். முத்தப்பா அந்தக் கம்பெனிகளிடமிருந்து பணம் கோரியபோது, அவர் தகப்பனார் மூன்று பொய்த் தகவல்கள் பதிவு செய்திருப்பதாகவும், அதனால் மகனுக்குத் தம்படிகூடக் கிடைக்காதென்றும் பதில் வந்தது. அந்தத் தகவல்கள் வருமாறு:

(1) 1934-க்கு முன்பு நான் வேறு எந்தக் கம்பெனியிலும் இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ளவில்லை.

(2) என் வயது.... [உண்மையான வயதைவிட ஆறு வருஷம் குறைவு.]

(3) எனக்கு எவ்வித நோயும் இல்லை.

இவை மூன்றும் பொய்த் தகவல்கள் என்று கோர்ட்டில் ருஜுவாயிற்று.

காப்பிரைட்: மனோஹர் (மார்ட்டி-ஆகஸ்ட் '47), கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிமிடெட், கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

“போனால் போகிறது; கொடுத்த பணத்தையாவது திருப்பிக் கொடுக்கலாமே?” என்று நீங்கள் சொல்லலாம். முத்தப்பாவும் அப்படித்தான் கோர்ட்டில் கோரினார். அதற்குக் கோர்ட்டார் அளித்த தீர்ப்பு இது:

“முத்தப்பாவின் தகப்பனார் இன்ஷ்யூரன்ஸ் பாரத்தில் பொய்த் தகவல்கள் கொடுத்ததனால் கம்பெனியை ஏமாற்றப் பார்த்திருக்கிறார். அவர் உண்மையைச் சொல்லியிருந்தால் அவரைச் சேர்த்துக்கொண்டே இருக்க மாட்டார்கள். ஏமாற்ற முயன்றதனால், அவர் கட்டிய பணங்கூட முத்தப்பாவுக்குக் கிடைக்காது.”

இன்ஷ்யூரன்ஸ் தொகை போனதுமன்றி, கோர்ட்டுச் செலவும் வீணாயிற்று!

“இது சுத்த அநியாயம்! வயது குறைவாக இருந்தால் அதிகப் பிரீமியம் வாங்கிக் கொள்வதுதானே? தனக்கு நோய் இல்லை என்று சொல்வது மனித சுபாவம். இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்வதற்கு முன்பு பரிசோதனை செய்த டாக்டர் என்ன, முட்டாளா?” என்றெல்லாம் நீங்கள் கேட்கலாம்.

ஆனால் சட்டரீதியாக ஹைகோர்ட்டின் தீர்ப்புத்தான் சரியானது. சட்டத்தை நீங்கள் அநுசரித்துப் போகவேண்டும். இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்வதற்கு முன்பு, நீங்கள் சரியான தகவல்களை ஜாக்கிரதையாகப் பாரங்களிலே எழுதவேண்டும். மனைவிக்கும் குழந்தைகுட்டிகளுக்கும் பாதுகாப்பாக இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்வது நல்லதுதான்; ஆனால் உங்கள் பாரங்களிலே பொய்த் தகவல் இருப்பதாக நிரூபிக்கப்பட்டால், உங்கள் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் பஞ்சாகப் பறந்து போகும்!

---

## மதிப்பிழந்த பணம்

**சீனாவில் பணப் பெருக்கம். எட்டு அங்குலம் நீளமுள்ள ஆயிரம் டாலர் நோட்டுகள் கட்டுக்கட்டாய் வருகின்றன.**

| | | |
|---|---|---|
| காலையில் தினசரிப் பத்திரிகை | 2000 | டாலர் |
| சாப்பாடு | 2000 | ,, |
| ஆபீஸுக்குப் போக டாக்ஸி வாடகை | 36,000 | ,, |
| சிற்றுண்டி | 64,000 | ,, |
| மூன்று அறையுள்ள ஜாகையின் குடிக்கூலி | 100,000 | ,, |
| அந்த ஜாகையின் சாவியை வாங்க லஞ்சம் | 10,000,00 | ,, |
| மாடியிலிருந்து மூட்டை தூக்கிவந்த பையனுக்குக் கூலி | 2000 | ,, |
| நிலக்கடலைப் பொட்டலம் | 1,500 | ,, |
| விஸ்கி பாட்டில் | 600,000 | ,, |

**நீங்கள் ஊர் சுற்றிப் பார்க்க விரும்பினால், ஒரு சாக்கு நிறைய டாலர் நோட்டுகளைப் போட்டுக் கட்டிக்கொண்டு கிளம்ப வேண்டியதுதான்.**

— பம்பாய் கிரானிக்கல்

# ஜூனகட் அலங்கோலம்

**'போரம்' ஆசிரியர்**

'பீபியின் 18-ஆவது சந்ததி ஆளும்போது வம்சமே அழிந்து போகும்' என்று ஒரு பழமொழி உண்டு. தற்போதைய ஜூனகட் நவாப் இப்படி 18-ஆவது சந்ததியே யாவார். இவரிடம் நாலு பேகம்கள் இருக்கிறார்கள். 800 நாய்கள் இருக்கின்றன. இவரைப் பார்த்துவர வி. பி. மேனனைச் சர்தார் படேல் அனுப்பினார். இவர் உடம்பு சரியில்லை என்று பாசாங்கு செய்துவிட்டார்; ஆனால் நவாப் தெருவெல்லாம் கார் சவாரி செய்துகொண்டிருந்தார். அவர் உடம்பிலே கோளாறு ஒன்றையும் காணோம்.

**நாட்டிலே கிளர்ச்சி வலுத்ததும், நவாப் கராச்சிக்கு ஓடிவிட்டார். திவான் கொஞ்சகாலம் முண்டிப் பார்த்தார். பிறகு, நவாப் அநுமதிப்படி, சமஸ்தானத்தை இந்திய யூனியனிடம் ஒப்படைத்தார். எல்லாம் ஜின்னா சாகேபுக்குத் தெரிந்தே நடந்திருக்கிறது. என்றாலும், "அதெப்படி? பாகிஸ்தானில் சேர்ந்த ஜூனகட்டை நவாபோ, திவானோ, பாகிஸ்தானின் சம்மதமில்லாமல் இந்திய யூனியனிடம் எப்படிக் கொடுப்பது?" என்று பாகிஸ்தான் சர்க்கார் உறுமுகிறது. இது இன்றைய நிலை. பூர்வ சரித்திரம் என்ன என்பதை, 'போரம்' தலையங்கம் சொல்லுகிறது.**

காட்டியாவாட் இந்திய சமஸ்தானங்கள் 268 துண்டுகளா யிருக்கின்றன. அவை அனைத்தும் பல காலமாக ஒற்றுமையாகவும் அமைதியாகவும் இருந்துகொண்டிருந்தன. பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு மூட்டை முடிச்சுகளோடு கிளம்பி விடப் போவதாக, இந்த வருஷம் பிப்ரவரி மீ 20 உ அறிக்கை பிறந்தது. உடனே, இந்திய அரசியல் இலாக்காத் தலைமை அதிகாரி ஸர் கான்ராட் கார்ன்பீல்டு, இந்திய யூனியனை ஊறுசெய்யத் திட்டம் போட்டுவிட்டார்.

ஏகாதிபத்தியத்தின் கைக்கருவிகளாக யார் வேலை செய்வார்கள் என்று தம் ஒற்றர்களை விசாரித்தார் கார்ன்பீல்டு. காட்டியாவாட் முஸ்லிம் மன்னர்களும் மற்றுமுள்ள முஸ்லிம் மன்னர்களுமே இதற்கு ஏற்றவர்கள் என்று அவர்கள் வெட்டவெளிச்சமாய்ச் சொல்லிவிட்டார்கள். பாகிஸ்தானே ஏகாதிபத்திய வாதிகளின் சிருஷ்டி; பிரிட்டனின் தோழன். அங்கே ஏகாதிபத்தியச் சேனை இருக்கும். அந்தச் சேனை இந்திய யூனியன்மீது தாவிப் பாய வடக்கே ஜூனகட்டும் தெற்கே ஹைதராபாதுமே சரியான இடங்கள் என்று அவர்கள் திட்டம் தயாரித்தார்கள். இந்தத் திட்டத்துக்கிசைய, பற்பல சமஸ்தான முஸ்லிம் மன்னர்களுக் கெல்லாம் கார்ன்பீல்டின் ஏஜெண்டுகள் ஆயுதங்களை வழங்கினார்கள். இந்திய யூனியன் பிறப்பதற்கு முன்பே அதன்மீது யுத்தம் தொடுக்கத் தயாரா யிருக்கும்படியும் அந்த முஸ்லிம் மன்னர்களைக் கார்ன்பீல்டின் ஏஜெண்டுகள் சித்தப்படுத்திவிட்டார்கள். ஹிந்து மன்னர்களுக்கு மட்டில் இந்த விஷயத்தைச் சிறிதும் சொல்லாமல் அடியோடு மறைத்துவிட்டார்கள். இது ஜின்னா - கார்ன்பீல்டு - போபால்

**காப்பிரைட்: போரம் (ஆங்கிலம் - 12-10-'47), அப்போலோ தெரு, பம்பாய்.**

ஆகிய மூவரதும் கூட்டுச் சூழ்ச்சியாகும்.

காட்டியாவாடின் இதர சமஸ்தானங்கள் போகிறவழியே தாமும் போகப் போவதாக, ஆகஸ்டு மீ 10 உ வரையிலும் ஜூனுகட் நவாப் சொல்லிக்கொண் டிருந்தார். விடைபெற்ற அரசியல் ஏஜெண்டுக்கு அன்று அவர் ஒரு விருந்தளித்தார். அப்போது, "ஜூனுகட் சமஸ்தானம் பாகிஸ்தானில் சேரப் போகிறது என்று எவன் சொன்னுலும் சரிதான். அவன் நமது சமஸ்தானத்துக்கு விரோதி; அது மட்டிலுமல்ல; காட்டியாவாடுக்கே விரோதியாவான்" என்று கூட ஜூனுகட் நவாப் அறிவித்தார். ஆனுல், இதற்குள்ளே கார்ன்பீல்டும் அவருடைய ஏஜெண்டுகளும் தொடங்கி வைத்த சூழ்ச்சி மும்முரமாகிவிட்டது. போபால் நவாப் இந்திய யூனியனில் சேர்ந்து ஜின்னுவைக் கைவிட்டு விட்டாராகையால், ஜின்னு இப்போது ஜூனுகட் நவாப் மீது தமது செல்வாக்கையெல்லாம் செலுத்தலானுர். இந்திய யூனியனில் சேரும்படி நவாபுக்கு யோசனை கூறிய திவான் அப்துல் காதருக்குத் தேக அசௌக்கியம் வந்துவிட்டதென்று சொல்லி அவரை அமெரிக்காவுக்கு அனுப்பி விட்டார்கள். ஜின்னு இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டார். தமக்கு விசுவாசமுள்ள ஏஜெண்டான பூதோ என்ற சிந்து மாகாணத்தவரை ஜூனுகட் சமஸ்தானப் பிரதம மந்திரியாக நியமிக்கச் செய்தார். வேறு சிந்திகளையும் அனுப்பினர். அவர்களே தாம் ஜூனுகட்டை ஆளத் தொடங்கி, பாகிஸ்தானில் ஜூனுகட் சேர வேண்டுமென்று முடிவும் செய்து விட்டார்களாம்.

'இந்தியா முழுவதையும் இறுதியிலே ஜயிப்போம்' என்பதுதானே, அக்கினி கக்கும் லீகர்களின் கோஷம். ஆகவே இந்தியாவுக்குள்ளே காலடி வைக்கத் தங்களுக்குக் கிடைத்துவிட்ட இடமான ஜூனுகட்டை ஜின்னுவும் பாகிஸ்தான் மந்திரிகளும் பலப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். ஜூனுகட்டின் பிரதம துறைமுகமான வீரவாலாவை நோக்கி, கராச்சியிலிருந்து கப்பல்கள் புறப்பட்டன. இந்தியாவிலிருந்து பெற்ற நிலக்கரி, தானியம் ஆகியவற்றுடன் பலூச்சி துருப்புகளும் அகதிகள் என்ற மாறுவேஷத்துடன் அந்தக் கப்பல்களில் சென்றுர்கள். இரண்டு கப்பல்கள் இந்திய சர்க்காரின் கட்டுக்காவலை ஏமாற்றி வீரவாலாவுக்குச் சென்றுவிட்டன. ஒரு கப்பல் மட்டும் நடுக் கடலிலே அகப்பட்டுக் கொண்டது.

ஜூனுகட் சமஸ்தானத்துக்கு அருகேயுள்ள ஹிந்து சமஸ்தானுதிபதிகள் இது கண்டு திகிலடைந்தார்கள். இந்திய யூனியனிடம் அபயக் குரல் இட்டார்கள். முஸ்லிம் போலீஸ்காரர்களும் பலூச்சி துருப்புகளும் பஞ்சாபிப் படைகளிலிருந்து விடுபட்ட முஸ்லிம் சோல்ஜர்களும் ஜூனுகட்டை ஆளத் தொடங்கினுர்கள். அவர்கள் ஹிந்துக் கோயில்களை அசுத்தப்படுத்தினுர்கள். ஆண், பெண், குழந்தைகளை யெல்லாம் இம்சித்தார்கள். இதெல்லாந்தான் பாகிஸ்தான் கொடி பறக்குமிடமெல்லாம் சகஜமாகிவிட்டதே. பெரும்பான்மைச் சமூகத்தினர் திக்கற்றவர்களாக, சமஸ்தானத்தை விட்டே வெளியேறத் தொடங்கினுர்கள். அவர்களெல்லாம் நிராயுதபாணிகள்தாமே! நவநகர் ஜாம் சாகேப் உடனே டில்லிக்கு ஓடி, சர்தார் படேலைப் பார்த்தார். இது

விஷயத்தில் காலந் தாழ்த்தாமல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று, சர்தார் படேலிடம் ஜாம்சாகேப் வற்புறுத்தினர்.

டில்லியில் பத்திரிகை நிருபர்களை யெல்லாம் கூட்டி, நிலைமையை அவர்களுக்கு ஜாம்சாகேப் விளக்கினர். அவர் சொன்னதாவது: "காட்டியாவாடில் 268 துண்டுச் சமஸ்தானங்கள் இருக்கின்றன. அவற்றில் குண்டுமரியாதை உள்ளவை 13; குண்டு மரியாதை இல்லாதவை 19; மற்றவை மிகச் சிறிய தாலூக்காக்கள். ஜுனுகட்டின் ஜனத்தொகை சுமார் 6½ லட்சம். அதில் 82 சதவிகிதம் ஹிந்துக்கள். 18 சதவிகிதம் முஸ்லிம்கள். காட்டியாவாட் சமஸ்தானங்கள் முழுமைக்கும் போக்குவரத்து, நிர்வாகம் முதலிய காரியங்களுக்கெல்லாம் மைய ஸ்தானமாய் விளங்குவது ஜுனுகட்தான். ஜுனுகட் சமஸ்தானத்தைச் சேர்ந்த துண்டுப் பிரதேசங்கள் காட்டியாவாடெங்கும் சிதறியும் கிடக்கின்றன. இந்திய யூனியனில் சேர்ந்த சமஸ்தானங்களுக் கிடையிலும் அந்தத் துண்டுகள் பல கிடக்கின்றன. அண்டை அயல் சமஸ்தானவாசிகள் எவரும் ஜுனுகட்டை மிதிக்காமல் ரெயில் பிரயாணம் செய்ய முடியாது. ரெயில்கள் ஜுனுகட் வழியேசெல்லுகின்றன. தந்தி, தபால் தலைமை ஸ்தலம் அங்கேயே இருக்கிறது.

"கராச்சிக்கும் பம்பாய்க்கும் இடையிலே இந்திய யூனியனோடு ஒட்டி இருக்கிறது ஜுனுகட். பாகிஸ்தானிலிருந்து அந்தச் சமஸ்தானம் 400 மைல் தூரத்தில் இருக்கிறது. ஆனால், பாகிஸ்தானுக்கும் காட்டியாவாடுக்கும் இடையிலே கட்ச்ரான் பிரதேசம் இருக்கிறது. அது வருஷத்தில் ஏழு மாதகாலம் ஒரே மணற்காடாக இருக்கும்; மீதி ஐந்து மாதகாலம் தண்ணீர் வெள்ளத்தில் முழுகியிருக்கும். கோடைக் காலத்தில் எந்த மோட்டார்காரும் இந்த மணற் காட்டில் மணிக்கு 150- மைல் வேகத்தில் ஓடிவர முடியும். இதுதான் அபாயம். ஏனென்றல், சில மணி நேரத்துக்குள் பாகிஸ்தான் சேனைகள் எவ்விதப் பலத்த எதிர்ப்புமின்றி இந்திய யூனியன் பிரதேசத்துக்குள் வந்துவிட முடியும். வீரவாலா துறைமுகத்தையும் பாகிஸ்தான் பலப்படுத்திவிட முடியும்."

பி. டி. சர்மா என்ற நிருபர் வேடிக்கையாக, "அஹிம்சா மூர்த்தியைப் படைத்த பிரதேசம் காட்டியாவாட். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுவதே உங்களுக்கு அழகல்லவா?" என்று ஜாம்சாகேபைக் கேட்டார். "என் அன்பார்ந்த நண்பரே, அஹிம்சாமூர்த்தியை மட்டுந்தான காட்டியாவாட் பெற்றது? ஜின்னவைப் பெற்றதும் அதுதானே! ஆகவே, எங்கள் காட்டியாவாட் பட்சபாதமில்லாமல் நடந்திருக்கிறது என்று அறிந்துகொள்ளும்" என்று பதிலளித்தார் ஜாம்சாகேப்.

---

ஒரு மனிதன் ஒரு புலியைக் கொல்ல விரும்பும்போது, அதை அவன் வேட்டை விளையாட்டு என்கிருன். ஒரு புலி மனிதனைக் கொல்ல விரும்பும் போதோ, அதை அவன் மூர்க்க வெறி என்கிருன்.

—பெர்னர்ட் ஷா.

# பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள் பற்றியும் அருமையாய்ப் பதில் தருகிறார். சிலவற்றை இங்கே பாருங்கள்.

**கேள்வி:** எங்கள் கல்லூரி மாணவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றுமூன்று பேர் அடிக்கடி சினிமாவுக்குப் போகிறார்கள். மாணவர்களிடம் சினிமாவுக்கு உள்ள இந்தச் செல்வாக்கின் காரணம் என்ன?

**பதில்:** அப்பாவின் பணம்.

* *

**கே:** குண்டர்களிடமிருந்து பெண்களைக் காப்பாற்ற நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்?

**ப:** அவர்களுடைய புருஷர்களின் கையிலே துப்பாக்கிகளைக் கொடுத்து, மனத்திலே தைரியமூட்டுவதுதான் வழி. ஆப்கானிஸ்தானத்தில், ஒவ்வொரு மனிதனும் ஆயுதபாணியாய் இருக்கிறான். அங்கே பெண்களை யாரும் பலாத்காரமாய்க் கற்பழிப்பதில்லை. பெண்ணின் பின்னே துப்பாக்கி சகிதம் நிற்கும் மனிதனை, அவளுக்கு முன்னே நிற்கும் மனிதன் காணும்போது, அவன் தானாகவே பெண்ணுக்கு மரியாதை செலுத்துவான்.

* *

**கே:** தன் சிருஷ்டித்திறமையால் உலகத்துக்குத் தொட்டிலைக் கொடுத்தானே ஒரு தச்சன், அவன் பெரியவனா? அந்தத் தொட்டிலில் படுத்த குழந்தையைத் தாலாட்ட, தன் சிருஷ்டித் திறமையால் பாட்டைக் கொடுத்தானே ஒரு கவிஞன், அவன் பெரியவனா?

**ப:** இரண்டுபேரும் பெரியவர்கள் அல்ல; தன் சிருஷ்டித்திறமையால் இந்த இரண்டு பேருக்கும் வேலை கொடுத்தாளே ஒரு பெண், அவள் தான் பெரியவள்.

* *

**கே:** உமக்கு மதத்திலே நம்பிக்கை உண்டா?

**ப:** ஒரு காலத்தில் இருந்தது; இப்போது இல்லை. மதம் என்பது ரத்த சோகை பிடித்த ஒரு ஜந்துவாக அல்லவா தோன்றுகிறது! அது உயிரோடிருக்க, ஓயாமல் நம் ரத்தத்தைக் கேட்கிறதே. அதைப் பின்பற்றுவதால் என்ன பயன்?

* *

**கே:** தரித்திரம் என்றால் என்ன?

**ப:** பணக்காரன் அவிழ்த்தெறிய, ஏழை எடுத்து உடுத்திய கந்தை தான் தரித்திரம்.

* *

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம் - அக்டோபர் '47), 55, பிரோஸ்ஷா மேத்தா ரோட், பம்பாய்.

கே: காந்தி மதம் என்கிறார்களே, அது என்ன என்று உம்மால் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?

ப: அது ஒரு மனிதன் போதிப்பது; ஒரே மனிதன் பின்பற்றுவது.

* *

கே: ஒருவரது மதத்தை மற்றவர் மதிக்கமாட்டோம் என்கிறார்களே; நம் ஜனங்கள் ஏன் இவ்வளவு இழிவாகப் போய்விட்டார்கள்?

ப: என்றைக்குத்தான் அவர்கள் அப்படி மதித்தார்கள்? பிரிட்டிஷ்காரர்களின் காலடியிலே மிதிபட்டு எல்லாப் புழுக்களும் ஒய்ந்து கிடந்தன; இப்போது நெளிகின்றன.

* *

கே: மிஸ்டர் படேல், நான் மோட்சத்துக்குப் போகவேண்டும்.

ப: அப்படியா? உடனே பஞ்சாபுக்குப் போய்ச் சேரும். அங்கிருந்து உம்மை நேரே மோட்சத்துக்குப் பயணம் கட்டிவிடுவார்கள்.

* *

கே: யார் சோஷலிஸ்ட் தலைவன்? லட்சணம் சொல்லுவீரா?

ப: நான் சொல்லும் லட்சணத்தைக் கேட்காதேயும். கேட்டால், சோஷலிஸத்திலேயே உமக்கு அவமதிப்பு ஏற்பட்டுவிடும்.

* *

கே: கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் இவ்வளவு திறமையாய்ப் பதில் சொல்லுகிறீரே? எப்படி?

ப: பசித்தவன் செய்ய முடியாத காரியமே இல்லை.

* *

கே: குரங்காட்டி குரங்கை ஆட்டும் வேடிக்கையைப் பார்க்கப் பெரிய நகரங்களில் உள்ளவர்கள் கூட ஏராளமாய்க் கூடிவிடுகிறார்களே; என்ன காரணம்?

ப: மனிதன் நன்றியுள்ள பிராணி. தன் ஆதி மூதாதையிடம் இன்னமும் அன்பு காட்டுகிறான்.

* *

கே: நம் கவிகள் ஏன் இன்று மிகவும் கீழ்த்தரமாய் விழுந்துவிட்டார்கள்?

ப: கவிகளா! அவர்கள் எங்கேயப்பா இருக்கிறார்கள்!

* *

கே: பத்திரிகைத் தொழிலால் பெண்களின் காதலைச் சம்பாதிக்க முடியுமா? நீர் அப்படி எவள் காதலையாவது சம்பாதித்தது உண்டா?

ப: நான் பத்திரிகைத் தொழிலுக்கு வந்தது முதல் இதுவரையில் அரும்பாடுபட்டு ஒரே ஒரு வெற்றிதான் அடைந்திருக்கிறேன். அதாவது என் மளிகைக்கடைக்காரனின் மதிப்பைச் சம்பாதித்துவிட்டேன்.

---

## கடவுள் செயல்

**ஹரிஜன் சொல்லுகிறார்: "நான் அழுக்கா யிருக்கிறேன் என்று என்னை நீர் விலக்கினால், நான் சுத்தம் செய்துகொள்ள முடியும். நான் பொல்லாதவனா யிருக்கிறேன் என்று என்னை நீர் விலக்கினால், நான் நல்லவனாய்ச் சீர்திருந்திக்கொள்ள முடியும். நான் பாமரனாயிருக்கிறேன் என்று என்னை நீர் விலக்கினால், நான் அறிவு திரட்டிக்கொள்ள முடியும். நான் மரியாதை தெரியாதவனா யிருக்கிறேன் என்று என்னை நீர் விலக்கினால், நான் மரியாதை பழகிக்கொள்ள முடியும். ஆனால், நான் என் தாய் வயிற்றிலே பிறந்ததற்காக என்னை நீர் விலக்கினால், கடவுளின் செயலுக்கு நான் என்ன செய்ய முடியும்?"**

**வீதியிலே குப்பை, வாசலிலே குப்பை, வீட்டிலே குப்பை என்றால் யாருக்குந்தான் எரிச்சல் வருகிறது. ஆனால், ஒவ்வொருவரும் என்ன செய்கிறோம்?**

# குப்பையும் ஓட்டடையும்

**கே. நா. டாங்கே**

தெளிவாகச் சொல்கிறேன்: நம்மைப்போன்ற அசுத்தம் யாரிடமும் இல்லை. சீனர், திபேத்தியர், நீக்ரோக்கள் முதலிய ஜாதியார் நம்மைவிட அழுக்குப் பிடித்தவர்களாக இருக்கலாம். ஆனால் மொத்தத்தில், முன்னேற்றமடைந்த மற்ற நாடுகளைப் பார்த்தால், நாம் சுத்தமாக இருக்கப் பழகுவதில்லை என்றே சொல்லலாம். ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்களும், சர்மத்தையும் பல்லையும் அவர்கள் வைத்துக்கொள்ளும் முறையும் நம்மைப்போல அத்தனை ஒழுங்கானவை அல்ல என்று சொல்பவர்களும் உண்டு. மேலெழுந்த வாரியாக எதையும் சொல்ல முடியாது. தர்க்கத்துக்கு நாம் போக வேண்டாம்.

நமது வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொண்டு குப்பை கூளங்களைத்



**கோயிலில்**



**தெருவில்**

தெருவில் எறிவதும், தேங்கும் குளங்களிலே துணியைத் துவைத்துக்கொண்டு ஸ்நானம் செய்து வருவதும் சர்வசாதாரணம். மோட்டார் காரின் ரிப்பேருக்கும், வெளியூரிலிருந்து டாக்டர்களை அழைத்து வருவதற்கும் கற்றைகற்றையாக நோட்டுக்களை வீசி எறியும் கோடீசுவரன், தன் பங்களாவுக்குள் அடைத்துக் கிடக்கும் சாக்கடையைக் கழுவ நாலணாக் காசு செலவழிக்க மாட்டான். நிறையப் படித்து அடுக்கடுக்காகப் பட்டம் பெற்றவர்களின் வீட்டிலே கிருமி கொல்லி மருந்து, பினாயில், பிளிட் - இவையெல்லாம் கிடக்கட்டும்; நீளமான துடைப்பங் கூடக் கிடைப்பது அரிது.

தெருவிலுள்ள குப்பை கூளங்களைப்பற்றி நம் நாட்டு நகரங்கள் யாவும் ஒரே நோக்கமுள்ளவை.

காப்பிரைட்: ஸ்த்ரீ (மராட்டி - செப்டம்பர் '47), கிர்லோஸ்கர் பிரதர்ஸ், கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

‘தூசும் குப்பையும் காற்றடித்தால் பறந்துபோகும்; மழை பெய்தால் அடித்துக்கொண்டு போய்விடும்!’ என்பதே நம் நகரசபைகளின் கொள்கை. அசுத்தத் துக்காகப் பொற்பதக்கம் அளிப்பதாக இருந்தால், புனு பம்பாய்க்கும் அகமதாபாத்துக்கும் போட்டி வரும். கான்பூர், நாகப்பூர், ஸோலாப்பூர் முதலியவை முதல்தரமான அசுத்த நகரங்கள். கல்கத்தா, பம்பாய், சென்னை நகரங்களிலுள்ள குடித்தனக் ‘காலனி’கள் மனிதவாசத்துக்கே லாயக்கற்றவை. நம்முடைய புண்ணியக்ஷேத்திரங்கள் குஷ்டரோகத்தைப் பரப்பும் நிலயங்கள். போபாலில் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் தங்கும் இடத்தைச் சினிமாப் படம் எடுக்கலாம்!

உங்கள் ஊரையே கொஞ்சம் சுற்றிப் பாருங்களேன். ஸலூன்காரர் கடைவாசலிலுள்ள சாக்கடையில் மயிரை எறிகிறார். பட்சணக்கடைக்காரர் இலைகளையும் தொன்னைகளையும் வாசலிலே எறிந்துவிடுகிறார். கோயிலுக்குள்ளே வதங்கிய பூக்களும், மட்கிய பில்வபத்திரங்களும், அழுக்கேறிய குத்து விளக்குகளும், தேங்கி நாற்றமெடுத்த அபிஷேக தீர்த்தமும் ஓர் அபூர்வ நறுமணம்



வாசலில்



கடையில்

வீச, ஆண்டவனுக்குப் புது மலர்களால் லட்சார்ச்சனை நடந்துகொண்டிருக்கும். ரெயில் வண்டிகளிலும் பஸ்களிலும் பிரயாணம் செய்தோ, சினிமாப் பார்த்துவிட்டோ நீங்கள் உங்கள் சுவாசப்பையை நிறைய க்ஷயக் கிருமிகளை வீட்டுக்குக் கொண்டு வரவில்லை யென்றால் உங்களைப்போன்ற துரதிருஷ்டக்காரர் யாருமில்லை! பசிக்கு உணவருந்த ஹோட்டலுக்குள்ளே போய் வந்துங்கூட மூளைக்கோளாறு போன்ற நோய் உங்களுக்குக் கிடைக்கவில்லை யென்றால், நீங்கள் அபூர்வப் பிறவிதான்!

தண்ணீர் நிரப்பும் நாலு தவலைகளை மேலே பளபளப்பாகத் தேய்த்து, அடுப்பை மெழுகிவிட்டால் நம் இல்லக் கிழத்தியின் வேலை முடிந்துவிட்டது! ‘அசுத்தம் செய்வது நமது வேலை; சுத்தம் செய்வது நகரசபையின் வேலை’ - இது நமது கொள்கை. பிளாட்பாரங்களில் யாரும் எங்கு வேண்டுமானாலும் வாழைப்பழத் தோல்களை எறிவதுபோல, வீட்டுக்குள்ளே வேண்டாத பொருள்களை - குழந்தைகுட்டிகள் தவிர - யாரும் எங்கு வேண்டுமானாலும் எறியலாம்! தெரு என்பது யாவருக்கும் பொது! அங்கே எல்லாருக்கும் முழுச் சுதந்தரம் உண்டு!

சில ஆரோக்கிய ஸ்தலங்களும்

கண்டோன்மெண்டுகளும், பங்களூர் புது டெல்லி போன்ற நகரங்களும், அடையாறு, சேவாக்கிராமம், சாந்திநிகேதனம் போன்ற கலை இயல் இல்லங்களும் சுத்தம் எப்படி இருக்க வேண்டுமென்று பொது மக்களுக்குக் காட்டுகின்றன. சேவாக்கிராமம் ஏற்கனவே வழி காட்டியிருக்கிறது. நமது மனப் பான்மை மாறவேண்டும். அசுத்தம் நமது சமூகப் பழக்கமாக இருப்பது மறையவேண்டும். இதை அசட்டை செய்தால் நமது அடுத்த தலைமுறை, அடுத்த ஆண்டு, அடுத்த க்ஷணங்கூடச் செம்மையாக இருக்க முடியாது. வீட்டிலுள்ள ஒட்டடைகளையும் குப்பை கூளங்களையும் அகற்றக் கொஞ்சமாவது கைகால்களை ஆட்டி வேலைசெய்யவேண்டும். அப்பொழுதுதான் சுத்தமான புது யுகம் தோன்றும்; இன்றைய உணவுப் பஞ்சத்திலுங்கூட நாம் நமது சராசரி வாழ்வைப் பின்னும் இரண்டு வருஷம் அதிகமாக்க முடியும்.

---

## சொன்னல் கர்நாடகம்

"இக்கால இளைஞர்களுக்கு மரியாதை தெரியவில்லை" என்றோ,

"நவீன யந்திரங்களைக் கண்டால், எனக்குப் பிடிக்கவில்லை" என்றோ,

"எனக்கு அரசியலில் துளியும் சிரத்தை இல்லை" என்றோ,

"எனக்குக் கலையின் இலக்கணமெல்லாம் தெரியாது; ஆனல், கலைப் பொருள்களை அநுபவிக்கத் தெரியும்" என்றோ, சொல்லாதீர்கள்; சொன்னல், உங்களைக் கர்நாடகம் என்று சொல்லிவிடுவார்கள்.

—வுமன் அண்ட் பியூட்டி.

## 'பகைவனுக்கருள்வாய்'

நவகாளியில் ஒரு கிராமத்தில் நான் ஒரு கிழ வைத்தியரைக் கண்டேன்.

"எல்லா வீடுகளும் கலகத்தால் எரிந்திருக்க, உங்கள் வீடு மட்டும் எரியாத காரணம் என்ன?" என்று கேட்டேன்.

"என் வீட்டுக்கும் கலகக்காரர்கள் வந்தார்கள்; கொள்ளை அடித்தார்கள். ஸ்வாமி படங்களை உடைத்தார்கள். அப்பொழுது ஒரு கண்ணாடித் துண்டு அவர்களின் தலைவன் காலில் விழுந்து ஆழமாக வெட்டிவிட்டது. நான் அவனை என் மகன் போல எண்ணி அன்போடு மருந்து போட்டுக் கட்டினேன். அதைக் கண்டு அவர்கள் பிரமித்துப் போய் நின்றார்கள். அவர்களைக் கலகத் தலைவன் அப்பால் போகச் சொன்னன். வீடு தப்பியது" என்றார் அவர்.

—சுசீலா நய்யார் (ஹரிஜன்)

**புதிது புதிதாக வான சாஸ்திரிகள் கண்டுபிடிக்கும் உண்மையெல்லாம், அநாதியான நம் வேதங்களில் அற்புத சித்திரங்களாகக் காணப் படுவது என்ன ஆச்சர்யம்!**

# வேதத்தில் வானசாஸ்திரம்

## கொப்பூரு வேங்கடானந்த ராகவராவ்

"இந்த உயிர்க் கூட்டமெல்லாம் எங்கே பிறக்கின்றன, எங்கே இருக்கின்றன, எங்கே ஒடுங்குகின்றன?" என்று பிரம்மதேவரை நாரதர் கேட்டாராம். வேதகால மகரிஷிகளும் இதே கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இக்காலத்து விஞ்ஞானிகளில் பிரபலஸ்தராகிய ஒருவர் சிருஷ்டி முறையைப் பின்வருமாறு வகுத்திருக்கிறார். இதற்கும் நம் வேதக் கொள்கைக்கும் உள்ள ஒற்றுமையை இங்கே காண்போம்.

முதல் நிலை 'கேயாஸ்' என்பது; அழிந்து சின்னபின்னமாகிய நிலை இது. நம் முன்னோர் இதைப் பிரளயம் என்பர். இது ஒரு கல்பத்தின் முடிவு; மற்றொரு கல்பத்தின் ஆரம்ப தசை.

பிரளயத்தை அடுத்த நிலையை ஆங்கிலேயர் 'நெபுலா' என்கிறார்கள். அதாவது வெளுப்பான புகைபோன்ற தோற்றம் ஆகும். நம் தேசத்தில்கூட மார்கழி, தை, மாசி மாதங்களில் எதிரில் இருப்பவரை முகந்தெரியாமல் மறைக்கும் மூடுபனி சில இடங்களில் உண்டு. இதைப்போன்ற பனிமூட்டங்கள் வானத்தில் பல இருக்கின்றன. நம்மவர் புடலம் பூவைப் போன்றது பூசம் என்பர். இந்த நட்சத்திர மேகத்தைப் பலர் பார்த்திருப்பார்கள். சில வெண்மேகங்கள் சங்கின் உருவத்தைப் போலிருக்கும். இவற்றை ஆங்கிலத்தில் 'ஸ்பைரல் நெபுலா' என்பார்கள். வேறு சில வெண்மேகங்கள் பறவைகளைப் போலவும் மிருகங்களைப் போலவும் வேறு பல வஸ்துக்களைப் போலவும் காட்சி அளிக்கின்றன. நண்டு, சிலந்தி, ஆந்தை, டம்பெல் இவைபோன்ற பல உருவங்களை உடைய நட்சத்திர மேகங்கள் வான மண்டலத்தில் இருபது லட்சங்கள் காணப்படுகின்றன.

**சிருஷ்டிமுறை:** முதலில் புகைபோல் தோன்றிய வெண்மேக உருவமே, காலக் கிரமத்தில் நட்சத்திர மாகிறது. அதனாலேயே வானமண்டலத்து வெண்மேகங்களை நாம் நட்சத்திர மேகங்கள் என்கிறோம். இப்படி உருவாகும் நட்சத்திரமே ஒரு சூரியன் ஆகும். மினுக்கு மினுக்கென்று ஒளிரும் நட்சத்திரங்கள் எல்லாம் கணக்கில் அடங்காத சூரிய கோளங்கள்தாம். இதை ரிக்வேதத்தில் (9-11-3) "ஸப்த திசோ நானா ஸூர்யா:" என்ற தொடரால் அறியலாம்.

நட்சத்திர மேகத்திலிருந்து ஒரு நட்சத்திரம் வெளிப்படலாம்; சில

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), தம்புசெட்டி தெரு, சென்னை.

நட்சத்திரங்களும் வெளிப்படலாம். ஒன்று இரண்டாகலாம். ஆனால் அவை தனித்தனியாகப் பிரிந்து செல்வதில்லை. அவை இரண்டும் ஒன்றை ஒன்று சுற்றும். இதைக் கவனிக்க வேண்டியது முக்கியம்.

சந்திரன் பூமியைச் சுற்றுவானே அல்லாமல் பூமி சந்திரனைச் சுற்றுது. மற்றக் கிரகங்களெல்லாம் சூரியனைச் சுற்றுமே யல்லாது சூரியன் அவற்றைச் சுற்றுவதில்லை. இரட்டை நட்சத்திரங்களின் சுழற்சி மட்டிலும் வேறுவிதம். முதலாவது நட்சத்திரம் இரண்டாவது நட்சத்திரத்தைச் சுற்றிக்கொண்டே இருக்கும். இரண்டாவது நட்சத்திரம் முதல் நட்சத்திரத்தைச் சுற்றிக்கொண்டே இருக்கும். வீணா மண்டலத்தில் உலகப் பிரசித்தி பெற்ற நட்சத்திரக் கூட்டங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒளி மிகுந்ததை மேல் நாட்டார் 'வேகா' நட்சத்திரம் என்பர். அதையே நம்மவர் 'அபிஜித்' என்பர். அதன் இடப் புறத்தில் விசித்திர நட்சத்திரம் ஒன்று இருக்கிறது. அதன் பெயர் 'எப்சிலன் விரா' என்பது. கிரேக்க பாஷையில் ஒரு வகை எழுத்துருவத்தால் அந்த நட்சத்திரத்தைக் குறிப்பிடுகிறார்கள். சாதாரணமாக, அது ஒரே நட்சத்திரம் போல் தோன்றும். ஆனால், நிதானித்துப் பார்த்தால் அது இரட்டை என்று தெரியவரும். நல்ல சக்தியுள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியால் பார்த்தோமானால், அந்த இரட்டையில் ஒவ்வொன்றும் இரட்டித்து மொத்தம் நான்கு நட்சத்திரங்கள் என்று அறியலாம்.

இந்த நான்கு நட்சத்திரங்களுக்கும் கீழே தாமரைப்பூவைப் போன்ற ஒரு வெண்மேகம் இருக்கிறது. இவையெல்லாம் வீணா மண்டலம் என்னும் நட்சத்திரக் கூட்டத்தைச் சேர்ந்தவை. இவற்றுக்குக் கிழக்கே உள்ள நட்சத்திரக் கூட்டம் ('ஸிக்னஸ்') வாக்ஹம்ஸம், ராஜஹம்ஸம் என்பவை. ஹம்ஸ நட்சத்திரங்களைப் பற்றிய புகழ் ரிக் வேதத்தில் பல இடங்களில் காணப்படுகிறது.

நம் தெய்வங்களில் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா நான்கு முகங்களை உடையவர். அவருக்குத் தாமரை ஆசனம். அவர் முகத்தில் இருக்கும் ஸரஸ்வதி வீணையைக் கையில் தரித்தவள். பிரம்மாவுக்கும் ஸரஸ்வதிக்கும் வாகனம் அன்னம். மேலே ஆராய்ந்த வான சாஸ்திர விசேஷங்களைக் கொண்டே, இப்படி அமைத்திருக்கிறார்கள்.

**பிரம்ம லோகத்து ஓசை:** ஆகாய மண்டலத்துக்குக் கண்ணை ஒப்பதென்று வேத கால ரிஷிகளும் (ரிக்வேதம் 1. 22-20. 'தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:, திவீவ சக்ஷுராததம்') இக்காலத்து விஞ்ஞானிகளுங்கூட மிக முக்கியத்துவம் கொடுத்துள்ள விஷ்ணு பதத்துக்குச் சமீபத்திலேயே வடக்கில் இந்தப் பிரம்ம ஸரஸ்வதி நட்சத்திரங்கள் கூடிய வீணா மண்டலம் இருக்கிறது. இதை நாம் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்த இடந்தான் உலகம் முழுவதற்கும் ஒலியைப் பரப்பும் ஸ்தானம் (ஸெலெஸ்டியல் பிராட்காஸ்டிங் ஸ்டேஷன்) என்று கீழ்க் கண்ட பரிசோதனைகளால் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

1932-ஆம் வருஷத்தில் ஒரு விசேஷ சம்பவம் ஏற்பட்டது. 'பெல் டெலிபோன் லெபோரடரீஸ்' என்னும் ஆராய்ச்சிச் சாலையில் ரேடியோ எஞ்ஜினீயராகக் கார்ல் ஜே. ஜான்ஸ்கி என்பவர் கொஞ்சகாலம் வேலைசெய்தார். ரேடியோச் செய்தி

களை வாங்கும் யந்திரத்தில் அவருக்கு ஒரு நாள் விசித்திரமான ரீங்காரம் போல் ஒரு சப்தம் கேட்டது. தினமும் அந்த ரீங்காரம் கேட்டது. இந்தச் சப்தத்துக்கும் சூரியனுடைய போக்குக்கும் சம்பந்தம் எதவும் இருப்பதாகத் தெரியவில்லை. அது சூரியோதயத்துடன் வரவில்லை; சூரியாஸ்தமனத்துடன் நிற்கவும் இல்லை. இந்தச் சப்தம் சூரிய குடும்பத்துடன் சம்பந்தப் பட்டதல்லவென்று அவர் சோதனையால் தெளிவாகக் கண்டுபிடித்தார். ஆனால், இந்தச் சப்தத்திற்குப் பிறப்பிடம் எது?

அமெரிக்காவில் ஹார்வர்டு யூனிவர்ஸிடியில் நட்சத்திர ஆராய்ச்சிச் சாலை யொன்று இருக்கிறது. அதில் வானசாஸ்திர விற்பன்னராய் உலகப் பிரசித்தி பெற்ற டாக்டர் ஷாப்லியின் உழைப்பினாலும் மேற் சொன்ன ரேடியோ எஞ்ஜினீயர் ஜான்ஸ்கியின் பரிசோதனையினாலும் பெரிய விஷயமொன்று உலகத்துக்குத் தெரியவந்தது. மின்சார அலைகளின் மூலமாய் உலகம் முழுவதற்கும் ஒலியைப் பரப்பும் நிலையம் ஒன்று வீணா மண்டல நட்சத்திரக் கூட்டத்தில் இருக்கிறது. அதுவே 'ஸெலெஸ்டியல் பிராட்காஸ்டிங் ஸ்டேஷன்'. இந்த ஸ்தானத்தைத்தான் நம்மவர்கள் வாணி ஹிரண்யகர்ப்பர்கள் வசிக்கும் பிரம்மலோகமென்று நிச்சயமாகத் தெரிவித்திருக்கிறார்கள். விஷ்ணுவின் நாபிகமலத்தில் பிறந்தவர் பிரம்மா. நட்சத்திர ரூபிகளான பிரம்மவிஷ்ணுக்கள் - தந்தையும் மகனும் - நட்சத்திர வீதியில் ஆகாயத்தின் வடதிசையில் அடுத்தடுத்து வசிக்கிறார்கள்.

**வடக்குத் திக்கின் பெருமையும் அவசியமும்:** நிலத்தில் புதைத்த யந்திரம் போலும், சுவரில் அடித்த ஆணியைப் போலும் சூரியன் ஓரிடத்தில் அசையாமல் இருப்பதில்லை. சூரியன் தன் குடும்பத்துடன் ஒரு நாளைக்குப் பத்து லட்சம் மைல் வீதத்துக்குக் குறையாத வேகத்துடன் வடக்கு நோக்கிப் போகிறான். சூரியனோடு நாமும் வடக்கே வான வெளியில் நட்சத்திர ரூபியாக இருக்கும் அனந்த பத்மநாப மூர்த்தியின் நாபிகமலத்தே பிறந்த கமலாசனனை நோக்கிப் போகிறோம். ரெயில், படகு, விமானம் முதலியவற்றில் போவது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையே நம் ஆகாயப் பிரயாணமும்.

'எங்கும் உறைகிறான் விஷ்ணு' என்னும் வேதவாக்கியம் மதநோக்கில் மாத்திரம் அல்லாமல், இன்றைய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி மூலமாகவும் உறுதிப் படுகிறது. 1783-ஆவது வருஷத்தில் ஸர் வில்லியம் ஹெர்ஷல் துரை மேல் நாட்டார்களுக்கு முதல் முதலாகச் சூரியன் தன் குடும்பத்துடன் வடக்குநோக்கி விஷ்ணுபதம் எனப்படும் 'ஹெர்குலீஸ்' ஸ்தானத்தைக் குறித்து ஒரு கணத்துக்குப் பன்னிரண்டு மைல்கள் வீதம் பிரயாணம் செய்கிறானென்று கண்டுபிடித்துச் சொன்னார். அதன் பின்பு நூறு வருஷங்களுக்கப்பால் ஸைமன் நியூ கூம்ப் என்னும் அமெரிக்க விஞ்ஞான ஆராய்ச்சியாளர், சில திருத்தங்களுடன் ஹெர்ஷல் துரையின் சித்தாந்தத்தைப் பலப்படுத்தினார். பிற்காலத்து வான சாஸ்திரிகள் அதை இன்னும் உறுதிப்படுத்துகிறார்கள். இதனால், நம் தேசத்தில் வடக்குத் திக்குக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் தெளிவாகிறது.

பிரம்ம லோகத்தை உள்ளடக்கிய விஷ்ணுவின் பரமபதம் வடக்

கே இருக்கிறது. சூரியன் தெற்கேயிருந்து வடக்கே போகிறுன். இதனுல் தெற்கு, இறந்த காலத்தில் தள்ளப் படுகிறது. இறந்தவர்கள் பித்ரு தேவதைகள். அவர்களின் அரசன் யமதர்மராஜன். யமனுக்குத் தெற்குத் திசையின் அதிகாரத்தை ஏற்படுத்திய நாள் முதல், நம் முன்னேர்கள் சூரியனது வடதிசை யாத்திரையை நன்ருய் அறிந்திருந்தார்கள். பிரம்மா முதலிய தேவர்களுக்கு இருப்பிடமாகிய வடதிசை மிகப் பவித்திரமானது. கர்மசாட்சியாகிய சூரியன் கிழக்கே உதிக்கிருன். அவனது லட்சிய ஸ்தானம் வடதிசை. சூரியன் உத்தராயணத்தைச் சேரும் காலம் புண்ணிய காலம். உத்தரவாகினியாகிய நதியும் விசேஷமானது. ஸப்த ரிஷிகளும் வடக்கேதான் இருக்கிருர்கள். அந்த ரிஷிகளின் ஸ்தானத்துக்கு மேலே வடபுறம் விஷ்ணுவின் பரமபதம் இருக்கிறது. தவத்தில் சிறந்த உத்தமனுகிய துருவன் வடக்கேதான் இருக்கிருன்.

**பிரம்ம ஸரஸ்வதி தம்பதிகள்:** ஐப்பசியும் கார்த்திகையும் சரத் காலம் ஆகும். மழை ஓய்ந்து பூமியின் சுற்றுப்புறக் காற்று நீராவியால் நிறைந்திருக்கும். மற்ற ருதுக்களைவிடச் சரத் ருதுவில் சந்திரனுக்கு ஒளி அதிகரிக்கும். கிழக்கே 'மில்கி வே' என்ற ஆகாய வீதியில் தெளிவாகத் தெரியும். விஷ்ணுபாதத்தில் பிறந்த கங்கையையும் பாற்கடலையும் வேருக்கி, ஆகாயத்தில் பாலையும் நீரையும் பிரித்துக்கொண்டு நீண்ட வெண்தாமரையைப்போல் ராஜ ஹம்ஸ நட்சத்திரம் வடக்கே மனேரம்யமாகத் திகழும். ஹம்ஸ நட்சத்திரங்களுக்கு மேற்கே வெண்ணெய் உருண்டையைப் போலவும் வெள்ளை மத்தாப்பைப் போலவும் வெளேரென்று ஜொலிக்கும் அபிஜித் நட்சத்திரம் (வேகா) கண்களுக்கு விருந்து செய்யும். அதன் பக்கத்திலே நான்முகப் பிரம்மா அமர்ந்திருக்கிருர். பிரம்மாவின் முகத்தில் வாணிதேவி வீணையுடன் வீற்றிருப்பது பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத காட்சியாக இருக்கும். இந்தக் காட்சி சரத் ருதுவில்தான் மற்றக் காலங்களைவிடத் தெளிவாகத் தெரியும்.

---

## சைவ சித்தாந்த நூல்கள்

சைவ சமயம் ரிக்வேதகாலத்து ரிஷிகள் தொடங்கி இன்றுவரையில் நிலைத்திருக்கிறது. பழங்காலத்தில் உபதேச வாயிலாகவே அது பரவியது. பிற்காலத்தில்தான் சாஸ்திர நூல்கள் தோன்றின. சுமார் கி. பி. 700-இல் ஆசார்ய சோமானந்தர், 'சிவ திருஷ்டி' என்ற நூலை இயற்றினர். அதைச் சார்ந்தே ஆசார்ய உத்பலதேவர், 'ஈசுவரப் பிரத்யபிக்ஞை', 'ஸித்தித்திரயீ' என்ற நூல்களை எழுதினர். பின்பு ஆசார்ய அபிநவகுப்தரும் அவருடைய சீடர்களும் இந்தச் சமயத்தைப் பூர்ணமாக வளர்த்தார்கள். காச்மீரத்தில் ஆசார்ய வசுகுப்தர் சிவசூத்திரங்களைத் தேடியெடுத்து ஒரு புதிய கிளையைத் தோற்றுவித்தார். அவருடைய முக்கியச் சீடரான பட்டகல்லடர் ஒன்பதாம் நூற்றுண்டில் 'ஸ்பந்தகாரிகை' எழுதினர். மகாராஷ்டிரத்தில் மகேசுவரானந்தர் என்ற யோகி சைவதீக்ஷை பெற்று, 'மகார்த்தமஞ்சரி' என்ற பிரசித்த நூலை எழுதினர்.

—பலஜிந்நாத சாஸ்திரி (விசால பாரத்)

# பொய் - நம்பாதீர்கள்!

நிலம், வான், கடல் இந்த மூன்றிலும் வாழும் ஜீவராசிகளைப்பற்றி, அநேக நூற்றுண்டுகளாக மனிதர்கள் பற்பல தகவல்களைச் சேகரித்திருக்கிருர்கள். அவற்றில், பல உண்மை; பல தவறு. தவருன எத்தனையோ தகவல்களை, சர்வ சாதாரணமாக ஜனங்கள் நம்புகிருர்கள். இந்தத் தவறுகளை எப்படி ஜனங்களின் நம்பிக்கையிலிருந்து ஒழிப்பது என்று அறியாமல், ஜீவ ஆராய்ச்சி நிபுணர்கள் தவிக்கிருர்கள். அப்படிப்பட்ட சில தவறுகளை இங்கே பாருங்கள். இவற்றை இனி நீங்கள் நம்பாதீர்கள்:

**1. யானைகளின் வயசு நூறு**

யானைகளின் சராசரி வயசு 60-முதல் 65 வருஷங்களே. தேக்கமரக் காடுகளில் உழைக்கும் யானைகள், கடுமையாய் வேலை செய்கின்றன. அவை 40-வயசுக்கு மேல் கிழடு தட்டி, சக்தி யற்று ஓய்ந்துவிடுகின்றன.

**2. நெருப்புக் கோழிகள் மணலுக்குள்ளே தலையைப் புதைத்துக் கொள்ளும்.**

பூர்வ காலப் பாலைவன நாடோடி ஜாதியார் கட்டிவிட்ட கதை இது. அவர்கள் யாத்திரை செய்கையில், தூரத்திலே அடிவானத்தில் நிற்கும் நெருப்புக் கோழிகளின் தலை மறைந்திருக்கும். அது மண்ணிலே புதைந்தது போல், இந்த யாத்திரிகர்களுக்குத் தோன்றும். இதிலிருந்து முளைத்த வதந்தி பரம்பரையாய் வழங்கி வருகிறது.

**3. ஆந்தைகளுக்குப் பகலில் கண் தெரியாது.**

ஆந்தைகளுக்குப் பகலில் மிக நன்ருய்க் கண் தெரியும். அதுமட்டும் அல்ல; மனிதனைவிட மிக நன்ருய் அவை பார்க்கும். ஆனால், ஆந்தை ஒரு காட்டில் இருப்பது தெரிந்தால், மற்றப் பட்சிகளெல்லாம் பயந்து அந்தக் காட்டை விட்டே ஓடிப்போகும்; அவை அப்படி ஓடிப்போனல், ஆந்தைக்கு ஆகாரமே கிடைக்காது. இதற்காகவே, பகலில் ஆந்தை வெளி வருவதில்லை. கண் தெரியாதது காரணமல்ல.

**4. பாம்புகள் சங்கீதத்தை அநுபவிக்கும்.**

பாம்புகளுக்குக் காதே கேட்பதில்லை. பாம்பாட்டி மகுடி ஊதுகையில், பாட்டுக்கு ஏற்றபடி உடம்பை அப்படியும் இப்படியும் ஆட்டுகிருன். அந்த உடம்பசைவைப் பார்த்தே, சர்ப்பமும் படம் எடுத்தாடுகிறது. சங்கீதச் சுவையால் அல்ல.

**5. பன்றிகள் பெருந் தீனி தின்னும்; பட்சிகள் தின்பதோ மிக அற்பத் தீனி.**

உண்மையில், பன்றிகள் தாம் மிகக் கணக்காய்ச் சொற்பத் தீனி தின்பவை. குதிரைகளும் பசுக்களுமே வயிறு புடைக்கத் தின்னும். பட்சிகள் அடங்காப் பசி கொண்டவை. சில பட்சிகள் நாள் தோறும் தின்னும் தீனி அவற்றின் உடம்பு நிறையில் பாதிக்குமேல் இருக்கும்.

# உழைத்தால் காசு

## பி. எம். காளே

* * * * * * * * * * * * * * * * *

**ஒவ்வொருவரின் பொருளாதாரமும் சரியா யிருந்தால், நாட்டின் பொருளாதாரமும் தானே சரியாகிவிடும். இந்த உண்மையை மிக அழகாகவும் ரசமாகவும் விளக்கும் இந்த ஆசிரியர், சாமான்ய மனிதர் அல்ல; பட்டதாரி; பொருளாதார சாஸ்திரத்தை முறையாய்ப் படித்தவர்.**

* * * * * * * * * * * * * * * * *

எனக்குத் தெரிந்த ஒரு நண்பருக்கு, வருமானத்தைப் பார்க்கக் குடும்பம் பெரிது. அவருடைய மூத்த புதல்வனுக்குப் பூணூல் கல்யாணம் வந்தது. வீட்டிலே அது தான் முதல் சுப காரியம் என்ற பழங்காலத்துக் கொள்கையோடு அவர் அதற்கு எண்ணூறு ரூபாா செலவழித்தார். 'இருநூறு ரூபாய் போதுமையா!' என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் என் பொருளாதாரக் கொள்கை அவருக்கு விளங்கவில்லை. ஊளுத்துப்போன பழக்கத்தைக் கைக்கொண்டதனுல் அவர் கடன் வாங்க வேண்டியதாயிற்று.

கடற்கரைக்குக் காற்று வாங்கப் போகலாம் என்ருல் என் மனைவி வர மாட்டாள். என் ஆரோக்கியப் பேச்சு இவளுக்குப் பிடிக்காது. பக்கத்து அறையில் குடியிருக்கும் பாட்டி இவளைக் கோயிலுக்கு அழைத்தால், உடனே இவள் புறப்பட்டுவிடுவாள். குகை போல் அடைந்த கோயிலுக்குள்ளே எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் இருப்பது இவளுக்குப் பழக்கமாகிவிட்டது.

என் நண்பர் ஒருவரின் மனைவி நிறையப் படித்தவள். கஷ்டப்படும் குடும்பம். அந்த அம்மாள் அக்கம் பக்கத்திலிருந்த குழந்தைகளுக்கு ஒரு மணி நேரம் பாடம் சொல்லிச் சுலபமாகப் போதிய பணம் சம்பாதித்திருக்கலாம். என் நண்பரும் அதைத்தான் விரும்பினுர். ஆனல் அந்த அம்மாள், 'பெண்கள் அப்படிச் செய்யும் வழக்கமில்லை' என்று சொல்லிவிட்டாள். இது பத்து வருஷத்துக்கு முந்தி நடந்த விஷயம். நல்ல வேளையாக இப்போது இந்த நிலை மாறி வருகிறது.

எனக்குத் தெரிந்த ஓவியர் ஒருவர் இருக்கிருர். கலையிலே வல்லவர். சித்திரம் வரைவதில் மனைவியும் தமக்கு உதவி செய்யவேண்டும் என்று அவர் ஆனமட்டும் முயன்ருர். பழங் கொள்கைகளிலே ஊறிய அவள் அதற்கு மறுத்துவிட்டாள்.

ஒரு நண்பருக்கு வைத்தியம் நன்ருகத் தெரியும். அவர் இரண்டொரு மருந்துகள் செய்து விற்ருல் நிறையப் பணம் வரும். அவர் ஓரிடத்தில் வேலை செய்து அன்ருட வாழ்க்கைக்கு வேண்டிய அளவு சம்பாதிக்கிருர். ஆனுல் மருந்துகள் செய்து

காப்பிரைட்: வஸந்த் (மராட்டி - ஜூலை '47), பம்பாய் 4.

விற்றுத் தம் பொருளாதார நிலையையும் வாழ்க்கை நிலையையும் மேம்படுத்திக்கொள்ள அவர் விரும்பவில்லை.

இந்த ஐந்து உதாரணங்களும் உண்மையாக நான் வாழ்க்கையிலே கண்டவை. பழைய வழக்கம் என்று சொல்லி மனிதன் கடன் வாங்குவதும், சிறிது நேரமாவது காற்றுட வெளியே போகாமல் கூட்டுக்குள் அடைந்து கிடந்து நோய்க்கு உள்ளாவதும், கிடைக்கக் கூடிய பணத்தை அசட்டை செய்வதும், அதிகப் பணம் கிடைக்கக்கூடிய தொழிலில் கணவனுக்குத் தன்னாலான உதவியைச் செய்ய மறுப்பதும், பணம் திரட்டக்கூடிய வியாபாரம் தெரிந்திருந்தும் அதைச் செய்யாமலிருப்பதும் ஆகிய இவை யெல்லாம் நம்மவர்களின் வாழ்க்கையிலே பொருளாதார நோக்கம் இல்லாமையைக் காட்டுகின்றன. இவர்கள் செம்மையான பொருளாதார நோக்கத்தோடு செயல் புரிந்திருந்தால், இவர்களின் குடும்பம் உயர் நிலை பெறுவதோடு, சமூகமும் நாடுங்கூடப் பொருளாதார நலம் பெற்றிருக்கும்.

பொருளாதாரத்தை முதன்மையாகக் கொண்ட சமூக அமைப்புத்தான் இந்தக் காலத்தின் முக்கிய நோக்கம். கடந்த நானூறு வருஷங்களாக நிகழ்ந்த சரித்திர சம்பவங்களுக்குப் பொருளாதார நிலைகளே காரணம். இப்படியிருக்க, வாழ்க்கைக்கு ஆதாரமான பொருள் நிலையைப் பற்றிச் சிந்திக்காமலிருப்பது விந்தையாக இல்லையா? சூழ்நிலைகளைக் கவனிக்காமல் அசட்டையாக இருப்பது, இந்தியர் வாழ்க்கையின் தனிப்பண்பாகிவிட்டது.

பம்பாயைப் போன்ற நகரத்தில் பஸ், டிராம், டெலிபோன், ரேடியோ முதலிய நவீன சாதனங்களோடு தொடர்பு இல்லாமல் ஒருவன் வாழ முடியுமா? பழைய குருட்டு நம்பிக்கைகளிலே பற்று வைத்து வாழ்வது நாட்டுக்கே தீமை விளைவிப்பது. பெரிய பெரிய பொருளாதாரச் சிக்கல்களை அரசாங்கத்தார் கவனிப்பதுபோல, தனி மனித வாழ்க்கையில் உண்டாகும் பணச் சிக்கல்களை ஒவ்வொருவனும் கவனித்துத் தன் வாழ்க்கையைப் பொருளாதார நோக்கில் வெற்றிகரமாக்க முயலவேண்டும். நம்மைச் சுற்றியுள்ள நிலைகளையும் மாறும் உலகத்தையும் கூர்ந்து நோக்கி, நமது அன்றாடப் பழக்க வழக்கங்களைப் பொருளாதார நோக்கோடு மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டும்.

மத்திய சர்க்கார் ஸ்தாபித்துவிட்டதனால் மட்டும் இந்தியாவின் பிரச்னைகள் தீர்ந்துவிடவில்லை. தனி மனித வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் பொருளாதார நோக்கத்துடன் பொது மக்கள் சர்க்காரோடு ஒத்துழைக்காவிட்டால், சுதந்தரம் கிடைத்திருந்துங்கூட அது நிலைத்து நிற்காது.

விஞ்ஞான முறையில் வேளாண்மை, கிராமக் கைத்தொழில்கள், கப்பல்களிலும் ரெயில்வேக்களிலும் பலவித வேலைகள், யந்திரக் கலையில் பயிற்சி, ரசாயனப் பரிசோதனை, பச்சிலைகளிலிருந்தும் பழங்களிலிருந்தும் மருந்துகளும் உணவுப் பண்டங்களும் தயாரித்தல்-இப்படிச் செல்வம் வளர்க்கும் வழிகள் எத்தனையோ இருக்க, குமாஸ்தா வேலை, வக்கீல், டாக்டர், மிஞ்சிப் போனால் எஞ்சினீயர் தொழிலுக்கு மேல், படித்த இளைஞர்களுக்கு ஆசை ஓடுவதில்லை. பெண்கள் உபாத்தியாயினிகளாகவும் நர்ஸுகளாகவும் டாக்டர்களாகவும் வந்திருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ துறைகளில் அவர்கள் உழைக்கலாம்.

அசட்டையினுல் ஒவ்வொரு குடும்பத்திலும் எத்தனையோ நஷ்டங்கள் உண்டாகின்றன. ஒரு குடும்பத்தில் வெந்நீரில் குளிப்பவர்கள் யாவரும் இரண்டு மணி நேரத்துக்குள்ளே வேலையை முடித்துக்கொண்டால், மாதத்துக்கு இரண்டு ரூபாய் சராசரி மிச்சமாகும். அன்றுட வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பொருளாதாரத்தை முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும். யோக்கியமான வழியில் கூடுமான அளவு அதிகமாகப் பணம் சம்பாதிக்க வேண்டும். அந்தப் பணம் நம் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பயன்படுவதாக இருக்க வேண்டும். நமது பணப் புழக்கத்தினுல், நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ அந்நிய நாட்டுக்குச் செல்வம் போகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். பொருளாதார நலத்துக்காக, சமூகப் பழக்க வழக்கங்களையோ மதக் கட்டளைகளையோ மீறி நடந்தாலும் பரவாயில்லை. இத்தகைய தனிப்பட்ட பொருளாதார வாழ்க்கை, மொத்தத்தில் இந்திய நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உரமளிக்கும்.

## ஜயகரின் முதல் அப்பீல் வழக்கு

ஜயகர் ஜூனியர் வக்கீலாக இருந்த சமயம். பரபரப்பான ஓர் அப்பீல் வழக்கை முதல் முதலாக அவர் நடத்த இசைந்தார். ஓர் இடைப் பையன் ஓர் அழகிய மங்கையைப் பலாத்காரம் செய்ததாக வழக்கு.

''மை லார்டு, இது காதற் கதையை அடிப்படையாகக் கொண்ட ஒரு வழக்கு'' என்று ஜயகர் ஆரம்பித்தார்.

ஜட்ஜ் இதைக் கேட்டுத் திடுக்கிட்டு, "நீங்கள் என்ன சொன்னீர்கள், ஜயகர்!" என்று கேட்டார்.

''மை லார்டு, அற்புதமான காதற் கதை அடங்கிய கேஸ் இது'' என்று ஜயகர் அமைதியாகச் சொன்னுர்.

''சரி சரி, அது என்னவென்று பார்க்கலாம்!'' என்ருர் ஜட்ஜ்.

''இந்தப் பலாத்காரக் குற்றம் நிலவிலே நடந்ததாகச் சொல்லப் படுகிறது, மை லார்டு!'' என்று ஜயகர் அந்தக் காட்சியை அழகாகச் சித்திரித்துக்கொண்டே, "மை லார்டு, குளுமையான ஆற்றங்கரை; திரயோதசி நிலவு. லோரன்ஸோவும் ஜெஸிகாவும் போன்ற இந்த அழகிய ஜோடி அந்தச் சுற்றுப்புறத்து எழிலிலும் மாயக் காட்சியிலும் மயங்கிப் பாட ஆரம்பித்தது...." என்ருர்.

ஆங்கில ஜட்ஜ் திடீரென்று, "அந்தப் பையனும் பெண்ணும் இங்கே கச்சேரியில் இருக்கிருர்களா?" என்று கேட்டார். ஜயகர் அந்த ஜோடியைக் கொண்டுவந்து நிறுத்தினுர்.

அந்தப் பெண்ணின் அபூர்வ அழகைக் கண்டு மயங்கிய ஜட்ஜ் வருத்தத்துடன், ''நான் இந்த இளைஞனுக்காக அநுதாபப்படுகிறேன்'' என்று கத்தினுர்.

பையன் விடுதலை யடைந்தான்.

— ஸந்த்ராம் (ஸரஸ்வதி)



# சொல் பொருந்துமா?

அவசரத்திலே ஒரு வார்த்தையை ஒரு வாக்கியத்திலே சேர்த்து எழுதிவிடுகிறோம். ஆனால் அந்த வார்த்தையை விட இன்னும் பொருத்தமான வார்த்தை கிடைத்தால் நல்லதென்று தோன்றுகிறது. வார்த்தைகளைத் தேடுகிறோம். குறிப்பிட்ட கருத்தைத் தெளிவாகவும் சரியாகவும் தெரிவிக்கும் வார்த்தை அகப்பட்டால் எத்தனை சந்தோஷமாக இருக்கிறது!

கீழுள்ள வார்த்தைகள் கிட்டத்தட்ட ஒரே கருத்தைச் சார்ந்தன. ஆனாலும் ஒன்றுக்கொன்று வித்தியாசம் உண்டு. பின்னே வரும் வாக்கியங்களில் சரியான வார்த்தையைச் சரியான இடத்தில் பொருத்திப் பாருங்கள். உங்கள் முடிவு சரியா என்பதை வேறு ஓரிடத்தில் உள்ள விடையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**வார்த்தைகள்:**

1. **வாய்த்தது**
2. **நேர்ந்தது**
3. **கிடைத்தது.**

**பொருத்தவேண்டிய வாக்கியங்கள்**

(க) நான் கடைவீதிக்குப் போய்ச் சாமான்கள் வாங்கிவர எண்ணினேன். நான் அவனைச் சந்திக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டு போனேனா, என்ன? அப்படி ஒன்றும் இல்லை. சந்திக்கும் சந்தர்ப்பம்........கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தேன்.

(ங) அவனை எப்படியாவது மட்டந்தட்ட வேண்டுமென்று நினைத்தேன். நல்ல வேளையாக அன்று நாலு பேருக்கு நடுவில் பைத்தியக்காரத்தனமாக அவன் உளறிக் கொட்டினான். நான் சும்மா இருப்பேனா? சரியான தருணம்......; அவனுடைய பேதைமையை அலசிக் காட்டி மனிதனைத் திக்குமுக்காடச் செய்துவிட்டேன்.

(ச) நான் எப்பொழுதாவது அந்த மகானைச் சந்திக்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். அன்று எதிர்பாராமல் அந்த லாபம்........அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டேன்.

**வார்த்தைகள்:**

4. **கூலி**
5. **ஊதியம்**
6. **சம்பளம்**
7. **காணிக்கை**
8. **நன்றியடையாளம்.**

**பொருத்தவேண்டிய வாக்கியங்கள்:**

(ஞ) அவர் செய்த உபகாரம் மிகப் பெரிது; அதற்குக் கைம்மாறு செய்ய இயலவில்லை. ஏதோ நான் கொடுத்தது....என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(ட) ஆசாரியஸ்வாமிகள் இந்த ஊருக்கு விஜயம் செய்து நல்ல உபதேசம் செய்தார். ஊரார் வைத்த ....கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் இருக்கும்.

(ண) எழுதலாம் அப்பா, எழுதலாம். இன்னும் இரண்டே வாரத்துக்குள் ஒரு நாடகத்தை எழுதித் தந்துவிடலாம். ஆனால் அதற்கு என்ன....கிடைக்கும்; சொல்.

(த) விறகு பிளக்க என்ன.... கேட்கிறான்?

(ந) மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய்....கொடுத்தா குமாஸ்தா வைப்பார்கள்?

[விடைக்கு 69-ஆம் பக்கம் பார்க்க.]

# அமெரிக்கப் பொதுஜனம்



**பொது:** அமெரிக்காவில் ஆணும் சரி, பெண்ணும் சரி, 10-இல் 6 பேர் ஸிகரெட் புகைக்கிறார்கள்; மது பானம் செய்கிறார்கள்; ஆனாலும் தாங்கள் ஆரோக்கியமா யிருப்ப தாகவே சொல்லுகிறார்கள். 3-இல் ஒருவர் கால் வலிக்கிறது என்கிறார். 4-இல் ஒருவர் பியானோ வாசிக் கிறார். 5-இல் ஒருவருக்குக் காது மந்தம்; சீட்டியடிக்கத் தெரியாது. 10-இல் ஒருவர் எந்த வேலைக்கும் இடது கையையே உபயோகிக் கிறார். தலைமயிரின் நிறம் பாதிப் பேருக்குப் பழுப்பு; கால்வாசிப் பேருக்குச் சாம்பல் அல்லது வெள்ளை; பத்தில் ஒருவருக்குத்தான் செம்பட்டை. 5-இல் 2-பேருக்குப் பழுப்பு விழி; 3-இல் ஒருவருக்கு நீலவிழி. 100-இல் 96-பேர் கடவுள் நம்பிக்கை உள்ளவர். 100-இல் 76-பேர் மரணத்துக்குப் பின் வாழ்வு உண்டு என்று நம்புகிறார்கள். பாதிப் பேர் ஆலயத்துக்குச் செல்லுகிறார் கள். மூன்றிலொருவர் உணவு உண்ணு முன் பிரார்த்தனை செய் கிறார்.

**ஆண்கள்:** சராசரி அமெரிக்கன் 5 அடி 9 அங்குல உயரமும் 158-பவுண்டு நிறையும் இருக்கிறான்; 15 நிமிஷத்தில் 2-மைல் பிரயாணம் செய்து வேலைக்குச் செல்கிறான்; எதோ சில சமயம் சூதாடுகிறான்; சூதில் ஜயத்தைவிட நஷ்டமே அதி கம் என்கிறான்.

10-இல் 6-பேர் சற்றுக் கறுத்த பெண்களை விரும்புகிறார்கள்; 10-இல் 3-பேர்தாம் செம்பட்டை நிறப் பெண்களை விரும்புகிறார்கள்; மீதிப் பேர் சிவப்பான பெண்களையே விரும்புகிறார்கள்.

பெரும்பாலான அமெரிக்கர் பிரம்மசாரிகளை விட மணமானவர் களே மகிழ்ச்சியுட னிருப்பதாக எண்ணுகிறார்கள். மனைவி அழகா யிருப்பது முக்கியம் அல்ல என்றும் அவள் சரியான தோழியாகவும் புத்திசாலியாகவும் குடித்தனத் திறமை வாய்ந்தவளாகவும் இருப் பதே முக்கியம் என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். பெண்கள் தொணதொண என்று பேசுவதாக வும், ஜனாதிபதி பதவியை மட்டில் பெண்ணுக்கு அளிக்கவே கூடா தென்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

**பெண்கள்:** சராசரி அமெரிக்கப் பெண் 5- அடி 4- அங்குல உயர



# 25 ரூபாய் பரிசு

## கட்டுரைப் போட்டி

கீழே சராசரி அமெரிக்கரைப் பற்றி ரசமான ஒரு சொல் சித்திரம் தந்திருக்கிறோம். இது அமெரிக்க சர்க்காரின் விளம்பர இலாக்காதார் விநியோகித்துள்ள ஒரு கட்டுரையாகும். இதே போலச் சராசரி தமிழருடைய இன்றைய ஆசைகள், நம்பிக்கைகள், அபிப்பிராயங்கள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றை உள்ளது உள்ளவாறும் சுருக்கமாகவும் விளக்கிக் காட்டும் சிறந்த கட்டுரைக்கு ரூ. 25 பரிசளிக்கத் தீர்மானித்திருக்கிறோம். இந்தக் கட்டுரைப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்கள் கட்டுரைகள் டிசம்பர் 30-ஆம் தேதிக்குள் 'மஞ்சரி' காரியாலயத்துக்குக் கிடைக்குமாறு அனுப்பிவிட வேண்டும். பரிசுக்குரிய கட்டுரையைத் தேர்ந்தெடுப்பதில் 'மஞ்சரி' ஆசிரியர் போர்டின் தீர்ப்பே முடிவானதாகும். பரிசு பெற்ற கட்டுரை 'மஞ்சரி'யில் பிரசுரமாகும். பரிசு பெறாத கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா. இது சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்கு வரத்தும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது.

ஆசிரியர்,
'மஞ்சரி'

மும் 132-பவுண்ட் நிறையும் இருக்கிறாள். நீந்தியும் உலாவியும் உடற்பயிற்சி செய்கிறாள். தமாஷாகச் சீட்டாடுகிறாள். தன் தேகாரோக்கியத்துக்காகவே பெருந்தீனி தின்பதாக நினைக்கிறாள். குடும்பப் பணவரவு செலவில் தன் கணவனின் சம பங்காளியாக இருக்க விரும்புகிறாள். உத்தியோகத்தை விட விவாகமே மேல் என்று மதிக்கிறாள். விவாகச் சடங்கில் மணமகள் 'கணவனுக்குப் பணிந்து நடப்பேன்' என்று சொல்லும் வாக்குறுதியை நீக்க வேண்டுமென்று அவள் கோருகிறாள். ஆனால், தனக்கு ஆண் பணிந்து நடக்க வேண்டும் என்று மட்டில் விரும்புகிறாள்.

கணவன் தன்னிடம் அன்போடும் எரிந்து விழாமலும் விட்டுக்கொடுக்கும் மனோபாவத்துடனும் நடந்து கொள்ள வேண்டுமென்று அவள் விரும்புகிறாள். ஒரு குடும்பம் என்றால் மூன்று குழந்தைகள் இருக்க வேண்டும், அந்த மூன்று குழந்தைகளையும் தூக்கி வளர்ப்பதில் தனக்குத் தன் கணவன் பூர்ண ஒத்தாசையும் புரிய வேண்டும் என்று அவள் விரும்புகிறாள்.

**குடும்பங்கள்:** ஆண்கள் 25-வயது வந்த பிறகும் பெண்கள் 21-வயது வந்த பிறகுமே மணம் புரிந்து கொள்ள வேண்டுமென்றும், கண





வனும் மனைவியும் வாரம் ஒன்றுக்கு 50- டாலராவது சம்பாதிக்கக் கூடிய நிலையை அடையுமுன்பு மணம் செய்துகொள்ளக் கூடாதென்றும் அமெரிக்கர் திடமாய் நம்புகிறார்கள். வரனை நிச்சயம் செய்துவிட்டு அவர்கள் வெகுகாலம் வரையில் மணம் செய்துகொள்ளாமலே யிருக்கிறார்கள். விவாகத்துக்கு முன்பு, ரத்தத்தைப் பரீட்சித்துக் கொள்ள விரும்புகிறார்கள். விவாக ரத்துச் சட்டங்களை இன்னும் சுலபமாக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை. ஹைஸ்கூல்களில் காமசாஸ்திரத்தைப் போதிக்க வேண்டும் என்று அபிப்பிராயப் படுகிறார்கள். பணம், நடத்தையில் சந்தேகம், குழந்தைகள் இவைபற்றியே பெரும்பாலான குடும்பச் சச்சரவுகளும் நேரிடுவதாக அவர்கள் சொல்லுகிறார்கள். எவையேனும் ஜீவ ஜந்துக்களை, வீட்டிலே வளர்க்க விரும்புகிறார்கள். ஆனால், பூனைகளைவிட நாய்களை வளர்ப்பதில் தான் அவர்களுக்கு அதிகப் பிரியம்.

குழந்தைகள் செய்யும் குற்றங்களுக்குப் பெற்றோரே பொறுப்பாளிகள் என்று பெரும்பாலான அமெரிக்கர் நம்புகிறார்கள். தங்கள் பிள்ளைகள் அரசியலில் பிரவேசிப்பது அவர்களுக்கு விருப்பமில்லை. டாக்டர்களாகவோ, எஞ்சினீர்களாகவோ, விவசாயிகளாகவோ, பாதிரிகளாகவோ, லாயர்களாகவோ, வியாபாரிகளாகவோ, உபாத்தியாயர்களாகவோ தொழில் புரிய வேண்டும் என்பதே அமெரிக்கர்களின் விருப்பம்.

அமெரிக்கக் குடும்பங்களில் குடும்பத்தினர் அனைவரும் வார நாட்களில் இரவு 10 - மணிக்கும் சனிக்கிழமை இரவு 11 - மணிக்கும் படுக்கச் செல்லுகிறார்கள். அவர்களுக்குச் சுலபத்தில் தூக்கம் வருகிறது. வாரநாட்களில் காலை 6 - 30 மணிக்கும் ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கும் விழித்தெழுகிறார்கள்.








அமெரிக்கக் குடும்பத்தினர் எங்கேயாவது யாத்திரை போக முடியுமானுல், அவர்கள் போக விரும்பும் நாட்டின் வரிசைக் கிரமம் இதுதான்: (1) இங்கிலாந்து, (2) பிரான்ஸ், (3) ஜெர்மனி, (4) ருஷ்யா, (5) இதாலி, (6) ஸ்விட்ஜர்லாந்து, (7) அயர்லாந்து, (8) நார்வே. ஆனல், அவர்கள் இஷ்டப்பட்ட இடத்தில் வசிக்க முடியுமானுல், முதலாவதாகக் கலிபோர்னியா, அடுத்தபடியாக ப்ளாரிடா, நியூ யார்க், டெக்ஸாஸ் இந்த ஏதாவது ஓர் அமெரிக்க ஸ்தலத்திலேதான் வசிக்க விரும்புவார்கள்.

---

### பெஸண்டும் பிரசங்க மண்டபமும்

லண்டனிலுள்ள ஆல்பர்ட் ஹால் என்ற மண்டபத்தில் ஒரு பிரசங்கி பேசினல், பேச்சினிடையிடையே ஓர் எதிரொலி கேட்கும். இரும்பை இரும்பு உராய்வது போல் இருக்கும் அந்த ஒலி.

ஒரு நாள் மாலையில் அங்கே நான் காலரியில் உட்கார்ந்திருந்தேன். பலர் பேசினர்கள். ஒவ்வொருவர் பேச்சின் போதும் அந்த எதிரொலி கேட்டது. பெஸண்ட் பேசியபோது மட்டும் அந்த எதிரொலி கேட்கவில்லை.

கொஞ்ச நேரத்தில் மிஸ் பிரைட் என்ற பெண் சிற்றுண்டி அளித்தாள். அப்போது, இந்த எதிரொலி பற்றிப் பேச்சு வந்தது. "ஒவ்வொரு பிரசங்க மண்டபத்திலுமே ஏதாவது ஒரு குறை இருக்கும். ஒரு குறிப்பிட்ட ஸ்தாயியில் குரல் எழும் போது தான், அந்தக் குறை வெளிப்பட்டு எதிரொலி உண்டாகும். ஒவ்வொரு பிரசங்கியும் தான் பேசும் மண்டபத்தின் குறையை நுட்பமாய்க் கண்டுகொண்டு, அந்தக் குறிப்பிட்ட ஸ்தாயியைத் தன் குரலிலிருந்து விலக்கிவிட வேண்டும்" என்று பெஸண்ட் விளக்கினர்.

—ஸ்ரீபிரகாசா (பிரீ இந்தியா)

### சொல் பொருந்துமா விடை.

65-ஆம் பக்கத்தில் உள்ள 'சொல் பொருந்துமா?' என்ற சொற் பரீட்சைக்கு விடை:

| | | |
|---|---|---|
| 1 - ங; | 2 - க; | 3 - ச; |
| 4 - த; | 5 - ண; | 6 - ந. |
| 7 - ட; | 8 - ஞ. | |

நீங்கள் பொருத்திய சொற்களில், 6 சரியென்ருல், உத்தமம்; 5 சரியென்ருல், மத்திமம்; 4 சரியென்ருல், குற்றமில்லை.

நெப்போலியன்போன்ற வீரனும் சரி,
கலிபா போன்ற பக்தரும் சரி, மனத்தை ஒரு
நிலைப்படுத்தியே அபூர்வ காரியங்களைச் சாதித்தார்கள்.

# குவிந்த மனம்

## முத்தனஹள்ளி கிருஷ்ண சர்மா

எந்தக் காரியம் செய்யவேண்டுமானாலும் மனிதன் தன் சித்தத்தைக் கட்டுப்படுத்தி ஒரு நிலையில் வைக்க வேண்டியது அவசியம். விவகாரம் எதுவானாலும், அதன் வெற்றி, தோல்வி அவரவரின் ஏகாக்கிர சித்தத்தையே பொறுத்தது.

வீரன் நெப்போலியனைப் பற்றி ஒன்று சொல்வதுண்டு. ஒரு முறை யுத்த களத்தில் அவன் ஏதோ ஒரு கணித சாஸ்திரப் பிரச்னை ஆராய்ச்சியில் இறங்கிவிட்டான். போரில் பல வீரர் மாள்வதோ, தன் கூடாரத்தில் குண்டு விழுந்ததோ ஒன்றும் அவனுக்குத் தெரியவில்லை. தான் சிந்தித்த விஷயத்தில் அப்படி நிலைத்துவிட்டது அவன் மனம். போர்க்களத்தில் அவன் இப்படி இருந்தது சரியா தவறா என்ற ஆராய்ச்சி இங்கே வேண்டியதில்லை.

இஸ்லாம் மதத்தை ஸ்தாபித்த ஹஜ்ரத் முகம்மது என்பவருக்குப் பிறகு, அந்தப் பதவியை ஏற்ற கலீபாவைப் பற்றிய கதை ஒன்று உண்டு. ஒரு யுத்த கட்டம். தொழுகை வேளை வந்தது. யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. என்றாலும், உடனே கலீபா தம் மனத்தைக் கட்டுப்படுத்தி முழங்கையைக் கீழே ஊன்றி அல்லாவின் தியானத்தில் இறங்கினார். அந்த நேரத்தில் யுத்தம் நடக்கிறது என்ற நினைப்பே அவருக்கு அற்றுப் போய்விட்டது. இஸ்லாமிய மதம் பிரசாரமானதற்குக் காரணம் முஸ்லிம்களின் மனம் நிலைபெற்ற இந்த நிஷ்டையேயாகும். கத்தியால் அது பிரசாரமாயிற்று என்று நினைப்பது தவறு.

இன்னொரு சம்பவம்: முஸ்லிம் சாது ஒருவர் இருந்தாராம். அவருடைய தேகத்தில் ஓர் அம்பு தைத்தது. அதனால் அவருக்கு மிகுந்த வலியும் வேதனையும் உண்டாயின. வலிமிகுதியால் பாணத்தைப் பிடுங்கவும் முடியவில்லை. இப்பொழுது கொடுக்கும் மயக்க மருந்துகள் அப்போது பழக்கத்தில் இல்லை. என்ன செய்வது என்று ஒருவருக்கும் விளங்கவில்லை. அச்சமயம் அந்தச் சாதுவின் தோழர் சிலர் அங்கே வந்தனர். ''தொழுகைக்கு நேரமாகிவிட்டது. முதலில் தொழுவோம்; பிறகு பாணத்தைப் பற்றி யோசிக்கலாம்'' என்றனர். தொழுகையில் இறங்கிய சாது சில விநாடிகளில் மனத்தை நிலைப்படுத்தித் தம்மை மறந்தார். அப்பொழுது அவர் உடம்பிலிருந்த பாணத்தைப் பிடுங்கிவிட்டனர். அது அவருக்குத் தெரியவே தெரியாது!

மனிதனுடைய சரீரம் முதிர முதிர ஆத்ம பலம் ஓங்கவேண்டும். உபமானமாக ஒரு கனியை எடுத்துக் கொள்வோம். அது பூத்துக் காய்த்துப் பழுத்து, உதிர்ந்து அழுகிப் போகிறது. ஆனால் உள்ளே இருக்

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம் - 28-9-'47),
20-ஏ, லால்பாக் ரோட், பங்களூர்.

கும் விதை மட்டும் நாளுக்கு நாள் உறுதி பெற்றே வருகிறது. நம் ஆத்மா விதை. தேகம் முதிர முதிர, இடிமுழக்கத்தால் பூக்கும் தாழை போல ஆத்ம பலம் பூத்து முதிரவேண்டும். கஷ்டங்களும் நஷ்டங்களும் வரவர, இந்த உறுதி முறுக்கேற வேண்டும். இதற்கு ஒரு நிலைப்பட்ட சித்தம் அவசியம்.

இந்த மன ஒருநிலையைப் பயிலும் வழியைப் பகவான் கீதையில் சொல்லுகிறார். சிறிது சிறிதாகக் கவலையை ஒழிக்க வேண்டும்; பந்தங்களிலிருந்து விலகிப் பகவானின் பாதாரவிந்தங்களில் ஒரு முகமாக மனத்தை ஒப்படைக்க வேண்டும். இது பகவானின் கீதை வாக்கு; இஸ்லாமின் அரியவாக்கும் இதுவே.

---

## ஆசிரியரும் ராஜாஜியும்

**கல்கத்தா தினசரிப் பத்திரிகை ஒன்றில், என் சுயேச்சையான அபிப்பிராயங்களை நான் சில பத்திகள் எழுதி வருகிறேன். ராஜாஜி வருமுன் அவர் நியமனத்தைப்பற்றி அதன் ஆசிரியர் என் அபிப்பிராயத்தைக் கேட்டார். ராஜாஜிதாம் மேற்கு வங்காளத்துக்குச் சரியான கவர்னர் என்று நான் சொன்னேன். ஆசிரியர் ஆட்சேபித்தார். ஆனாலும், நான் எழுதுவதில் குறுக்கிடவில்லை. ஏனென்றால், ஆசிரியர் என் அபிப்பிராயத்தில் தலையிடுவதில்லை என்று முதலிலிருந்தே எங்களுக்குள் ஏற்பாடு.**

**ஆசிரியரை ராஜாஜி ஒரு நாள் சர்க்கார் மாளிகைக்கு அழைத்து, தேநீர் விருந்தளித்தார். அடுத்த நாள் ராஜாஜி பிரசங்கம் ஒன்றைப்பற்றி விகடமாக நான் ஏதோ எழுதினேன். வங்காளி ஆசிரியர் என்னிடம் வந்தார்: "தெய்வத்தின்மீது ஆணையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ராஜாஜியைப் பற்றி உமது விகடம் வேண்டாம். வேறு யாரையாவது விகடம் செய்யும். ராஜாஜி ஒரு மகான். அவர் மிகப் பெரியவர். அவரைப்பற்றி நான் தப்பபிப்பிராயம் கொண்டிருந்ததற்கு வருந்துகிறேன்" என்றார்.**

**இது எனக்கு மிக்க மகிழ்ச்சி தந்தது. ஏனென்றால், இதே ஆசிரியர்தாம் ராஜாஜி வருமுன்பு, "ராஜகோபால், திரும்பிப் போம்!" என்ற கோஷத்தை ஆதரித்தவர்.**

**— 'பிரீ இந்தியா'வின் கல்கத்தா நிருபர்.**

**புனா குதிரைப் பந்தயத்தில் 'கவர்னர் கப்'பைச் 'சுதந்தர கப்' என்று பெயர் மாற்றினார்கள். அந்தச் 'சுதந்தர கப்'பை 'நியூ இந்தியா' (புதிய இந்தியா) என்ற குதிரை ஜயித்துவிட்டது.**

**—'லாபா' (லவுண்ட்)**

# சுதந்தரக் கோயில்

ஜதுநாத் சர்க்கார்

> இந்து தேச சரித்திரத்திலே ஏதாவது சந்தேகம் வந்தால், ஜதுநாத் சர்க்காரைக் கேட்டால் போதும். அவர் சொன்னது தான் பிரமாணம். ஆராய்ச்சி மிக்க சரித்திரப் புஸ்தகங்களை எழுதியுள்ளவர் அவர். நம் சுதந்தரத்தைக் காப்பாற்றிக்கொள்ள, அவர் கூறும் எச்சரிக்கையை ஒவ்வோர் இந்தியரும் மனத்தில் பதிந்துகொள்ள வேண்டும்.

சுதந்தரக் கோயிலின் கோபுர வாசல் திறந்துவிட்டது. நாம் துவஜஸ்தம்பத்தின் அருகே நின்று அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஸந்நிதியில் நுழையு முன்பு, பழந்தலைவர்களை நாம் நினைவுகூரவேண்டும். அவர்கள் இந்திய சுதந்தரத்தைப் பற்றிக் கனவு கண்ட தலைவர்கள்; தங்கள் வாழ்நாள் முழுதும் அதைப் பிரகடனம் செய்த தலைவர்கள். அவர்களுடைய உபதேசம் நம் மக்களுக்கு ஜீவனூட்டியது. பல்லாண்டு காலம் அவர்களின் உபதேசம் நீடித்து நிலவும். ஏனென்றால், அவர்கள் கோலிய பாதையிலேதான், நம் சிந்தனையும் செயலுமெல்லாம் பின்பற்றிச் சென்றன; கடைசியாக, இன்று அவை நமக்குக் கனிதரவும் பெற்றோம்.

இன்று நமது, இந்திய சுதந்தர லட்சியம், ஹிந்து ஸ்வராஜ்யம் அல்ல. புராதனமான ஆர்யாவர்த்தமும் திராவிடநாடும் மகாராஷ்டிரமும் நாளெல்லாம் பாடுபட்டது அதற்காக அல்ல. இன்று நமது சுதந்தர லட்சியம், ஒரு ஜாதிக்கோ ஒரு வகுப்புக்கோ உரிய சுதந்தரமுமல்ல. நம் தேசசரித்திர இடைக்காலத்தில் ராஜபுத்ர க்ஷத்திரியர்கள் ரத்தம் சிந்தியது அதற்காக அல்ல. நாம் ஆர்வத்தோடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சுதந்தரம், சமயத்தாலோ வகுப்பாலோ பிரதேசத்தாலோ குறுகிய வரம்பு கோலப்பட்டதல்ல; ஒரு வர்க்கத்துக்கு மட்டிலுமே நலஞ்செய்யும் மூளியான பாக்கியமும் அல்ல.

மேல்நாட்டு நாகரிக லாபங்கள் அனைத்தையும், நவீன ஸயின்ஸ் பலன்கள் அனைத்தையும் இரு கையும் நீட்டி வரவேற்க, இந்த நமது புதிய சுதந்தரம் சம்மதித்துள்ளது. உலகெங்கும் நாகரிக நாடுகளிலெல்லாம் நிலவிவரும் சீர்திருந்திய துரைத்தன முறைகளையே, நமது புதிய சுதந்தர ராஜ்யம் பின்பற்றும். அதே சமயத்தில், நாம் நமது புராதன ஆர்யாவர்த்தத்துக்கும் இடைக்கால ஹிந்துஸ்தானத்துக்கும் வார்சுகளே யாவோம். ஆகவே, அந்த ஆர்யாவர்த்தத்தின் - ஹிந்துஸ்தானத்தின் - தர்மசூத்திரங்களையும் ஆத்மிகச் செல்வத்தையும் நமது புதிய சுதந்தர ராஜ்யம் இருதயத்திலே கட்டியணைத்து கொள்

காப்பிரைட்: மாடர்ன் ரிவ்யூ (ஆகஸ்டு-செப்டம்பர் '47),
120/2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

ளும். சமயம், இனம், பாஷை இந்த எதிலும் உள்ள வித்தியாசம் காரணமாக எந்த ஒரு மனிதனை யோ கலையையோ தீண்டத்தகா தென நம் சுதந்தர இந்தியா ஒதுக்கித் தள்ளாது. ஆலவிருட்சம் போன்ற அதன் கிளைகள், தன்கீழ் வருவோர் அனைவருக்கும் நிழல் கொடுக்கும். புதிதாய் உதயமாகியிருக்கும் இந்தச் சுதந்தரத்தை நாம் எப்படி வரவேற்க வேண்டும்? ஐரோப்பிய நாடுகளைப் போல, கையிலே மதுவும், நாவிலே கீதமும், காலிலே நாட்டியமுமாய், ராணுவ அணிவகுப்புச் செய்து வரவேற்போமா? இல்லை; கூடாது.

இன்றைக் களியாட்டங்களுக்கெல்லாம் நடுவிலே, கடுமையான சோதனை ஒன்று நம் நாட்டுக்குக் காத்திருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. நமது வருங் காலம் களியாட்டமாடும் காலமல்ல; ஓய்வு கொள்ளும் காலமல்ல; உழைப்பைத் தளர்த்தும் காலமுமல்ல. நாம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தைவிட மிகப் பலமாக இன்றுதான் நம் தொண்டர் அனைவரையும் தேசம் இவ்வாறு அறைகூவியழைக்கிறது: "பூர்ணத் திறமை பெறுங்கள்; பூர்ணக் கட்டுப்பாடு கொள்ளுங்கள்; பூர்ண ஒற்றுமை அடையுங்கள். இல்லையானால், நீங்கள் அழிந்து போவீர்கள்; உங்களைக் காப்பாற்ற யாராலும் ஆகாது." மௌனமாக இருதயத்தினுள்ளே நாம் ஒரு விரதம் எடுத்துக்கொள்ளவேண்டிய நாள் இது: "என் வாழ்க்கையைப் புதிய பாதையிலே திருப்புவேன். நாட்டுக்காக வாழ்ந்து, நாட்டுக்காக உழைப்பேன். அதற்காக எவ்விதப் பரிசையும் எதிர்பார்க்க மாட்டேன். சொந்த நன்மையைக் கருதமாட்டேன்" என்பதே அந்த விரதம். இந்தியா முழுவதுமே இந்த விரதத்தை ஏற்க முன்வர வேண்டும்; இந்த உன்னத முயற்சியை முழுதும் நிறைவேற்ற வேண்டும். இல்லையானால், இந்தியா நாசமாய்ப் போய்விடும்.

சுதந்தரம் என்பது பிறன் தர வரும் பரிசு அல்ல என்பதை மறவாதீர்கள். அதைச் சம்பாதிக்க, விடா உழைப்பு வேண்டும்; அதைக் காப்பாற்ற நேரிய சிந்தனையும் ஓயாத தன்னலமற்ற தொண்டும் வேண்டும். சுதந்தரத்தின் விலை என்றும் கண் கொட்டாத விழிப்பாகும்.

---



—போரம்.

**இது என்ன சர்க்கஸ்?**

**அமெரிக்கா, ருஷ்யா என்று இரண்டு குதிரைகள். அதன் மேலே ஒரு கால், இதன் மேலே ஒரு கால் இப்படிச் சவாரி செய்கிறது ஐ. நா. ஸ்தாபனம். குதிரைகள் இரண்டும் குழி பறிப்பதிலேயே மும்முரமாயிருக்கின்றன.**

# கைதியின் பேட்டி

மூல ஆசிரியர் : முல்க்ராஜ் ஆனந்த்
மொழிபெயர்த்தவர்: கே. கணேஷ்

அன்று பரித்பூர் ஜெயிலில் கைதிகளின் பேட்டி நாள். ஆனால் சிறைத் தலைமை ஜெயிலரான கான் பகதூர் ஷேக் அப்துல்கான் மட்டுமிதமில்லாமல் சம்மானம் கேட்டதாலோ என்னவோ, மூன்றே மூன்று பேர்தாம் அன்று சிறைக் கைதிகளைப் பேட்டி காண வந்திருந்தார்கள். அவர்கள் மூவரும் இரும்புக் கிராதி போட்ட பெரிய ஜெயில் கேட்டுக்கு வெளியே காத்திருந்தார்கள்.

ஒருவன் கிழக் குடியானவன். அவன் தோளில் வைத்திருந்த கைத்தடியில் நிறைய மூட்டைகளும் முடிச்சுகளும் தொங்கின. இன்னொருத்தி ஓர் இளநங்கை. அவள் முக்காடிட்டிருந்த பட்டுச் சேலை பின்னுக்கு நழுவியதால் அவள் முகம் தெரிந்தது. அது சுபாவமாக அழகும் கவர்ச்சியும் நிறைந்த முகந்தான். அதில் சிந்தனையோ கவலையோ படிந்திருக்க நியாயமில்லை. இன்னும் அவள் கண்களில் இளமைக் குதூகலத்தின் சாயை கொஞ்சம் இருக்கத்தான் இருந்தது. இருந்தும் இப்பொழுது அந்த முகத்தில் கவலையும் சிந்தனையும் தேங்கியிருந்தன. அவளது முகச் சுளிப்பு இதை நன்கு காட்டிற்று. மூன்றாவது ஆசாமி நான்தான்.

வெயிலிலும் மழையிலும் அடிபட்டுப் பண்பட்ட கிழவன் அந்த முரட்டுக்குடியானவன். நம்நாட்டுப் பட்டணவாச நாகரிகத்தில் தோய்ந்து பழகியவளைப் போல் இருந்தாள், அந்தப் பெண். இத்தகைய நாரீமணிகள் உடுக்கும் சேலை கணத்துக்குக் கணம் மாறுவது போலவே இவர்களின் மனமும் கணத்துக்குக் கணம் மாறும். பொம்மைபோல் தங்களை அலங்கரித்துக்கொண்டு, ஒரு வேலையும் செய்யாமல், வாய் நிறைய எப்பொழுதும் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு, அடிக்கடி வேலைக்காரர்களைத் திட்டிக் கொண்டே பொழுது போக்குவதுதான் இந்த ஜாதிப் பெண்களின் இயல்பு. இந்த

**'கூலி', 'தீண்டாதான்' என்ற நாவல்களை ஆங்கிலத்தில் எழுதி, சர்வ தேசப் பிரசித்தி பெற்றவர் முல்க்ராஜ். பல நேர்த்தியான சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். பொது உடைமைப் பற்றுள்ளவர். இன்று ஆங்கிலத்தில் எழுதும் இந்தியக் கதாசிரியர்களில் ஆங்கிலேயரின் மதிப்பைப் பெற்ற மிகச் சிலருள் இவர் முதன்மையானவர்.**

**காப்பிரைட்: பார்பர்ஸ் டிரேட் யூனியன் (ஆங்கிலச் சிறுகதைகள்).**
**பிரசுரித்தவர்: ஜொனாத்தன் கேப், லண்டன்.**



இருவருக்கும் இருந்த வேற்றுமை எனக்கு வியப்பை அளித்தது.

நான் ஜெயிலுக்கு வரும்போது ஜில்லாக் கோர்ட்டுகளைக் கடந்துதான் வந்தேன். பெரிய உருவத்தோடு எலும்பெடுத்துக் காணப்பட்ட குடியானவர்களைச் சுற்றிச் சிறிய உருவத்தோடு கொழகொழவென்றிருந்த வக்கீல்கள் வட்டமிடுவதை அங்கே நான் கண்டேன். எனவே ஏழைகளைத் தாராளமாக வரவேற்கும் ஜெயிலில், இந்த ஏழைக் குடியானவனின் சொந்தக்காரன் யாராவது இருப்பது சகஜம். ஆனால், இப்படிப்பட்ட நாகரிக யுவதி ஒருத்தி இங்கே வந்திருந்ததுதான் எனக்குப் புரியவில்லை.

அஜித்குமார் ஸென் என்ற அரசியல் கைதியைப் பார்க்க நான் வந்திருந்தேன். வேறு சில அரசியல் கைதிகளோடு தேவலி பாதுகாப்புச் சிறையிலிருந்து இரண்டு வருஷத்துக்கு முன் அவன் இந்தச் சிறைக்கு மாற்றப்பட்டான். இன்னும் விசாரணை இல்லாமல் வாடிக்கொண்டிருக்கிறான். நான் பார்க்க வந்தது அரசியல் கைதியைத்தான். ஆனாலும் என்னவோ ஜெயில் என்று நினைக்கும் போதே குற்றவாளிகள், கொலைகாரர்களைப்பற்றிய நினைப்பும் வராமல் இருப்பதில்லை. அவர்களுக்கும் பட்டுச் சேலை உடுத்திய இந்தப் பாவைக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?

மேன்மை தங்கிய இந்திய அரசாங்கத்தின் விவகாரம் எதுவானாலும் மணிக்கணக்கில் காக்க வைப்பதுதான் உத்தியோகஸ்தர்களின் வழக்கம். இங்கேயும் பேட்டி கிடைக்கும்வரையில் - எவ்வளவு மணி நேரமானாலும் - காத்துத்தானே ஆகவேண்டும்? கீழே உட்கார்ந்தேன். என் மனத்தில் அந்தப் பெண்ணைப்பற்றி அறிய வேண்டுமென்ற ஆவல் இயற்கையாகவே எழுந்தது. கேட்டருகே ஒரு நீள மீசைக்காரன் துப்பாக்கி தாங்கிப் பாராக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் அடிக்கடி உரக்கக் கனைத்துத் தொண்டையைச் சரிசெய்து கொண்டான்; பாதங்களைத் தரையில் தட்டினான்; துப்பாக்கிக் கட்டையால் அடிக்கடி தரையைத் தட்டிச் சப்தம் செய்தான். அந்தப் பெண்ணின் கவனத்தைக் கவரவே அவன் இவ்வளவு சேஷ்டைகளும் செய்தான். இதை நான் கண்டுகொண்

டேன். அப்போது எனக்கு அவளைப் பற்றிய நினைப்பு இன்னும் அதிகமாயிற்று.

வெளிப்படையாக ஒரு ஸ்திரீயை நாடும் அளவுக்கு வேண்டிய துணிவு அந்தப் பாராக்காரனிடம் இல்லை. எனவே, "ஏ, இந்தப் பக்கந்தான் திரும்பிப் பாரேன்" என்று பாதி இருமலும் பாதி முணுமுணுப்புமாக அந்த முற்றாத விடன் வாயிலிருந்து வெளியே வந்த சத்தம் என் காதில் பட்டது.

அந்த மங்கை முட்டாக்கைச் சரிப்படுத்திக் கொண்டாள். கால் மாற்றி உட்கார்ந்தாள். சேலை முன்றானையால் முகத்தை விசிறிக் கொண்டாள். அவள் பார்வை தன் போக்கில் மறுபக்கம் மாறியது. பாராக்காரனின் சேஷ்டைகளை அவள் லட்சியம் செய்ததாகவே தெரியவில்லை.

ஜூலை மாதத்தில் சூரியன் தன் உச்சி நேர உக்கிரத்தைக் காட்டி ஆட்சி செய்துகொண்டிருந்தான். இந்த உக்கிரத்துக்கு உட்பட்ட நரகமான சிறையின் பாரா அந்தக் காவலனுடையது. இவ்வளவு நேரம் தடைப்பட்டிருந்த இந்த எரி நரகப் பாராவை மீண்டும் முனைந்து தொடங்குபவன் போல் வார்டர் அந்த மங்கையை விட்டு விலகிச் சில அடிகள் நடந்தான். உடனே திரும்பிப் பழைய இடத்துக்கே வந்து விட்டான். திரும்பியவன் ஏதோ வெட்டி முறித்தவனைப்போல் கொட்டாவி விட்டான். ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று வெளிவந்தது. முகத்தில் தோன்றிய ஏமாற்றத்தை மறைத்துத் தன் நீண்ட மீசைகளை அவன் முறுக்கி விட்டுக்கொண்டான்.

ஜில்லாக் கோர்ட்டுப் பக்கத்திலிருந்து சில புதுக் கைதிகள் சிறையை நோக்கி வந்துகொண்டிருந்தனர். அவர்களின் கைவிலங்குகளும், சங்கிலிகளும் உராயும் சப்தம் அவர்களுக்கு முன்னே வந்தது. ஆனால் இரும்புக் கேட்டுக்கு மறுபுறம் இருந்த ஹாலில் ஜெயிலர் வரப்போகிற அறிகுறி ஒன்றும் காணவில்லை. ஆகையால் நான் அந்த வார்டரின் சேஷ்டைகளில் கவனத்தைச் செலுத்தினேன்.

வார்டர் இழந்த கௌரவத்தைப் பெற முடியவில்லை. அந்தப் பெண்ணை நோக்கித் தான் செய்த சேஷ்டைகளை அந்தக் கிழக் குடியானவனும் நானும் பார்த்துவிட்டோமோ என்ற அவமானம் வேறு. தன் குற்றத்தை மறைக்கும் முயற்சியில் மிஸ் துலாரி பாடிய காதற் பாட்டு ஒன்றை முணுமுணுத்தான். "தலையணையை மாற்றினால் மன வேதனை தீர்ந்து விடுமா?" என்பதுதான் பாட்டு. அவன் கூச்சத்தோடேயே பாடினான். தனக்குச் சாரீரமில்லை என்பது அவனுக்கே தெரிந்திருக்க வேண்டும்.

பெரிய இரும்புக் கேட்டின் சிறிய திட்டிவாசலருகே ஓர் உயர்ந்த சாய்வு மேஜையின் பக்கத்தில் போட்டிருந்த உயரமான ஒரு முக்காலியில், தலைமை வார்டர் உட்கார்ந்திருந்தான். அவன் முகமெல்லாம் ஒரே அம்மைத் தழும்பாக இருந்தது. பெரிய வளையத்தில் கோத்த சாவிக்கொத்தொன்று அவனது இடது கையில் தொங்கியது. மேஜைமேல் இருந்த ரெஜிஸ்டரில் வலது கையால் என்னவோ எழுதிக் கொண்டிருந்தான்.

அந்தத் தலைமை வார்டரிடம் பாரா வார்டர் பேச்சுக் கொடுத்தான். அவனோடு பேசுவதற்காக அல்ல, மறைமுகமாக அந்த ஸ்திரீயின் கவனத்தைக் கவரவே இந்தப் பேச்சு: "அண்ணே! நாம் யாரைப்

புகழ்கிறோமோ அவர்கள் காதில் நம் புகழுரை விழுவதில்லையோ!'' என்றான் பாராக்காரன்.



இதைக் கேட்ட தலைமை வார்டரும் குறிப்பாகவே பதில் சொன்னான். "ஏது? என்ன விசேஷம், தம்பி? நம்ம ஜெயில்கூட இன்றைக்கு ஒரு கேளிக்கைக் கூடம் ஆகிவிட்டது போல் இருக்கிறதே! அடிவானத்தில் ரம்ஜான் பிறை உதித்துவிட்டாற் போல் இருக்கிறதே!'' என்றான் உரத்த குரலில். அவன் பேச்சு அந்த ஸ்திரீயையே சுட்டிய போதிலும், கைகள் மட்டும் அங்கே வந்துகொண்டிருந்த புதுக் கைதிகளைத்தான் சுட்டிக் காண்பித்தன.

இதற்குள் ஒரு சிறிய தூக்கம் போட்டு விழித்த விவசாயி, பாதி தனக்கும் பாதி என் காதுக்குமாக, "சிறையிலே அரசனாக இருப்பதைவிட ஒரு சுதந்தரக் குருவியாக இருப்பது எவ்வளவோ மேல்'' என்று முணுமுணுத்தான்.

தலைமை வார்டரின் அலட்சியமான பேச்சும் புதிதாய் வந்த கைதிகளின் விலங்கும் சங்கிலியும் உராயும் சப்தமும் வார்டரின் தைரியத்தைச் சற்று அதிகமாக்கின. தான் வெளிப்படையாக உரக்கவே காதற் பேச்சுக்கள் பேசினாலும் யாரும் தன்னைக் கவனிக்கமாட்டார்கள் என்று அவன் எண்ணிவிட்டான்.

"ஏ பிறையே, ஒரே ஒரு வார்த்தை சொல்லாயோ? நான் தாபத்தால் சாகிறேனே!'' என்றான் வெளிப்படையாகவே உரத்த குரலில்.

அந்த ஸ்திரீ என்னை நோக்கித் திரும்பி, "பேட்டி நமக்குச் சீக்கிரம் கிடைக்குமென்று எண்ணுகிறீர்களா?'' என்று கேட்டாள்.

நான் பதில் கூறுவதற்குள், 'நமக்கு ஓர் எதிரி வந்துவிட்டானடா!' என்ற ஒரு புதிய பாட்டை வார்டர் பாடத் தொடங்கினான்.

"பேட்டிக்குக் குறிப்பிட்ட நேரம் இரண்டரை மணி என்று ஞாபகம்'' என்றேன் நான்.

தன் கைக்கடிகாரத்தைப் பார்த்த அவள், "மணி மூன்றே முக்கால் ஆகிறதே!'' என்றாள்.

"ஒருகால் கான்பகதூர் லேசாக நித்திரை போகிறாரோ, என்னவோ?'' என்றேன் நான்.

கைகளை முழங்கால்களோடு சேர்த்துக் கட்டித் தன் முகத்தை அந்தக் கைகளுக்குள் சாய்த்திருந்தான் குடியானவக் கிழவன். பேட்டி நம்பிக்கையை முற்றும் இழந்த பாவனையில், இப்பொழுது மெதுவாகத் தலையைத் தூக்கி நெற்றி வேர்வையை வழித்துக் கொண்டே அவன், தனக்குத்தானே ஏதோ முணுமுணுத்துக்கொண்டான்.

இந்தச் சமயத்தில் தலைமை வார்டர் கேட்டின் திட்டி வாசல் கத

வைச் சாவிபோட்டுத் திறந்து இரும்புச் சட்டங்களைத் தள்ளி விலக்கி விட்டு, புதுக் கைதிகளுக்குக் காவலாக வந்த போலீஸ்காரனையும் கைதிகளையும் உள்ளே வரும்படி சைகை செய்தான். சிறைக்குள் மெதுவாகப் புகுந்து கொண்டிருந்த கைதிகளின் விலங்கும் சங்கிலியும் உராயும் சப்தம் மறுபடியும் கேட்கத் தொடங்கியது. கேட் கிராதிகளைக் கடந்து உள்ளே சென்ற இந்தக் கோஷ்டியார், தலைமை வார்டரின் மேஜையருகே போய் அமர்ந்தார்கள். குடியானவக் கிழவன் மறுபடியும் தூங்கிவழிந்தான். தன் 'காதலி' தன்னிடமிருந்து தப்பித்துக் கொள்ள என் துணையை நாடுவதை உணர்ந்த அந்த வார்டர் மறுபடியும் பாராக் கொடுக்கக் கிளம்பிவிட்டான்.

"அஜித் குமாரைப் பேட்டி காண்பதற்காக நான் பார்லிமெண்டரி காரியதரிசியிடமிருந்து ஸ்பெஷலாக ஒரு கடிதம் வாங்கிக் கொண்டு, உள்நாட்டு இலாக்கா மந்திரியைப் போய்ப் பார்த்தேன். பேட்டி அநுமதி பெறக் காலைப் பொழுது சரியாகிவிட்டது. பேட்டி கிடைப்பதற்குள் மாலைப் பொழுதும் கழிந்து விடும் போல் இருக்கிறதே!" என்று நான் சலிப்போடு கூறினேன்.

"நானும் அவரைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன்" என்று அந்தப் பெண் தன் அகன்ற கண்களில் ஒளி பொங்கச் சொன்னாள். அவள் முகத்திலே பெருமிதச் சிரிப்பு ஒன்று அரும்பியது. நாணத்தோடு தன் தலை முட்டாக்கைச் சரியாக இழுத்து விட்டுக்கொண்டாள்.

"என்ன தளுக்கு! எவ்வளவு கவர்ச்சி! இந்த அழகு ராணியை எப்படித்தான் வருணிப்பது!" என்று அந்த வார்டர் தூரத்தில் நின்றபடியே கிண்டல் செய்தான்.

குடியானவக்கிழவனின் கண்களைத் தூக்கம் ஆழ்த்தியபடியால், அவன் குறட்டை விடத் தொடங்கினான்.

ஹாலில் உட்கார்ந்திருந்த புதுக் கைதிகள் அலுப்பினால் கால் மாற்றி உட்கார்ந்த போது, விலங்கும் சங்கிலியும் உராயும் சப்தம் மறுபடியும் கேட்டது.

நான் அந்த ஸ்திரீயை ஒரு முறை பார்த்துவிட்டு, என் பார்வையை வேறு பக்கம் திருப்பினேன். எந்தப் பெண்ணும் போலீஸ்காரர்களின் கீழ்த்தரமான கேலிக்கு இலக்காகாமல் தப்ப முடியாது. இதை உணர்ந்ததும், இந்தப் பெண் என் துணை இல்லாமல் வந்தாள் என்பதை யோசிக்க யோசிக்க எனக்கு ஆச்சரியமே உண்டாயிற்று.

புதுக் கைதிகள் கணுக்கால்களின் மேல் சிறு சிறு துணிக் கிழிசல்களையும் வைக்கோலையும் வைத்துக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்களது கால்விலங்கில் ரிவெட் அடித்த வெளி ஓரத்தை நான் கவனித்தேன். விலங்குகள் விழிகளில் உராய்ந்து வலியெடுக்காமலும் காயமாகாமலும் தடுக்கவே அவர்கள் அப்படிக் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

"புத்தகங்களும் பத்திரிகைகளும் இப்போது அவர்களுக்குக் கிடைக்கின்றனவாமே; சம்மட்டியையும் அரிவாளையும் தன்மேல் கொண்ட சிவந்த நட்சத்திரம் போல் அமைந்த புஷ்பப் பாத்தி ஒன்றையும் தங்கள் சிறைக்கருகே அவர்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார்களாமே" என்றாள் அவள்.

"அவர்கள் அதிகார வர்க்கத்தின் கோபத்துக்குப் பயப்படுவதே இல்லையா?" என்று நான் கேட்டேன்.

கைதிக் கூட்டம் அளவு மீறி நெருங்கிக் கிடக்கும் பரித்பூர் சிறையில் புஷ்பப் பாத்தி அமைக்க அவர்

களுக்கு எப்படி இடம் கிடைத்தது என்று நான் ஆச்சரியப்பட்டேன்.

"அவர்களில் சிலரை ஐஸ் பாளங்களோடு சேர்த்துக்கட்டி உறைய வைத்துவிட்டார்களாம். இன்னும் பலவிதச் சித்திரவதையும்செய்கிறார்களாம்.." என்றாள் அவள்.

ஹாலுக்கு ஒரு பக்கத்தில் இருந்த காரியாலயத்தி விருந்து தலையை வெளியே நீட்டிய முன்ஷி தீனநாத் அவர்கள், "புதுக் கைதிகளை ஒவ்வொருவராக உள்ளே அனுப்பு" என்று கத்தினார். அவர் குடுமி தலை உச்சியில் லேசாக ஊசலாடியது.

அவர் மறுபடியும் ஆபீசுக்குள் மறைவதற்கு முன் அவரது கவனத்தைக் கவர நினைத்த நான், "தாரோகா ஸாஹிப்!" என்று கத்தினேன்.

"பேட்டிக்கு வந்தவர்கள் இன்னுமா காத்திருக்கிறார்கள்? அடேடே!" என்றார் அவர். இந்த விஷயமே அவருக்கு இப்பொழுதுதான் தெரிந்து மிகுந்த வருத்தம் தந்தது போலிருந்தது அவர் குரல்.

"இந்தப் பெரிய மனிதர்கள் இங்கே காத்திருக்கிறார்கள் என்று என்னிடம் ஏன் முன்னமே சொல்லவில்லை?" என்று தலைமை வார்டரிடம் கோபமாகச் சொல்லிக் கொண்டே, தம் அறையிலிருந்து அவர் வெளியே வந்தார்.

"பேட்டிக்குத் தயாராக அரசியல் கைதியை முன்னமே அழைத்து வந்துவிட்டேன். கைதி இதோ இந்தக் கதவுக்கு அப்பால்தான் முற்றத்தில் இருக்கிறார். எஜமானின் உத்தரவுக்காகத்தான் காத்திருந்தோம்" என்றான் அம்மை வடுமூஞ்சித் தலைமை வார்டர்.

"அப்படியானால் அவரை ஹாலுக்கு அழைத்து வாயேன். இதோ இந்த அறைக்கு அழைத்து வா. பத்திரிகை நிருபர் ஒருவரைக் காக்கவைத்தோம் என்று தெரிந்தால் மந்திரி ஐயா கோபித்துக் கொள்வார். இந்த அம்மாளும் விசேஷ அநுமதி பெற்றிருக்கிறார்கள்" என்றார் முன்ஷி தீனநாத்.

தலைமை வார்டர் சாவிக் கொத்தோடு, உள்ளே இருந்த மரக் கேட்டை நெருங்கிக் கதவைத் திறந்தான். அங்கே கைதிகளுக்குக் காவலிருந்த ஒரு வார்டரை நோக்கி, "சுல்தான், அந்த அரசியல் கைதியைக் கொண்டுவா" என்று கத்தினான்.

கைதியை ஹாலில் அநுமதிப்பதற்காகத் தலைமை வார்டர் திட்டி வாசல் கதவைத் திறந்தான்.

இவ்வளவு நேரமும் முடங்கி உட்கார்ந்திருந்த அந்த ஸ்திரீ சட்டென்று எழுந்து வெளிக் கேட்டின் இரும்புக் கிராதிகளை நோக்கிச் சென்றாள். சிறைக் கைதிகளின் விசித்திர உடையாகிய பனியனோடும் அரை நிஜாரோடும், கன்னம் ஒட்டிப்போய் நின்ற அஜித் குமாரின் மேல் அவள் பார்வை அப்படியே லயித்துவிட்டது.

கூனிக் குறுகி என் முன் நின்ற இந்தக் கைதியா, கட்டு மஸ்தான ஆரோக்கிய உடம்பு படைத்த அஜித்! முதலில் அடையாளமே புரியவில்லை. பிறகு சமாளித்துக்கொண்டு அவரை வரவேற்றேன். எங்களை உள்ளே அநுமதிப்பதற்காக வார்டர் கேட் கதவைத் திறந்தான்.

வாசலில் இருந்த சிறிய மரத்தின் நிழலிலே கவனிப்பாரற்று அமர்ந்திருந்த குடியானவக் கிழவனைத் திரும்பிப் பார்க்க விரும்பிய நான் அந்த ஸ்திரீ முதலில் உள்ளே செல்ல வழி விலகிக் கொடுத்து, சிறிது நேரம் அங்கேயே தாமதித்தேன்.

அவளோ அஜித்தைப் பார்த்தபடியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

"சரி சரி, உள்ளே வாருங்கள்" என்றார் தீனநாத். தலைமை வார்டர் நிமிர்ந்து நோக்கினன். வடுநிறைந்த அவன் முகமெங்கும் கண்ணைப் பார்ப்பது போல் இருந்தது. அந்தப் பார்வை எதையோ எதிர்பார்ப்பதுபோல் இருந்தாலும், முன்ஷிக்கு உரிய மரியாதையும் அதில் தென்பட்டது. இளைத்து எலும்பெடுத்திருந்த அஜித்தின் முகத்திலிருந்த தன் பார்வையை, அவள் உடனே மாற்றிக் கொண்டாள். பிறகு ஒரு மாதிரியாகக் குனிந்து கால்களை ஒவ்வொன்ருக உள்ளே இழுத்துக் கொண்டு திட்டி வாசலில் புகுந்த அவள் ஹாலை அடைந்து அன்னம்போல் அவனை நோக்கி விரைந்தாள்.

இரண்டு மூன்று அடி முன்னேறிய அவள், தன்னைச் சமாளித்துக் கொள்ள முயல்பவளைப் போலச் சட்டென்று நின்ருள். பிறகு சோம்பல் முறிப்பதுபோல் கைகளை நீட்டி மடக்கிவிட்டு, தலையை உயர்த்தி மறுபடியும் அஜித்தைப் பார்த்தாள். விரிந்து சுருங்கிய அவள் நாசிகளும் சிவந்து நெருப்பைப்போல் எரிந்த அவள் கன்னங்களுமே, அவள் முகம் உயிருள்ள முகம் என்பதைக் காட்டின. முகத்தின் மற்றப் பகுதிகளெல்லாம் வெண்கலச் சிலைபோல் அசைவற்றிருந்தன.

நானும் ஹாலுக்குள் புகுந்து அவளுக்குப் பின்னல் நின்றேன்.

அஜித் அசையாமல் அங்கே நின்றுகொண்டிருந்தார். அவர் அசிரத்தையாக நிற்பதுபோல் பட்டது. குழி விழுந்திருந்த அவருடைய கண்களின் வெள்ளை விழிகள் மட்டும் மங்கலாகப் பளபளத்தன. அவருடைய முகத்தை மூடியிருந்த சதை சுருங்கித் திரைத்திருந்தது. தாம் ஒரு கைதி என்ற பெருமிதத்தால், அவர் முகத்தில் ஓர் அமைதியும் திடமும் தென்பட்டன.

தம் ஆபீஸில் உள்ளவர்களைத் தூர விலகி நிற்கும்படி கட்டளையிட்டுக்கொண்டே பம்பரம்போல் சுற்றிச் சுற்றி வந்தார் உதவி ஜெயிலர்.

தலைமை வார்டர் புஸ்புஸ் என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு கைதிகளின் முகத்தையெல்லாம் பார்த்தான். கைதிகள் பக்கத்துக்கு ஒருவராக ஓடமாட்டார்களா என்று ஆசைப்படுவதுபோல் இருந்தது அவன் பார்வை.

"ஏ கிழவா, நீ யாரைப் பார்க்க வேண்டும்?" என்ருன் கேட்டுக்கு வெளியே இருந்த வார்டர். இப்பொழுதுதான் அவனது க்ஷேமததில் வார்டருக்குக் கருத்து வந்தது போலிருக்கிறது!

"அடேடே! என்ன கருணையப்பா!" என்ருன் குடியானவக் கிழவன்.

உதவி ஜெயிலரின் குளிர்ந்த அறையில் நாங்கள் நின்றுகொண்டிருந்தோம். "இந்தப் பெண்ணையும் அஜித்தையும் பிணைக்கும் பந்தம் என்னவாயிருக்குமோ? இவள் அவருக்கு என்ன உறவு? அவர் இவளுக்கு என்ன உறவு?" என்று நான் அதிசயித்துக்கொண்டிருந்தேன்.

என் அருகே நின்ற அவள் கண்கள் என்றும் மூடாத குருடர்களின் கண்களைப் போல மலர விழித்து, குருட்டு வாழ்வுபோல், இருண்ட சாவு போல், கண்ணிலாக் காதல் போல், அஜித்தைப் பார்த்தபடி நிலைத்து நின்றுவிட்டன.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.